ஸ்ரீநகர சபை, யாழ்ப்பாணம்

பக்கங்கள்: இருபத்தெட்டு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 மாசி 23 ஞாயிற்றுக்கிழமை (07.03.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 101

## இலங்கையில் போர்க்கால மனித உரிமை மீறல்கள்

# ஐ.நா.செயலருக்கு ஆலோசனை வழங்குவதற்கு நிபுணர்கள் குழு

## இதுகுறித்து ஜனாதிபதி மஹிந்தவுக்கு தெரிவிப்பு



ஜெனிவா, மார்ச் 7

இலங்கையில் போர்க் காலத்தின் போது மனித உரிமைகள் மீறப்பட்டதாகக் கூறப்படுவது குறித்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகத் தமக்கு ஆலோசனை வழங்குவதற்கென -

உயர் மட்ட நிபுணர்கள் குழு ஒன்றை நியமிக்க உள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ - மூன் அறிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை மாலையில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் நடத்திய தொலைபேசி உரையாடலில் அவருக்கு இதனைத் தெரியப்படுத்தினார். (28ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் யாழ்.நகரில் வியாழன் வெளியிடப்படும்

யாழ்ப்பாணம்,மார்ச்7

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் இன்னும் ஓரிரு தினங்களில் யாழ்ப்பாணத்தில் வைத்து வெளியிடப்படவுள்ளது.

பெரும்பாலும், எதிர்வரும் வியாழக்கிழமை செய்தியாளர் மாநாடு நடத்தி, அங்கு தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தமிழரசுக்

(28ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமை குறித்த விசாரணை எதுவும் அர்த்தமற்றதும் தேவையற்றதும் ஆகும்

### ஐ.நா. செயலாளருக்கு ஜனாதிபதி மஹிந்த பதில்



கொழும்பு,மார்ச்7

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் நடைபெற்றதாகக் கூறி அதற்கென ஐ.நாவின் உயர் மட்ட நிபுணர் குழுவை நியமிக்கும் ஐ.நா.செயலாளரின் முடிவு அர்த்தமற்றதும் தேவையற்றதும் ஆகும். இதுபோன்ற நடவடிக்கை முன்னர் எப்போதும் நடைபெறாததும் அதிகாரமளிக்கப்படாததுமாகும்.

இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான்கீ மூன் கடந்த வியாழக்கிழமை மாலை நடத்திய தொலைபேசி உரையாடலின் போது திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

(28ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியக் கடற்பகுதியில் 6மொத்தறை மீனவர்கள் கைது

சென்னை,மார்ச் 7

இந்தியக் கடல் எல்லைக்குள் ஊடுருவி மீன் பிடித்ததாகக் கூறப்படும் 6 இலங்கை மீனவர்களை இந்திய கடலோரப் பாதுகாப்புப் படையினர் கைதுசெய்துள்ளனர்.

மாத்தறைப் பகுதியைச் சேர்ந்த இந்த மீனவர்கள் விசைப்படகில் நாகபட்டினம் பகுதியில் மீன் பிடித்துக்கொண்டிருந்த போது கைது செய்யப்பட்டனர். அத்துடன்

(28ஆம் பக்கம் பார்க்க)

## போர்க்குற்ற விசாரணையை ஐ.நா. செயலாளர் தாமதிப்பதன் பின்னணியில் இந்தியாவும் சீனாவும்!

ஜெனிவா, மார்ச் 7

இலங்கையின் போர்குற்ற விசாரணை விவகாரத்தை ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் தாமதப்படுத்துவதற்கு இந்தியா, சீனா மற்றும் சில உறுப்பு நாடுகளின் அழுத்தமே காரணம் ஆகும்.

ஐ.நாவின் பிரெஞ்சு தூதுவர் ஜெராட் ஆரூட் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற போரில் இறுதிக்கட்டத்தில் நடைபெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல் தொடர்பான குற்றங்கள் குறித்த விசாரணைக்கான செயற்பாட்டை முன்னெடுப்பதில் பான் கீ மூன் தாமதம் காட்டுவதற்கு காரணம் ஐ.நாவின் உறுப்பு நாடுகளேயாகும் - இது விடயத்தில் முதலில் இந்தியாவும் பின்னர் சீனாவும் ஐ.நா. செயலருக்கு அழுத்தம் கொடுத்துள்ளன என்று அவர் மேலும் கூறினார்.

அதேவேளை -

அடுத்தவாரம் இந்தியாவுக்கும் நேபாளத்துக்கும் விஜயம் மேற்கொள்ளும் ஐ.நா.

(28ஆம் பக்கம் பார்க்க)

## மீள்குடியேற்றத்திற்கு மேலும் உதவிகள் வழங்குமாறு இலங்கை விடுத்த கோரிக்கையை ஆராய்கின்றோம்

### இந்திய வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணா தகவல்

புதுடில்லி,மார்ச்7

இலங்கையில் இடம் பெயர்ந்தவர்களை மீள்குடியேற்றம் செய்வதற்கு மேலும் உதவிகளை இலங்கை அரசாங்கம் கோரியுள்ளது. எவ்வளவு உதவியை மேலும் வழங்கலாம் என்பது குறித்து ஆராய்ந்து கொண்டிருக்கின்றோம்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இடம்பெயர்ந்த மக்களின் வீடுகளை புனரமைக்க கட்டடப் பொருள்கள் வழங்குமாறு இலங்கை எம்மிடம் கோரியுள்ளது. இந்தியா ஒரு எல்லைவரை உதவிகளை வழங்கியுள்ளது. தற்போது கோரப்பட்டுள்ள உதவிகளை எவ்வளவு வழங்கலாம் என்று ஆராய்ந்து வருகிறோம்.

(28ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரனின் தாயார் நேற்று வெளிநாட்டுக்கு பயணமானார்

கொழும்பு,மார்ச்7

விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் தாயார் பார்வதி வேலுப்பிள்ளை வெளிநாட்டுக் நேற்று பயணமானார்.

பனாகொடை இராணுவ முகாமில் அவரது கணவனுடன் இவர் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். கணவர் வேலுப்பிள்ளை மரணமானதை அடுத்து அவர் இறுதிக்கிரியைகளுக்காக வல்வெட்டித்துறைக்கு

(28ஆம் பக்கம் பார்க்க)




இலங்கையின் முதற் தர SINGER தொலைக்காட்சிகள்

தற்போது விசேட சலுகைகளுடன் யாழ் மக்களுக்காக

www.singersl.com

எந்த மாதிரியிலுமாலான உங்கள் பழைய தொலைக்காட்சிக்கு விலைக்கழிவுடன் புத்தம் புதிய தொலைக்காட்சி

விசேட விலைக்கழிவு

நீடித்த உத்தரவாதம்

கிளைகள்: யாழ்ப்பாணம் | நெல்லியடி | சுன்னாகம் | சாவகச்சேரி மானிப்பாய்

SINGER Plus

MORE BRANDS-MORE CHOICE

யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்






நீண்ட காலம் நீடித்துழைக்கும் சீமெந்து

- போசலானா சீமெந்து உறுதி மக்கது, நீண்டகாலம் நீடித்துழைக்கும்.
- இலங்கையில் SLS 1247 தரத்துடன் உற்பத்தி செய்யப்படும் ஒரே சீமெந்து டோக்யோ சுப்பர் போசலானா மட்டுமே.
- சதுப்பு நிலங்கள், கடற்கரை ஓரங்கள், கடல் சார்ந்த கட்டுமானப் பணிகள், அணைக்கட்டுக்கள், கால்வாய்கள் மற்றும் பாரிய கொங்கிறீட் வேலைகளுக்கு மிகவும் ஏற்றது.




டோக்யோ சுப்பர் போசலானா - நீண்டகாலம் நிலைத்திருக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




CIMA
Chartered Institute of Management Accountants

FREE Orientation Programme and Seminar for Students

CIMA பாடநெறி பற்றிய இலவச அறிமுக விளக்க உரை

கொழும்பில் பல வருட காலமாக CIMA பாடநெறி வகுப்புக்களை நடத்திவரும் பிரபலமான ICBS நிறுவனத்தின் பணிப்பாளரும், தேர்ச்சியும், அனுபவமும் மிக்க CIMA விரிவுரையாளர் திரு. சிவபாஸ்கரன் வழங்கும் விளக்க உரை.

மார்ச் மாதம் 8 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணி

இடம்: SPECTRA SCHOOL OF BUSINESS.
19, Stanly Road (People's Bank Lane), Jaffna.
Tel: 021 222 1422
Email: jaffna @ spectraskills.com

## Gateway Language and ICT Center, Jaffna

*John Keels Holding*
*"English for Life"*

ஆங்கில கற்கை நெறிக்கான இறுதிப்பரீட்சை இன்று (07.03.2010) காலை 9 மணிக்கு பயிற்சி நிலைய மண்டபத்தில் நடைபெறும். சகல மாணவர்களும் தவறாது கலந்து கொள்ளவும்.

முகாமையாளர்.


# மரண அறிவித்தல்கள்

## கதிரவேலு டேவிற்



ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு டேவிற் 04.03.2010 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், டேவிற் மகாராணியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற மாணிக்கம் மற்றும் செல்லாச்சி தம்பதியரின் பாசமிகு மருமகனும்,காலஞ்சென்ற அன்ரன் மற்றும் அருளம்மாவின் அன்புச் சகோதரனும்,காலஞ்சென்ற பூபாலசிங்கம் மற்றும் துரைராஜசிங்கம், புஸ்பராணி (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும்,ஞானசேகரத்தின் (துரை-சுவிஸ்) சகலனும், பிரபாத் (சுவிஸ்), பிரசாத், சுதாத், வசந், கஜிந் ஆகியோரின் பாசமிகு தந்தையும், அயக்கிறீபனின் (சுஜீத்) வளர்ப்புத்தந்தையும் சுதர்சினி (கொழும்பு), விஜேந்தினி ஆகியோரின் பாசமிகு மாமனும், ரஜனிகாந் (சுவிஸ்), கஜனி (சுவிஸ்) ஆகியோரின் பெரியதந்தையும், கஜினா (கொழும்பு), ரக்ஷியா (சுவிஸ்) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.03.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9மணியளவில் 115/9,கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரிகைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

115/9,கச்சேரி கிழக்கு ஒழுங்கை, கச்சேரி,
யாழ்ப்பாணம்.
(95504)
தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## திருமதி சாந்தா சற்குணராசா



மந்துவில் மேற்கு, கொடிகாமத்தை பிறப்பிடமாகவும், கண்டி வீதி, வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாந்தா சற்குணராசா அவர்கள் இந்தியாவில் 05.03. 2010 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு- சரஸ்வதி தம்பதியினரின் மகளும்,கணபதிப்பிள்ளை- முத்துப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும், சற்குணராசாவின் (உரிமையாளர், குணம் மோட்டோர்ஸ், வவுனியா) அன்பு மனைவியும், Dr.நித்தியா (அவுஸ்திரேலியா), நிவேதா (செலான் வங்கி, வவுனியா), நிசாந்தன் (மொறட்டுவப் பல்கலைக்கழகம்), நிடோசனா ஆகியோரது அருமைத் தாயாரும், அநபாயனின் (பொறியியலாளர், அவுஸ்திரேலியா) அன்பு மாமியும், ஜெகநாதன், காலஞ்சென்ற ரகுநாதன் மற்றும் யோகநாதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், புஸ்பமலர், நாகேஸ்வரி, சோதிமலர், மங்கயர்க்கரசி, மல்லிகாதேவி, அருந்தவராஜா (ஐங்கரன் மில், வவுனியா), இராஜேஸ்வரி, சற்குணேஸ்வரி, செல்வராசா (கொலண்ட்), தேவராஜா (கனடா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (08.03.2010) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் வவுனியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குணம் மோட்டோர்ஸ்,*
*கண்டி வீதி, வவுனியா.*
*தொ.பே.இல: 0242222028* (C/565547)
தகவல்:
குடும்பத்தினர்.


## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் சிறிய குடும்பம் ஒன்றிற்கு சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு: 0772567588 (C/565546)

## விற்பனையாளர் தேவை

பெண் காசாளர், விற்பனையாளர் தேவை.
குறைந்தது (க.பொ.த. சா.த சித்தி)
குறிப்பு: கிராம சேவையாளர் நற்சான்று பத்திரத்துடன் சமுகமளிக்கவும். 09.03.2010 ஆம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும்
தொடர்பு : சண்ஜெ புத்தகநிலையம்
கொக்குவில் மத்தி,
தொ.பே:0215106445, 0773864077

## வேலை ஆள் தேவை

யாழ்ப்பாண விடுதி ஒன்றுக்கு ஓய்வுபெற்றவரும் மும்மொழிகளும் தெரிந்தவரும் விரும்பத்தக்கது.
09.03.2010 முன் தொடர்புகொள்ளவும்.
தொடர்பு : சண்ஜெ புத்தக நிலையம்.
கொக்குவில் மத்தி
தொ.பே: 021 5106445, 077 3864077

## வாடகைக்குத் தேவை

உத்தியோகத்தர்கள் இருவர் தங்குவதற்கு வீடு அல்லது குளியலறைவசதி கொண்ட அறை காற்றோட்டமான சூழலில் வாடகைக்கு வேண்டும்.
தொடர்பு: 0213008466, 071856570

## காணி விற்பனைக்கு

நவாலி தெற்கில் பாதையோரமாக கிணறு அடங்கிய 5½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0779676128

## விற்பனைக்கு

இனம் பெருக்கக்கூடிய மீன்கள், மீன் தொட்டிகள், குருவிக் கூடுகள், பெயர்ப்பலகைகள், மர அலுமாரிகள் மற்றும் கட்டில், சுப்பகப் மோட்டார் சைக்கிளும் விற்பனைக்குண்டு.
இல.69, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 0779672599, 021 490 1632

## கிறீன்பேள் இன்ஸ்ரியூட்

நாவலர் றோட், யாழ்ப்பாணம். மனோகராத்தியேட்டர் அருகில்

GROUP CLASSES

2009A/L பௌதிகவியல்
கடந்த கால வினா விடைகள் (79-2009)
By:
ஆறுமுகம் நித்தியானந்தன்
(B.Sc. Dip.in.Ed.)
ஆரம்பம் 10.03.2010 புதன் பி.ப. 5 மணி
A/L இரசாயனவியல் - J.J. கொலின்ஸ் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
தொடர்புகளுக்கு: 0776381371

## STR COMPUTER SYSTEM

384, Navalar Road, Nallur, Jaffna.
Tel: 021-2224459, 021-4590775
0774192275. Fax : 021-2224460

COMPUTER CLASSES

Diploma in Hardware Technology
Computer Assembling, Maintenance, Repairing, Software Installation, Internet Connection
என்பன ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும்
(Only 20 Classes, Course Fees 3000.00)
*10 STUDENTS IN A BATCH*
(தொழில் புரிபவர்களுக்கான விஷேட நேர


# ஓராண்டு நினைவலைகள்



வேலணை கிழக்கு 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த
அமரர் கணபதிப்பிள்ளை பொன்னையா

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 17★04★1930 | 16★02★2009 |

எங்கள் இதய தெய்வமே!
தன் அடியை இருட்டாக்கி
ஒளியை பரவவிடும் விளக்கைப் போல
உங்களை இருட்டாக்கி
எங்கள் வாழ்வை ஒளிரவிட்ட
எங்கள் தெய்வமே!
ஓராண்டு கடந்தாலும் என்ன
இன்னும் ஓராயிரம் ஆண்டுகள் கடந்தாலும்
எங்கள் எண்ணங்களில் என்றென்றும் ஒளி விடுவீர்கள்
இதயத்தைக் குருடாக்கி
இன்பத்தை மலடாக்கி
எல்லாம் வல்ல வேலணை பெருங்குளம்
முத்துமாரி அம்மன் திருவருள் பெற
இறைஞ்சுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மகாமாரி குளிரகம்,
வங்களாவாடி சந்தி, வேலணை 05.
(95563)
உங்கள் பாசப்பிரிவால் வாடும்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்கள்

## கந்தையினார் சிவகோசரியார் (சிவாஜி)

(உதவிக் கல்விப்பணிப்பாளர் - உடற்கல்வி)



கல்வயலைப் பிறப்பிடமாகவும், கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையினார் சிவகோசரியார் 04.03.2010 வியாழக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் கந்தையினார்-இராசமணி தம்பதியினரின் அன்பு மகனும், சிவகோசரியார் சிவாணியின் அன்புக் கணவரும், கணேசமூர்த்தி-சிவயோகம் தம்பதியினரின் பாசமிகு மருமகனும், அச்சுதன் (யாழ்.பல்கலைக்கழகம்), சுரேன் (ICBT CAMPUS - COLOMBO), கபிலா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 05.03.2010 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் வேவில் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிவபுரம்,*
*பருத்தித்துறை வீதி, கொடிகாமம்.*
(C/565553)
தகவல்:
குடும்பத்தினர்.

## திருச்சிற்றம்பலம் நகுலாம்பிகை



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாக்வும் தற்போது கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் திருச்சிற்றம்பலத்தின் துணைவியார் நகுலாம்பிகை 05.03.2010 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் பாலச்சந்திரா, நவரத்தினம் (அதிபர், யா/விசாலாட்சி வித்தியாசாலை), தங்கராணி (கனடா), யோகரத்தினம் (இந்தியா), ஆகியோரின் பாசமிகு தாயாரும் திருமதி பாலச்சந்திரா கமலாதேவி (ஆசிரியர், யா/கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாலயம்), திருமதி நவரத்தினம் சிவகாமி (ஆசிரியர், தந்தை செல்வா தொடக்க நிலைப் பள்ளி, தெல்லிப்பழை), செல்லையாப்பிள்ளை (ஓமான்), வத்சலா (இந்தியா) ஆகியோரின் மாமியாரும், ஜெயப்பிரதா திருமாறன், திவ்யராஜ், ருமேஷ்குமார், ரவிஷங்கரன், திருமதி குழகன் தக்ஷாயினி, கங்காசுதன், தட்ஷினி, ருஷாங்கன், சங்கீதன் ஆகியோரின் பாட்டியும், சயூரியின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (06.03.2010) சனிக்கிழமை நடைபெற்று பூதவுடல் கோப்பாய் கந்தன் காடு மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோப்பாய் மத்தி,*
*கோப்பாய்.*
(95571)
தகவல்:
பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மை மனோநிலையில் பெரும்பான்மை இனம்!

ஆசியாவின் அழகிய தீவுகளில் ஒன்றான சிறிலங்கா வின் உள்நாட்டுப் போரில் 80,000 மக்களின் சாவுக்குக் காரணமாக இருந்தது இனப் பகை, வன்முறை மற்றும் முட்டாள்தனமான தேசப்பற்று வெறி என்பனவாகும்.

அவற்றின் கடைசிப் பொறியையும் அணைத்து விடுவதற்கு இப்போது கிடைத்துள்ளது போன்ற ஒரு சந்தர்ப்பம், அந்த நாட்டின் 62 வருட கால சுதந்திரத்தில் எப்போதுமே கிடைத்ததில்லை.

விடுதலைப் புலிகளின் தோல்வியைத் தொடர்ந்து சிங்கள வெற்றி எக்களிப்பு அலையால் கடந்த தை மாதத்தில் மீண்டும் தெரிவு செய்யப்பட்டார் ஒரு குடியரசு ஜனாதிபதி.

அவர் தன்னிச்சைப்படி நடப்பது மேலும் மேலும் அதிகரித்தால், மொத்த சிறிலங்கா மக்களுக்கும் துன்பத்தைத் தரக்கூடிய வகையில் - இந்த அருமையான சந்தர்ப்பம் வீணே கடந்து செல்ல உறுதியாக அனுமதிக்கப்படும்.

இத்தகைய செயல், தமிழ் மற்றும் சிங்கள மக்கள் இடையிலான நிலையான அமைதியை மட்டும் ஆட்டம் காண வைக்காமல், நாட்டின் பல கட்சி மக்களாட்சி முறைக்கும் பாதிப்பை ஏற்படுத்தும்.

இவ்வாறு எழுதியுள்ளார் அமெரிக்காவின் மிகப் பழமை வாய்ந்த The Nation ஏட்டின் ஐ. நா. வுக்கான செய்தியாளரும், Newyork Times ஏட்டின் ஐ.நா.வுக்கான ஆசியச் செய்திப்பிரிவின் முன்னாள் தலைமையாளருமான, Barbara crossette.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இந்தியாவின் கரையோரத்தில் ஒப்பீட்டளவில் சிறியதான, 21.3 மில்லியன் மக்களைக் கொண்ட சிறிலங்காத் தீவு வேறு எங்கும் இல்லாதவாறு முறையற்ற அரசாட்சி ஒன்றுக்குள் ஏன் விழுந்தது?

இது, சிம்பாப்வே அல்லது பொஸ்னியா அல்லது ஹெய்டி அல்ல. இதுவரைக்கும் அப்படி இல்லை. ஆனால், காலனித்துவத்திற்குப் பின்னான உலகின் வீழ்ச்சிகளில் புதியதொரு உதாரணம் இது. கென்யா மற்றொரு உதாரணம். இது ஒரு குறிப்பிடத் தக்க பயனுள்ள படிப்பினை.

மனித மேம்பாட்டு நடவடிக்கைப்படி தெற்காசியவிலேயே மிகவும் வளர்ச்சி அடைந்த நாடுகளில் ஒன்று சிறிலங்கா. அதன் அயல் நாடுகளான பாகிஸ்தான், இந்தியா, பங்களாதேஷ், நேபாளம் போன்றவற்றிலும் பார்க்க படிப்பறிவு, கல்வி மட்டம் மற்றும் சமூக சேவை ஆகியவற்றில் இன்னும் அது உயரத்திலேயே இருக்கிறது.

அந்த நாட்டுக்கு வெளியிலிருந்து எதிரிகள் யாரும் கிடையாது. பெண்கள் தசாப்தங்களாக உயர் பதவிகளை வகித்து வருகிறார்கள். உயிர்ப்புடனான ஊடகத்துறை அங்கு இருக்கிறது. இரு கட்சி ஆட்சி முறைமை இருக்கிறது. மதிப்பு மிக்க குடும்பங்களில் இருந்து வருபவர்களே அக் கட்சிகளில் ஆதிக்கம் செலுத்துகிறார்கள்.

இப்போது, பத்திரிகையாளர்கள் அச்சத்தில் வாழ்கிறார்கள், கொல்லப்பட்டுள்ளார்கள், காணாமல் போயுள்ளார்கள் அல்லது தப்பி வெளியேறி விட்டார்கள். நிலைமைகளை மேலும் அச்சுறுத்தக் கூடிய வகையில் தன்னையே தகவல்துறை அமைச்சராக குடியரசு ஜனாதிபதி பெயரிட்டுக் கொண்டுள்ளார்.

தற்போதைய குடியரசு ஜனாதிபதிக்கு தேர்தலில் சவால் விட்ட எதிர்க் கட்சிகளின் ஒன்றிணைந்த வேட்பாளர் இப்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவர் மீது இதுவரை எந்த அடிப்படைக் குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்படவில்லை.

தமிழர்கள் மிகப் பெரிய அளவில் எதிர்க் கட்சி வேட்பாளருக்கு வாக்களித்தார்கள். இப்போது அதற்கான எதிர்வினையை எண்ணி அச்சத்துடன் காத்திருக்கிறார்கள்.

கடந்த வருடத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பு தோற்கடிக்கப்பட்டதற்கும் அதன் தலைவர் வேலுப் பிள்ளை பிரபாகரன் கொல்லப்பட்டதற்குமான அனைத்துப் பெருமைகளும் தனக்கே சேர வேண்டும் என்று குடியரசு அதிபர் மஹிந்த ராஜபக்ஷ விரும்புகிறார்.

நாட்டை மீண்டும் பாதுகாப்பானதாக மாற்றிய தலைவருக்கு, மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்ட சிங்கள மக்கள் வாக்குகளைப் பரிசளித்ததன் மூலம், தனது எதிராளியும் போர்த் தளபதியுமான சரத் பொன்சேகாவை தீர்க்கமாகத் தோற்கடித்தார் ராஜபக்ஷ.

புலிகள் படை பெரும் ஆயுத இயக்கமாக இருந்தது எனினும் சிறிலங்காவிற்கு வெளியே எப்போதுமே அனுதாபத்தைப் பெற்றிருக்கவில்லை. புலிகளின் பிடிக்குள் சிக்கிக் கொண்டிருந்த தமிழர்கள் மற்றும் தமிழ் பேசும் முஸ்லிம்களில் பெரும்பாலானவர்கள் சண்டையும் அடக்குமுறைகளும் முடிவுக்கு வந்துள்ளதை வரவேற்கிறார்கள்.

தமிழில் : சி.ரேணுப்பிரியா

போருக்கு ஆதரவளிப்பதற்காக பணம் கொடுக்குமாறு தாங்கள் கட்டாயப்படுத்தப்பட்டார்கள் என்று வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் கூறுகிறார்கள். அது இப்போதும் தொடருகின்றது.

வெளிநாட்டுத் தமிழர் மத்தியில் புலிகள் செய்த பரப்புரைகளில் சொல்லப்பட்ட கருத்தாக்கங்களில் ஓரளவிற்கு மேல் எப்போதுமே உண்மைகள் இருந்ததில்லை.

சிறிலங்காவின் வடக்கிலும், மத்திய மலைநாட்டுத் தேயிலைத் தோட்டங்களிலும் வாழும் - போராளிகளுடன் ஒருபோதும் இணைந்திராத - தமிழர்களுக்கு கூட, தமது அரசியல் உரிமைகள் தொடர்பாக மோசமான மனக்குறைகள் இருந்தன. அவை இன்னமும் இருக்கின்றன.

தமிழர்களின் உயர்வான கல்வி நிலை மற்றும் மொழித் திறன் காரணமாக பிரித்தானிய காலனித்துவ அதிகாரிகள் அவர்கள் பால் காட்டிய ஆதரவு, சிங்களவர்கள் மத்தியில் தமிழர்கள் தொடர்பான ஆத்திரத்தை கிளப்பி விட்டது.

1956இல் அப்போதைய பிரதமர் சொலமன் பண்டார நாயக்கா, தேசப்பற்று வெறிக் கொள்கையைப் பற்றிப் பிடித்தார். அது சிங்களத்தை மட்டுமே தேசிய மொழியாக்கியதுடன் சிங்களப் பெரும்பான்மையினரின் பௌத்த மதத்துக்கும் முன்னுரிமை கொடுத்தது.



அந்த விடயத்தில் பிரதமர் போதிய அளவிற்குச் செயற்படவில்லை என்று கருதியே ஆத்திரம் கொண்ட பிக்கு ஒருவரால் மூன்று வருடங்கள் கழித்து பண்டார நாயக்க படுகொலை செய்யப்பட்டார். அந்த அளவுக்கு அங்கு சிங்கள இனவெறி தலைதூக்கி இருந்தது.

தொடர்ந்து வந்த ஆண்டுகளில் தமிழ்ச் சமூகத்தினர் தாக்கப்பட்டனர்; நூற்றுக் கணக்கானோர் கொல்லப்பட்டனர்; அவர்களது சொத்துக்கள் அழிக்கப்பட்டன. அதனால் தாங்கள் ஒதுக்கப்பட்டதான ஒரு உணர்வு தமிழர்கள் மத்தியில் பெருமளவில் பரவ ஆரம்பித்தது; அது தொடர்ந்தது; விடுதலைப் புலிகள் இயக்கம் அழிக்கப்பட்டுவிட்ட போதும் - தாம் அடக்கப்படுவதான தமிழரின் உணர்வு இன்னமும் அப்படியேதான் இருக்கின்றது.

இத்தகைய பின்னணியில், நிலையான அமைதியை ஏற்படுத்த வேண்டுமானால், வெற்றி மிதப்பில் இருக்கும் சிங்கள அரசு தமிழர்களை நோக்கிப் பெருந்தன்மையுடன் தனது கரங்களை நீட்ட இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே எதிர்பார்ப்பு.

தமிழர்களின் கலாசார மற்றும் வரலாற்று தலைநகரான யாழ்ப்பாணம் சிறிலங்காப் படைகளால் வரன்முறைகளற்று சேதமாக்கப்பட்டுள்ளது. அதனைப் பொருளாதார ரீதியில் மீளக்கட்டி எழுப்புவதுடன், அங்கு வாழும் மக்களின் உள உறுதியையும் பலப்படுத்த வேண்டியுள்ளது.

போரின் பின்னர் கடந்த இளவேனில் காலத்தில் உருவாக்கப்பட்ட, அடிப்படை வசதிகளற்ற தடுப்பு முகாம்களில் இருந்து வெளியேறிய தமிழ்க் குடும்பங்கள், பல மாதங்கள் கடந்து விட்ட போதும் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவதில் பெரும் சிக்கல்களை எதிர்கொள்கின்றன.

உலக வங்கியும் ஐக்கிய நாடுகள் சபையும் உதவிகளை வழங்குகின்றன. எனினும் அவை எப்போதாவது தான் கிடைக்கின்றன. இது ஏற்றுக் கொள்வதற்குக் கசப்பானதாக இருக்கின்றது எனச் சொல்கிறார்கள் சில அனைத்துலக உதவிக் குழுக்களின் பணியாளர்கள்.

வெளி உலகு தமக்கு எதிராகவே செயற்படுகின்றது என்று சிங்களவர்கள் ஆதாரங்களுடன் நம்புகின்றார்கள். சிறிலங்கா எழுத்தாளர் ஒருவர் இதனை சிறுபான்மைத் தாழ்வு மனப்பான்மையுடனான ஒரு பெரும்பான்மை இனம் என என்னிடம் வர்ணித்தார். ***

நன்றி: 'புதினப்பலகை' இணையம்

# பொதுத் தேர்தலின் பின்னர் தேசிய அரசு அமையும் வாய்ப்பு?



இலங்கையில் பொதுத்தேர்தலுக்குப் பின்னர், தேசிய அரசு ஒன்று உருவாக்கப்படும் என அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதன்படி எதிர்க்கட்சியும் ஆளும் கட்சியும் இணைந்து ஆட்சி அமைக்கும் எனக் கூறப்படுகிறது.

எனவே பொதுத்தேர்தலில் வெற்றி பெற்றாலும், தோல்வி கண்டாலும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே பிரதமராகத் தெரிவு செய்யப்படுவார். இதன் அடிப்படையிலேயே அண்மையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக் கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்றதாக கூறப்புடுகிறது.

சரத் பொன்சேகா சுதந்திரமாகச் செயற்படும் பட்சத்தில், ரணில் விக்கிரமசிங்கவின், எதிர்கட்சிகளின் பிரதான தலைவர் என்ற அந்தஸ்துக்கு பங்கம் ஏற்படும் வகையில் அமையும்.

சரத் பொன்சேகா குறுங்காலத்தில் பெற்ற பிரசித்தத்தின் அடிப்படையில், எதிர்கட்சிகளின் பல உறுப்பினர்கள் அவருக்கு ஆதரவாக செயற்பட முன்வந்துள்ளமையே இதற்கு காரணம் எனவும் கூறப்படுகிறது.

எனினும் சரத் பொன்சேகாவைத் தமது கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள அண்மைக்காலமாக ரணில் விக்கிரமசிங்க முயற்சி மேற்கொண்டமையும் இங்கு சுட்டிக் காட்டப்பட வேண்டிய விடயம்.

எனவே சரத் பொன்சேகாவை விடுவிப்பது தொடர்பிலோ, அல்லது தடுத்து வைக்கும் அடிப்படையிலோ ரணில் விக்கிரமசிங்க அதீத அக்கறை காட்டிக் கொள்வ[illegible]ல்லை. இந்த நிலையில் அண்மையில் ஜனாதிபதியு[illegible]ன் மேற்கொள்ளப்பட்ட சந்திப்பின் போது, சரத் பொ[illegible]சேகா விடுவிக்கப்படுவதற்கு, ஜனாதிபதியா[illegible]தசிய அரசாங்கம் நிபந்தனையாக முன்வைக்[illegible]ட்டதாக தகவல்கள் கசிந்துள்ளன. இதற்கு ரணில் விக்கிரமசிங்க ஒப்புதல் தெரிவித்துள்ளார் எனவும் கூறப்படுகிறது.



எனினும் சரத் பொன்சேகாவை விடுவிக்கும் வகையில் ரணில் விக்கிரமசிங்க செயல்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில், ரணில் விக்கிரமசிங்கவை பொதுத் தேர்தலை நடத்தாது, பிரதமராக நியமிப்பது தொடர்பில் ஜனாதிபதி தீர்மானித்திருந்தார் எனவும், எனினும் பொதுத் தேர்தலை நடத்தியதன் பின்னர் இதனை மேற்கொள்ளுமாறு ரணில் விக்கிரமசிங்க கூறினார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாகவே நாடாளுமன்றத்தின் இறுதி கூட்டம் நடத்தப்பட்டதன் பின்னரும், அது கலைக்கப்படாமல், பிறிதொரு நாளில் கலைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசின் முழுமையான நோக்கம், மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்று, புதிய அரசியல் யாப்பினை உருவாக்குவதாகவே காணப்படுகிறது. எதிர்கால வரலாற்றின் எந்த இடத்திலும் தமது பெயர் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலேயே, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த யாப்புச் சீர்த்திருத்தத்தையும் மேற்கொள்கிறார்.



இதன் அடிப்படையிலேயே அவரது உருவம் பொறிக்கப்பட்ட 1000 ரூபா நாணயத் தாளும் வெளியிடப்பட்டிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

அத்துடன் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற ஹம்பாந்தோட்டை துறைமுகம் உள்ளிட்ட பல திட்டங்களுக்கு மஹிந்த ராஜபக்ஷவின் பெயரைச் சூட்டும் முயற்சியும் காணப்படுகிறது.

இந்த நிலையில், நிலையான ஆட்சிக்காகவும், தமது நோக்கமான யாப்பு சீர்திருத்தத்துக்காகவும், மஹிந்த ராஜபக்ஷ இந்தத் தேசிய அரசாங்க கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இதற்கிடையில் தேசிய அரசாங்கத்தில் முழுமையான நம்பிக்கை இல்லாத ரணில் விக்கிரமசிங்க, தேர்தலின் பின்னர் ஒருவேளை ஐக்கிய தேசிய கட்சி வெற்றி பெறுமாக இருந்தால், தேசிய அரசாங்கத்தை நிராகரிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் அடிப்படையிலேயே அவர் பொதுத்தேர்தலுக்கு முன்னுரிமை வழங்கினார் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.*********

நன்றி - 'தமிழ்வின்' இணையம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை உப அதிபர் செல்வி. திலகவதி இராமசாமி அவர்களின் அன்புச் சகோதரி

### செல்வி இராசேஸ்வரி இராமசாமி

அவர்கள் காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தை அன்னாரின் குடும்பத்திற்கு தெரிவிப்பதுடன் அவரின்ஆன்மா சாந்தியடையப் பிராத்திக்கிறோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யாழ்.ஆவரங்கால் மாகாஜன வித்தியாலயம்.

(95550)

## மரண அறிவித்தல்



திருமதி. ஜெபரட்ணம் பரமேஸ்வரி

யாழ். பன்னாலையைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை அருத்துசா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெபரட்ணம் பரமேஸ்வரி அவர்கள் 05.03.2010 வெள்ளிக்கிழமை காலை இறைவனடி எய்தினார். அன்னார் காலஞ்சென்ற வேலாயுதம் தங்கப்பிள்ளை தம்பதியினரின் புதல்வியும், காலஞ்சென்ற ஜெபரட்ணம், அவர்களின் அன்பு மனைவியாரும், இதயகுமாரின் (ராஜன்-UK) பாசமிகு தாயாரும், கஜவதனியின் (அமுதா) அன்பு மாமியாரும், இதுஷன், இதிஷா ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார். அன்னார் காமாட்சிப்பிள்ளை (சித்தங்கேணி), காலஞ்சென்ற திருஞானசம்பந்தமூர்த்தி (UK), சரஸ்வதி (UK), காலஞ்சென்ற மீனாட்சிப்பிள்ளை, சுப்பிரமணியம் (Australia), காலஞ்சென்ற நகுலேஸ்வரன் (India) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற இராஜதுரை (சித்தங்கேணி) (நோட்டர்), கருணேஸ்வரி (UK), காலஞ்சென்ற சீனிவாசம், செல்வராணி (Australia), ஜெகதீஸ்வரி (India) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் 07.03.2010 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிமுதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 3.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் ஆரம்பமாகி பிற்பகல் 5.00 மணிக்கு கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல் குடும்பத்தினர்: Mrs. மனோகரி ஸ்ரீதரன் (பாப்பா)
No. 14-4/1, அருத்துசா வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06.

## விற்பனைக்கு

வடமராட்சி சாரையடியில், பருத்தித்துறை- யாழ். பிரதான வீதியில் இருந்து 100 மீற்றர் தொலைவில் 4அறை வீடு விற்பனைக்குண்டு.

**தொடர்பு: 0718965646**

## விற்பனைப்பிரதிநிதி தேவை

ஹரிச்சந்திரா நிறுவனத்திற்கு யாழ்ப்பாண மாவட்டத்துக்கான, ஒருவருடத்துக்கு குறையாத விற்பனை அனுபவமும் CCI சாரதி அனுமதிப்பத்திரமும் உடைய விற்பனைப்பிரதிநிதி தேவை. அனுபவச் சான்றிதழுடன் தொடர்பு கொள்ளவும். சம்பளம், கமிஷன் உட்பட மேலதிக கொடுப்பனவு வழங்கப்படும். தொடர்பு: 0112685734,0112689234

## விற்பனைக்கு

பருத்தித்துறையில் இருந்து 751 ஆம் இலக்க யாழ். பஸ் செல்லும் பிரதான வீதியில் வியாபாரி மூலைச் சந்திக்கு அருகில் கிணற்றுடன் 3 ½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: 077 9504687**

## சிக்கன அடுப்பு வழங்கல்

வேலணை.மார்ச் 7

வவுனியா நலன்புரி நிலையங்களில் இருந்துவந்து நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் மீளக்குடியமர்ந்த மக்களில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு சிக்கன அடுப்பு வழங்கப்படவுள்ளது.

கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நாளை திங்கள் கிழமை காலை 9 மணிக்கு திவ்விய ஜீவன மண்டபத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.

(50-167)



வசீகரத் தோற்ற தீதிற்கு!

## சந்தனாலேப

(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல்பூச்சு மருந்து)

வெண்சந்தனம், மரமஞ்சள், குங்குமப்பட்டை, கஸ்தூரி மஞ்சள், செவ்வள்ளி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஔடதங்களின் கலவை. தேமல், முகப்பரு, தழும்புகள், பட்தாமரை, கண்ணைச்சுற்றிக் கருவளையம், சருமம் வரட்சியடைதலைத் தடுக்கும், சருமத்தை மிருதுவாக்கி பளபளப்புடன் எழில்மிகு வசீகர முக அழகைத் தரும். உதடு, பாதவெடிப்பு, சருமம் கருங்குதல், பிளவு படுதல் போன்ற சரும நோய்களை பூரணமாகக் குணப்படுத்தும். சவரம் செய்த பின்னர் முகத்தில் பூசுவதன் மூலம் பிளேட் விசத்தை நீக்கி, சருமத்தை சவரம் செய்வதை இலகுவாக்கும். எடுப்பான கம்பீரத் தோற்றத்தைத் தரும்.

**'சிவா நறுமணப் பூங்கா'**
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சகல பார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்).

MANUFACTURED BY: SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO. A/L 250.

## மரண அறிவித்தல்

### சிவபாதசுந்தரனார் சேந்தன்



தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும், இந்தியாவில் வசித்தவரும், தற்போது ஜேர்மனியில் வசித்து வந்தவருமான சிவபாதசுந்தரனார் சேந்தன் நேற்று முன்தினம் (05.03.2010) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவபாத சுந்தரனார் மற்றும் பார்வதி அம்மாவின் மகனும், மதிவாணன், விஜயலட்சுமி, மாதினி, அமரர் ஆறுமுகசிவம் மற்றும் இளவழகன், நளினி, குமுதினி ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் உள்ள அவரின் இல்லத்தில் 08.03.2010 திங்கட்கிழமை நடைபெறும்.

இந்த தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தாய்-பார்வதி அம்மா,
சகோதரர்கள்.

தமிழ்நிலை,
தொல்புரம், சுழிபுரம். (95543)



## கிருபா லேணர்ஸ்



- எழுத்துப் பரீட்சைக்கான முழுமையான தயார்ப்படுத்தல்
- தனித்தனி கவனிப்பு
- செயன்முறை பரீட்சைக்கு நீண்டகாலப் பயிற்சி

நம்பிக்கை · நாணயம்


அரச அங்கீகாரம்பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை

தலைமைக் காரியாலயம்: 26, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 4353, 0777225292

கிளை: மகாத்மா வீதி, நெல்லியடி, 021 3006550.

## Ministry of Higher Education
## SriLanka Institute of Advanced Technological Education (SLIATE)
## Advanced Technological Institute-Jaffna

SLIATE




Advertisment sponsered by:

SINGER PLUS No:01, Standley Road, Jaffna

IIS CITY CAMPUS 200, SIVAN PANNAI ROAD, JAFFNA.

ESOFT COMPUTER STUDIES 114, Navalar Road, Jaffna

COMPUTER EXPRESS No - 167, Kasthuriyar Road, Jaffna

GATEWAY LANGUAGE & ICT CENTER 347, Kasthuriyar Road, Jaffna

DMI COMPUTER EDUCATION Jaffna

SKY COMPUTER'S PVT 162, Main Street, Jaffna

அபிராமி போட்டோபிரதி சேவை

MIDEA ELECTRO MART 1-T, 1-H, Stanley Road, Jaffna

அகரம் கணனி பதிப்பகம்

ANDRA DIGITAL IMAGE Professional Graphics Designers&Printers. Digital Name Boards, Hoarding, Digital Banners

ANNAI BOOK DEPOT No. 7, Modern Market, Hospital Road, Jaffna TP:021 222 9881

LUGSMI STATIONERY CENTER

LUXMY TRADERS 316, Hospital Road, Jaffna T.P:- 021 222 3628

MARUTHA POLYMER RUBBER SEAL

NALIN Information Technologies Pvt Ltd. Parameswara Junction, Palaly Road, Jaffna.

PC SOLUTIONS Technologies (pvt) Ltd

PC SPOT

PIRAKANTH COMPUTER CENTER Digital photo copy, Laminating, binding, Computer Typing & printing. No:568, palali road, Thirunelvely.

தரங்கி போட்டோபிரதி சேவை

TECHNO WORLD Studies (Pvt) Ltd. Your Friend forever in computer World

UNI ICT CAMPUS Kantharmadam, Jaffna.

UNION BANK JAFFNA BRANCH

DMI JAFFNA

ASIAN COMPUTER EDUCATION 2G, Stanley Road, Jaffna. + Kodikamam Road, Nelliadi

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவு மேற்கில் சோழர் காலத்தை நினைவுபடுத்தும் ஆலயத்தின் இடிபாடுகள்

நெடுந்தீவுப் பகுதியில் யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத் துறையினர் அண்மையில் மேற்கொண்ட தொல்லியல் ஆய்வொன்றின்போது சோழர் காலத்தை நினைவுபடுத்தும் ஆலயம் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.




அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் தலைமையில், வரலாற்று மாணவன் கேதீஸ்வரன் மற்றும் தொல்லியல் ஆர்வலர் நெடுந்தீவு நல்லதம்பி சசிகுமார், நெடுந்தீவு மகாவித்தியாலய மாணவர்கள் தேவசுதன், தயாகரன், பிகீரதன் ஆகியோர் இணைந்து நெடுந்தீவில் மேற்கொண்ட தொல்லியல் ஆய்வின் போதே அங்குள்ள புக்காட்டுப் பகுதியில் அழிவுண்ட நிலையில் ஏறத்தாழ நாற்பது அடி நீளமும், பத்தடி அகலமும் கொண்ட ஆலயமொன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

அப்பிரதேசத்தில் கிடைக்கும் சுண்ணாம்புக்கல், சுதை என்பவற்றைக் கொண்டு கட்டப்பட்ட இவ்வாலயம் மிகச் சிறிய கர்ப்பக்கிருகத்தையும், அந்தராளத்தையும் 24X15 அடி நீள அகலத்தில் முகமண்டபத்தையும் கொண்டுள்ளது. மூடு சாந்தினால் அமைக்கப்பட்ட கூரையைக் கொண்ட இவ்வாலயத்தின் கர்ப்பக்கிருகம், அந்தராளம் என்பவற்றின் அத்திவாரத்தையும், சிறிய

## 10ஆம், 11 ஆம் நூற்றாண்டுகளில் கட்டப்பட்டதா?

உயரத்திலான சுவரையும் தவிர ஏனைய பகுதிகள் முற்றாக அழிவடைந்து வெறும் கல்மேடாகக் காட்சியளிக்கிறது.

இவ்வாலயம் தொடர்பான ஆய்வை மேற்கொண்டுவரும் பேராசிரியர் புஷ்பரட்ணம் இவ்வாலயம் தொடர்பாகக் கருத்து தெரிவிக்கையில் "இவ்வாலயம் எப்போது கட்டப பட்டதென்பதை அவ்வூர் மக்கள் கூறமுடியாத அளவுக்கு அதன் தோற்ற காலம் மிகப் பழமையாகக் காணப்படுகிறது. நெடுநதீவில் நெருக்கமான குடியிருப்புக்களைக் கொண்டுள்ள இப்புகாட்டுப் பகுதியில் இவ்வாலயம் ஒல்லாந்தர் ஆட்சியின் பிற்பகுதியில் அல்லது ஆங்கிலேயர் ஆட்சியில் கட்டப்பட்டிருந்தால் அது பற்றிய வரலாறு அப்பகுதி மக்களுக்குத் தெரிந்திருக்கும். மேலும் இப்படியான கலைவேலைப்பாடு கொண்ட பெரிய ஒரு ஆலயம் குறுகிய காலத்தில் அழிந்து போவதையும் அவ்வூர் மக்கள் அனும தித்திருக்க மாட்டார்கள். ஆகவே இவ்வாலயம் ஐரோப்பியர் ஆட்சிக்கு முற்பட்ட காலத்தில் கட்டப்பட்டிருக்கலாம் என எடுத்துக்கொள்வதே பொருத்தமாகும். இவ்வாலயம் அதன் சுற்றாடலில் பரவலாகக் கிடைக்கும் சுண்ணாமபுக் கற்களைக் கொண்டு அமைககப்பட்டிருந்தாலும் ஆலயத்தின் கட்டட அமைப்பும் குறைந்த நீள அகலம் கொண்ட கர்ப்பக்கிருகம், அந்தராளம் என்பவற்றின் அமைப்பும் 10 ஆம 11 ஆம் நூற்றாண்டவில் தமிழகத்திலும், இலங்கையில் பொலநறுவையிலும் கட்டப்பட்டசோழர் கால ஆலய அமைப்புக்களை அப்படியே ஒத்துள்ளன. மேலும் ஆலயத்தில் உட்பகுதியில் சிதைவுண்டு காணப்படும் அந்தராளப்பகுதியில் சிறிய அளவில் மேற்கொண்ட ஆரம்ப அகழ்வின்போது கிடைத்த சிலை



கள், புடைப்புச் சிற்பங்கள், அலங்கார வேலைப் பாடுடைய கற்கற்கள், சுடு மண்ணால் அமைந்த நீர்ப்பாசனக் குழாய் கள், ஆலயச் சுற்றாடலில் இருந்து ந.சசிகுமார் கண்டு பிடித்த பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த முதலாம் ராஜராஜ சோழன் பெயர் பொறித்த நாணயம் என்பன ஆலயத்தின் பழமையைக் கண்டறிவதற்கு நம்பிக்கையான ஆதாரங்களாக உள்ளன. மேலும் இவ்வாலயத்தின் பழமையைத் தெரிந்து கொள்ளும் ஆர்வத்தில் அவ்வூர் மக்கள் இவ்வாலயம் தொடர்பாகத் தந்துதவ முன் வந்திருக்கும் தொல்பொருட் சான்றுகள்



ஆலயம் தொடர்பான எதிர்கால ஆய்வுகளில் பல உண்மைகளை வெளிப்படுத்த உதவும்" என நம்புகிறேன் என்றார்.

இவ்வாலயப் பகுதியில் விரிவான அகழ்வாய்வினை மேற்கொள்வதற்கான அனுமதியை தொல்லியற்திணைக்களப் பணிப்பாளர் கலாநிதி திசநாயக்கவிடம் பெற்றுள்ள பேராசிரியர் புஷ்பரட்ணம் விரைவில் பல்கலைக்கழக உதவியுடன் தொல்லியற்துறை மாணவர்களுடன் இணைந்து ஆலயப்பகுதியில் விரிவான அகழ்வினை மேற்கொள்ளத் திட்டமிடப் பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.


ISUZU Global Leader

ட்ரக் வண்டிகளுக்கு உலகளாவிய ரீதியில் முன்னணி வகிக்கும் ISUZU நிறுவனம் NDB லீசிங் இணைந்து வழங்கும் ஓர் வியப்பூட்டும் சலுகை!



NDB வங்கி சதொச மோட்டர்ஸ் உடன் இணைந்து ISUZU ட்ரக் வண்டிகளை கொள்வனவு செய்வதற்கு விசேட குத்தகை பக்கேஜ் ஒன்றை வழங்குகின்றது.

மீள்செலுத்தும் காலம் 6 வருடங்கள் வரை

- ரூ. 50,000/- வரையான சலுகை
- முதிர்வுக் காலத்திற்கு முன்னான கொடுப்பனவுகளுக்கு விசேட வட்டி வீதம் மற்றும் வசதியான முறையில் தவணைகளும் வழங்கப்படும்.
- 2 வருடங்கள் அல்லது 40,000 Km க்கான உத்தரவாதம்
- கவர்ச்சிகரமான காப்புறுதிக் கட்டுப்பணம்
- என்ஜின் மீது 100,000 Km வரையான உத்தரவாதம் (சதொச மோட்டர்ஸ் மூலம் பராமரிக்கப்படல் வேண்டும்)
- 6 கூலியற்ற இலவச ஆள் சேவைகள்
- விசேட பரிசு

அழையுங்கள் NDB வங்கி: 011 244 88 88 www.ndbbank.com

சதொச மோட்டர்ஸ் பீஎல்சீ: 011 2327360, 011 4714077, 011 4939187, 011 4943500 மின்னஞ்சல்: isuzusales@sml.lk

இச்சலுகைக் காலம்: 2010 பெப்ரவரி 1ம் திகதி - மார்ச் 30ம் திகதி வரை

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

PHOENIX O&M 910002

தலைமைக் காரியாலயம்: கொழும்பு 02.

விநியோகஸ்தர்கள்:
யாழ்ப்பாணம்: லங்கா ஃபில்லிங் ஸ்டேஷன், கண்டி வீதி, கைதடி. தொ.பே: 0773 975957
அம்பாறை: மயுர என்ரபிரைசஸ், உஹன வீதி, அம்பாறை. தொ.பே: 0773 314548

SML Sathosa Motors PLC

NDB வங்கி


# இயேசு தரும் மீட்பு

ஒருநாள் இயேசு எரிக்கோ பட்டணத்திற்கு வந்த பொழுது சக்கேயு என்ற சுங்கவரி வசூலிக்கும் ஓர் ஆயக்காரனை சந்தித்தார்.சக்கேயு ஒரு பாவி என்று கருதப்பட்டவன். உரோமை சாம்ராஜ்யத்திற்கு அடி பணிந்து வரி வசூலித்த அவனை யூதர்கள் அவனை புறக்கணித்தார்கள்.எனவே அவன் புறக்கனிக்கப் பட்டவன். அத்தோடு அவன் உருவத்தில் குள்ளனாக இருந்தான்.குள்ளனாக புறக்கணிக்கப்பட்ட இவன் இயேசுவைப் பார்க்க விரும்பினான். ஆனால் அவனுடைய உருவமும், சமுதாயக் கூட்டமும் இயேசுவைக்காண தடையாக இருந்தது.

இன்று இயேசுவைக் காண முடியாமல், அவரை அடைய முடியாமல் பலர் சக்கேயுவைப்போல தத்தளிக்கின்றார் கள். இதற்குக் காரணம் ஒருவருடைய இயல்பான மனப்பான்மையாக இருக்கலாம். அவராகவே கற்பனை செய்து எழுப்பிக்கொண்ட தடைச்சுவராக இருக்கலாம். அல்லது இயேசுவை நெருங்கிக்

## தவக்காலச் சிந்தனை



கொண்டு வந்த மக்கள் கூட்டமாக இருக்கலாம். இன்று இயேசுவை தங்களுடைய சொந்த சொத்தாக வைத்துக் கொண்டு கூட்டங்கள்போட்டு தங்களுடைய அமைப்புக்குள்ளோ வைத்து இயேசுவை பாதுகாக்கும் சபைகளும், அவர்களுடைய சட்டதிட்டங்களுமாகக் கூட இருக்கலாம்.

ஆனால் இன்று இயேசு இத்தனை தடைச் சுவர்களையும் தாண்டி சக்கேயுவைப் பார்க்கின்றார்.அவனை அழைக்கின்றார். ''சாக்கேயுவோ விரைவாக இறங்கி வா! இன்று உன் வீட்டில் நான் தங்க வேண்டும்'' சாக்கேயு மிகுந்த மகிழ்ச்சியோடு இயேசுவை வரவேற்கின்றார். இயேசு அவனோடு தங்கி அவனோடு பேசி அவனுக்கு ஆறுதலளித்து அவனைத் தன்பக்கம் கவர்ந்து கொண்டார்.''இன்று இவ்வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று, இவனும் ஆபிரகாமின் மகன்தானே! இழந்து போனதைத் தேடி மீட்கவே மனுமகன் வந்துள்ளார். இங்கே இயேசு சாக்கேயுவுக்கு மீட்பராக தன்னை வெளிப்படுத்தினார்.சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்ட பாவியான ஒருவரை தன் நன்பனாக ஏற்றுக் கொள்கின்றார். இயேசு தரும் மீட்புக்கு சக்கேயு என்பவன் ஒரு விளக்கம் ''சக்காயோஸ்'' என்ற பெயருக்கு அர்த்தம் ''கடவுளின் இரக்கம்'' என்பதாகும். இங்கே இயேசு கடவுளின் இரக்கத்திற்கு இலக்கணமாக, உருவமாக தன்னை வெளிப்படுத்துகின்றார்.

அருட்பணி வி. இக்னேஷியஸ் சே.ச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட கொழும்பில் பணிபுரியும் றோமன் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த 28 வயதுடைய ,பொறுப்புகளற்ற பொறியியலாளர் மணமகனுக்கு தாயார் மணமகளைத் தேடுகின்றார். றோமன் கத் தோலிக்க மதத்தைச் சேர்ந்த படித்த நற்பண்புகளுடைய தொழில் புரியும் பெண் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: T.P.- 0112478424 (95509)

## Sales / Promotional Rep

கொழும்பில் இயங்கும் முன்னணி ஆங்கில மருந்து இறக்குமதி நிறுவனம் ஒன்று தனது மருந்துப் பொருள்களை யாழ்.மாவட்டத்தில் சந்தைப் படுத்த Sales / Promotional Rep தேவை. இத்துறையில் ஓரளவு அனுபவமுள்ளோர் உடன் தொடர்பு கொள்ளவும்

**Jagan pharmacy**
*462/B, Hospital Road, Jaffna*
T.P:- 021-2222194
(95509)

## நவீன நாடகம்
## MODERN DRAMA



500 நாடகங்கள்
எழுதிய கலாபூஷணம்
அராலியூர்
**ந.சுந்தரம்பிள்ளை**யின்
26 ஆவது நூல்
தமிழ் நாடகம் பற்றி அறியப் போகிறீர்களா? நவீன நாடகம் எழுத விரும்புகிறீர்களா?
வாசியுங்கள்!

(95412) **ரூபா 100.00**

## 31ஆம் நாள் நினைவலைகள்



அமரர்
**சூசை சலமோன்**
(ஓய்வுநிலை, இலங்கை புகையிரத சேவை)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 09.10.1941 | 05.02.2010 |

பாசப்பறவை பறந்து போனது
கூட்டைவிட்டு கலைந்து போனது
எத்தனை நாள்கள் கிடந்தாலும்
தாய்ப்பறவையும் சேய்ப்பறவைகளும்
எண்ணிலடங்கா சோகத்துடன்...

கரம்பொன் கிழக்கு,
ஊர்காவற்றுறை. (95171) **குடும்பத்தினர்.**

## தேவை

பேக்கரி வேலை தெரிந்த ஆள்கள் தேவை. நேரில் வரவும்.

**ஐங்கரன் வெதுப்பகம்**
கோப்பாய். T.P:- 077 7283705 (95511)

## காணவில்லை

கறுப்பு, மஞ்சள் நிறம் சேர்ந்த, 1வயதுடைய அல்ஷேசன் நாயை 26.02.2010 முதல் காணவில்லை. கண்டவர்கள் கீழ்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

**பொ.பிரபாகரன்**
*24, பாரதி வீதி, நாயன்மார்கட்டு.*
T.P: *077 0878313* (95545)

## வீடு, மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

சுதுமலை அம்மன் கோயிலிலிருந்து 500 மீற்றர் தூரத்திலும், மானிப்பாய் Bank of Ceylonஇல் இருந்து 600 மீற்றர் தூரத்திலும் 6 பரப்புக் காணியில் இரண்டு கிணற்றுடன் சகல வசதிகளுடன் வீடு மற்றும் Passion + (புதிய நிலையில்) மோட்டார் சைக்கிள் என்பன விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
*021 2225697, 077 9920635* (95541)

## விற்பனைக்கு

எமது சங்கத்தில் வெற்று உரப்பைகள் 13010 விற்பனைக்குண்டு. தேவையானவர்கள் அலுவலக நேரத்தில் பார்வையிட்டு 15.03.2010ஆம் திகதிக்குப் பிந்தாது மூடிய கூறுவிலையைச் சமர்ப்பிக்கவும். கூறுவிலை சமர்ப்பிக்கும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் 'வெற்று உரப்பைக்கான கூறுவிலை' எனக் குறிப்பிடவும்.

பொதுமுகாமையாளர்,
யாழ்.மாவட்ட அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கம் (வ-து)
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய். (சி/565536)

## நீண்ட காலக் குத்தகைக்கு காணி தேவை

சுன்னாகம் சந்திக்கும் மருதனார்மடம் சந்திக்கும் இடையில் (சுன்னாகச் சந்தியில்இருந்து 100m தொலைவில்) 1½ பரப்புக் காணி குத்தகைக்கு உடன் தேவை.

தொடர்பு: 077 6695877 (95536)

## கொக்குவில் ஞானபண்டிதாவில் மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்,மார்ச் 7

கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு லெவின் ஸ்ரார் மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் செ.இளங்கோ தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராஜாவும் சிறப்பு விருந்தினராக நடராஜா ஸ்ரீபாலனும் கலந்துகொள்வார்.

(இ-16)

## Study in UK

Thinking of going to UK for higher studies?

***Free Consultation***
***Interviews for Universities & Colleges in London***

| | Vavuniya | Jaffna |
|---|---|---|
| Date | 12th March 2010 | 13th March 2010 |
| Time | 10.00am to 1.00pm | 10.00am to 1.00pm |
| Venue | Vavuniya Rest House ( Station Road ) | Uthayan Auditorium |

For More Information
**077-7715987**

Colombo Office: 128, High Level Road,Nugegoda 011-2768700
Negombo Office: 73/1A, Chilaw Road, Negombo 031-2238749

Phantomz Global
Empowering Minds for the Future

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| அன்னை மடியில் | | இறைவன் தாளில் |
|---|---|---|
| 06 | | 18 |
| ★ | | ★ |
| 07 | | 03 |
| ★ | | ★ |
| 1922 | | 2009 |



## அமரர் திருவளர்
## சின்னப்பா தியாகராசா

*திதி: 07.03.2010*

ஐயா ஆண்டு ஒன்று உருண்டு ஓடினாலும்
தங்கள் நினைவுகள் மறைந்தோடவில்லை ஐயா!
அன்று என்னைப் புகழோடு வளர்த்தீர்களே ஐயா!
இன்று அழியாப் பிறவித் தெய்வமாகி
எமை வாழ்த்தி நிற்கும் தந்தையே!
அன்பாய் எங்களை அரவணைப்பீர்களே ஐயா
தாய் இல்லா உங்கள் பிள்ளைக்கு தாயாகி இருந்து
கண்ணின் மணி எனவே வளர்த்தீர்களே ஐயா!
கண்காணாத தூரத்தில் நீங்கள் இருந்தாலும்
கணமேனும் உங்கள் நினைவு நீங்காது வாழ்கின்றோம்.
எங்கள் ஐயா அம்மாவுக்கு எல்லாம் வல்ல கயிற்றசிட்டி
வேல்முருகனை வேண்டி உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

'சிவ மஹால்',
கைதடி வடக்கு, கைதடி.

உங்கள் பிரிவால் துயருறும்:
திருமதி சி.தவறஞ்சிதம் (மகள்). (95514)

## காட்சியறைக்கான காணி அல்லது கட்டடம்
## வாடகைக்கு அல்லது கொள்வனவிற்கு தேவை

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் அமைந்திருத்தல் வேண்டும்.

பிரதான பாதைக்கு அகன்ற முகப்பைக் கொண்டதாக அமைந்திருத்தல் இருத்தல் வேண்டும்.

கட்டிடமாயின் 7500 ச.அடி நில அளவு கொண்டதாகவும் வசதியான வாகனத்தரிப்பிடம் உடையதாகவும் இருத்தல் வேண்டும்.


நிலமாயின் குறைந்தது 40பர்ச்சஸ் உடையதாகவும் இருத்தல் வேண்டும்.

மேலதிக விவரங்களுக்கு அழையுங்கள்

**வினோத் - 0773746648**
**புத்திக - 0772932662**

## வீடுகள் கட்டடங்கள் கட்ட விரும்புபவர்களுக்கு ஒரு வாய்ப்பு

உங்கள் வீடு கட்டும் பொறுப்பை யாரிடம் ஒப்படைப்பது என்று யோசிக்கின்றீர்களா? எங்களிடம் ஒப்படையுங்கள் உங்கள் கனவு வீட்டை நிஜமாக்கி தருகின்றோம்.



- ✓ இலவச வீடமைப்பு ஆலோசனை
- ✓ இலவச வீட்டுப்படம் (Plan) வரைதல்
- ✓ வீடு கட்டியபின் வீட்டுத்தோட்டம் (Land Scaping) அமைத்தல் இலவசம்
- ✓ நவீன தொழில்நுட்ப (Latest Technology) முறைகள் மூலம் குறைந்த செலவில் வீடுகள் அமைக்கமுடியும். இதனால் எல்லோரும் ஒரு வீட்டிற்கு உரிமையாளர் ஆகலாம்.
- ✓ 100 % நம்பிக்கை நாணயம்
- ✓ குறுகிய காலத்திற்குள் வீடு அமைக்கப்படும்
- ✓ சாத்திரமுறைப்படி வீடுகள் அமைக்கப்படும்
- ✓ நவீன வீடுகள் (Mordern Houses in Latest Fashion) அமைத்தல்
- ✓ பழைய வீடுகள் முன்முகப்பு உட்பட புதிய பசன் (Latest Fashion) இற்கு மாற்றி அமைத்தல்
- ✓ நிதி நிலைக்கேற்றவாறு சிறிய வீடுகள் அமைத்தல்
- ✓ நிதிபற்றாக்குறை ஆயின் வங்கிக்கடன் உதவி ஒழுங்கு செய்து தரப்படும்.
- ✓ இலங்கையின் எப்பகுதியிலும் (நிலம் வாங்குதல் உட்பட) வீடுகள் அமைக்கப்படும்.

குறிப்பு: கட்டடக்கலை என்னவென்று தெரியாதவர்களிடம் வீடு கட்டும் பொறுப்பை கொடுத்து பணத்தை வீண் விரயமாக்காதீர்கள். நாங்கள் உங்கள் பணத்தை மீதமாக்கித் தருகின்றோம்.

**தொடர்புகொள்ளுங்கள் எம்மிடம் வாருங்கள்**
0786155929, 0774163146, 0263268222 (95444)

**Ananda Housing Constructions**
Reg.No TN/VC/0011
பருத்தித்துறை வீதி, மடத்தடிச் சந்தி, சாவகச்சேரி.
(மகாவித்தியாலயம் அருகில்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஓநாய்ச் சிறுவன்

ஆங்கிலத்தில்:
'ருத்யாட் கிப்லிங்'
தமிழில்: ரம்யன்

"இனி எல்லாம் உன் கையில்தான் இருக்கிறது" என்று மௌலியைப் பார்த்து பகீரா கூறினார். "இனி இவர்களுடன் மோதாமல் ஒன்றும் செய்து கொள்ள முடியாது." என்று அவர் மேலும் கூறினார்.


மௌலி எழுந்துநின்றான். தீச்சட்டி அவன் கையில் இருந்தது. நாய்களே! கேளுங்கள், இவ்வளவு காலமும் உங்களோடு ஒருவராகவே நான் இருந்து வந்துள்ளேன். ஆனால் நீங்கள் என்னை மனதுக்குள்ளேயே வெறுத்திருக்கிறீர்கள். அதனால் ஒரு மனிதன் என்ற முறையில் உங்களை நாய்கள் என்றே மதிக்கிறேன்- அப்படியே அழைக்கிறேன். என்று கூறியவன் மேலும் கூறினான். " நீங்கள் என்ன செய்யவேண்டும் என்பதை நான் கூறுகிறேன். நீங்கள் எனக்கு ஒன்றும் சொல்லத்தேவையில்லை." மௌலி தீச்சட்டியை கையில் எடுத்தான். அதனை நிலத்தில் போட்டு உடைத்தான். அதிலிருந்த தணல் குப்பைகளின் மீது தெறித்து விழுந்ததில் குப்பெனத் தீப்பற்றி எரிந்தது. நெருப்புத் துளிகள் தெறித்து ஓநாய்களின் மீது விழுந்ததில் அவைகளின் மயிர்கள் எரிந்து மணம் எழுப்பின. ஓநாய்கள் பயந்து போய் பின் வாங்கின. ஷேர்கான் என்ன செய்வது என்று அறியாது விழி பிதுங்கிய நிலையில் தவித்துக் கொண்டிருந்தார்.

எரியும் மரக்கொப்பைத் தூக்கி தலைக்குமேலாகச் சுழற்றிக் கொண்டு ஓநாய்களின் கூட்டத்திற்குள் பாய்ந்தான்.

பகீரா மகிழ்ச்சி உற்று நீதான் பெரியவன் மௌலி ஆனால் அகீலாவை ஒன்றும் செய்துவிடாதே அவர் உனக்கு ஆதரவாகவே இருந்து வந்துள்ளார் என்று மெதுவான குரலில் மௌலிக்கு கேட்கும் படியாக கூறினார் பகீரா.

இளம் ஓநாய்கள் எல்லாம் ஒன்றும் செய்ய முடியாமல் அங்கு மிங்குமாகத் துள்ளிக் கொண்டும் அந்தரப்பட்டுக் கொண்டிருந்தன. அகீலா ஓர் இடத்தில் கவலை தோய்ந்த கண்களுடன் படுத்திருந்தார்.

மௌலி ஒரு மனிதனாக கம்பீரமாக எழுந்து நின்றான். நாய்களே ஓடுங்கள். நான் உங்களோடு இருந்து வளர்ந்தவன் என்றாலும் எனக்கு நீங்கள் செய்தது போல் உங்களுக்கு நான் துரோகம் செய்யமாட்டேன் தீ என்று கூறி தீச்சட்டியைக் காலால் உதைத்தான். தீப் பொறிகள் பளீச் சென்று எல்லாத் திசைகளிலும் பறந்தன. இனி எனக்கும் உங்களுக்கும் எந்தவித மோதலும் இருக்காது. ஆனால் இங்கிருந்து போவதற்கு முன் ஒரு முக்கிய வேலை இருக்கிறது. என்று கூறியபடி ஷேர்கான் இருந்த இடத்தை நாடிச் சென்றான். ஷேர்கான் கண்களை விழித்தபடி பயத்தில்வாலைசுருட்டிக்கொண்டு தீச்சட்டிப் பக்கமாகவே பார்த்துக் கொண்டிருந்தார். ஷேர்கான் தாடையில் பிடித்து அழுத்திக்கொண்டு தீ பற்றிய மரக்கொப்பை தூக்கிப் பிடித்தான் மௌலி. ஷேர்கான் ஒன்றும் செய்ய முடியாமல் கண்களை மூடிக் கொண்டு பரிதாபமாக நின்றார். மௌலி பேசினான். (வளரும்)




## உங்களுக்கும் பரிசில்கள்

### விடை தெரியுமா? -54

01. மூன்றாவது ஐ.பி.எல் இருபதுக்கு இருபது கிரிக்கெட்போட்டி எப்போது ஆரம்பமாகவுள்ளது?
02. கிரிக்கெட் சூதாட்டச் சர்ச்சையில் இப்போது சிக்கியுள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் யார்?
03. அமெரிக்க அரசின் உயர் விருதை அண்மையில் வென்றுள்ள இலங்கைப் பெண்மணியின் பெயர் என்ன?
04. 'முதலாவது பரசூட்டில் இருந்து குதிக்கும் நிகழ்வு எப்போது நடைபெற்றது?
05 மொறாக்கா நாட்டின் தேசிய தினம் எப்போது கொண்டாப்படுகின்றது?

### விடை தெரியுமா?

தெரிந்தால் 14.03.2010 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

**விடை தெரியுமா? - 52 இற்கான சரியான விடைகளும், பரிசுபெறுவோர் விபரமும் அடுத்த வாரம் அறிவிக்கப்படும்**

## சிறப்புப் பெயர்கள்

* இந்து சமுத்திரத்தின் முத்து
  இலங்கை
* பொற்கோயில் நகரம்
  அமிர்தசரஸ்
* சீனாவின் துயரம்
  குவாங்கோநதி
* ஏழு குன்றுகளின் நகரம்
  ரோம்
* இருண்ட கண்டம்
  ஆபிரிக்கா

சி.திலக்சனா
தரம்-9,
உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி.

## நட்பு



மனம் நிறைந்து தினம் உன்னை
நண்பியாய் நினைத்திருந்தேன்
அன்பினால் நம் பண்பினால் வளர்ந்த
சினேகிதம் என்றும் சிலநொடிப் பொழுதேனும்
சிதறி விடாதிருக்க சித்தம் கலங்குகின்றேன்.

உடைந்த கண்ணாடியை ஒட்டுவது கடினமென்பதை
நான் அறிவேன் -தோழி
நலமாய் நாளும் -நம் நட்பு தொடர
நாயகனை வேண்டுகிறேன்
சூரியன் உதிக்க மறந்தாலும்
நான் உன்னை-மறவேன்.

**சி.அகல்யா**
தரம்-9E, யாழ்.இந்து மகளிர் கல்லூரி.




## நீங்களும் எழுதலாம்



(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)

மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங் கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்ப வேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர்:-......................................
தரம் :-......................................
பாடசாலை :-......................................
......................................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.


.......................... ..........................
திகதி வகுப்பாசிரியர் கையொப்பம்

## மாணவத் தூரிகை





க.அனித்தா, தரம் - 6 B,
யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை



ச.விதுஷா, தரம் - 8 B,
யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்.



ஜெ.அக்கிலா, தரம் - 2,
யா/ கோப்பாய் மகா வித்தியாலயம்.




பு.கோபிசங்கர், தரம் -10,
யா/ வண்ணை நாவலர் மகா வித்தியாலயம்.



த.மிதுஷா, தரம் -1D,
யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்.



ச.அருந்ததி, தரம் -5A,
யா/ இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.



எம்.வசீகரன், தரம் -7,
யா/ ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்.



ச.ஷங்கீத், தரம் -3,
யா/ கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறாம் மாத நினைவஞ்சலி

## சின்னத்தம்பி தியாகராசா

கண்மகிழ
05.05.1947



நெஞ்சம்நெகிழ
07.09.2009



அவனியிலே எம்மைவிட்டுப் பிரிந்து சென்ற
ஆறாம் மாத நினைவினிலே - நீரும்
இவ்வுலக வாழ்வைத் துறந்து இறையன்பின்
ஈசனவன் தாளினை இறுகப் பற்றிடவே
உலகப் பந்தங்களை உதறி நீர் எறிந்ததனால்-எம்
ஊனுயிரும் வேதனையால் துடிக்கிறதே!
எங்கள் குடும்பத் தலைவனே நீரெம்மை
ஏங்கவைத்து கண்ணகையாள் திருவடியில்
ஐக்கியமாய் வாழ்ந்திடவே எண்ணினீரோ!
ஒளிமயமாய் எங்கள் வாழ்வு நிறைந்திடவே
ஓயாது எம்மைக்காத்த கோமானே
ஔடதமாய் நீரிருந்து எம் குடும்பங்களைக் காருமையா....!

உங்கள் ஆத்மா சாந்தி என்றும் பெருகவென்று
ஆறாம்மாத நினைவினிலும் ஆண்டவனை வணங்குகின்றோம்

இல.100, சீனிவாசகம் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்போது எம்மிடம் வந்திருக்கும் பொதுத்தேர்தல் எங்களுக்கு ஓர் அமைதியான போராட்ட வடிவம்

## இன இருப்பை உறுதிசெய்ய அதனைப் பயன்படுத்துவோம்

அரசியல் அலசல்

பூசன்

ஈழ மணித்திருநாடு என்று இலக்கியத்தில் அழைக்கப்படுகின்ற ஈழவளநாடு இன்று பொலிவிழந்து, புகழிழந்து, பூரியர் கையில் பொச்சாப்பு நிறைந்தோர் புகழுகின்ற பொய்யுரைக்கு ஆட்பட்டு, அல்லலுற்றுத் தவிக்கின்றது. பிரித்தானியர்கள் சுதந்திரம் என்ற ஒன்றை இந்த நாட்டுக்கு வழங்குவதற்கு முன், எம்முடைய மக்கள் கல்வியில் சிறப்புற்றோராக அரசின் பல துறைகளில் பதவி வகிப்போராக வாழ்ந்து வந்தனர். தமிழ் மாநிலமான வடகீழ் மாகாணங்களும் உழவர் உழைப்பாலும் வினைத்திறன் மிக்கோரின் முயற்சியாலும் பொருளாதார வளம் நிறைந்து பொலிவுற்றன.
அமைதியும் சான்றாண்மையும் விருந்தோம்பலும் தமிழ் மக்களின் இயல்பாக மிளிர்ந்தன.
பெருமைமிக்க கவிஞரும் எழுத்தாளருமாகிய கொத்தமங்கலம் சுப்பு அவர்கள் தான் எழுதிய தில்லானா மோகனாம்பாள் என்ற நாவலில் ஈழத் திருநாட்டு மக்களின் அறிவுசார் தகைமையையும் விருந்தோம்பல் பண்பையும் பக்கம் பக்கமாக விளம்பி மகிழ்கின்றார்.

இந்த நாட்டின் பூர்வீகக் குடிமக்கள் தமிழ்மக்கள்.
அவர்களுக்கெனத் தனியான ஒரு நிலம், மொழி, கலாசாரம், பண்பாடு ஆகியன அவர்களுடைய தனித்துவ அடையாளத்திற்குச் சான்றாக இலங்குகின்றன. என்ற பேருண்மையை மறந்து, காலில் போட்டு மிதித்து, நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்ட தனிச் சிங்களச் சட்டத்தினால் தகர்ந்துபோன இன ஐக்கியம் இன்று இன அழிப்பு என்ற புதிய வடிவத்தில் தமிழ்மக்களைக் கொண்டுசென்று நிறுத்தியிருக்கின்றது.

உலகத்தில் பயங்கரவாதம் என்ற முத்திரை குத்தப்பட்ட இஸ்லாமிய அமைப்புகளும்சரி ஏனைய அமைப்புகளும் சரி எந்த மக்களினதும் பிறப்புரிமைக்காக அடக்கு முறைக்கு எதிராக அதனால் கிளர்ந்தெழும் விடுதலைக்காகப் போராடவில்லை.
ஆனால் இலங்கையில் நடந்த தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டமோ விடுதலைக்கான அகிம்சைவழிப்போராட்டம் பல தசாப்தங்களாக நீடித்துத் தோற்றபின் முகிழ்த்ததொன்றாகும். இந்த உண்மையை மறந்து, அதனைப் பயங்கரவாதம் என்று கொச்சைப் படுத்தி இரு நாடுகளுக்கிடையில் நடக்கின்ற யுத்தம்போல அப் போராட்டத்தை அடக்கி, அதனை முறியடித்து வெற்றி கண்டதாகக் கூறிக்கொண்டு அகிம்சை வழியை நாடி நிற்கின்ற தமிழ் மக்களின் பிறப்புரிமைகளைத் தொடர்ந்து உதாசீனம் செய்து, மறுத்து அவர்களை நிரந்தர அடிமைகளாக ஆக்கி ஆள நினைக்கின்ற அரசுகளின் வேண்டுகோளுக்கிணங்கி இந்தப்போராட்டத்தை நடத்திய அமைப்பினைத் தடை செய்த மேற்குலக நாடுகள், இன்று ஈழத் தமிழ்மக்களுக்கு அவர்களின் தொடர்ச்சியான உரிமைக் குரலுக்குக் கொடுக்கின்ற பதில் என்ன என்பதை தெரியாது விழிபிதுங்கி நிற்கின்றன.

அன்று சிங்கள அரசோடு கைகோர்த்து நின்ற அதே நாடுகள் இன்று அதே சிங்கள அரசினை நோக்கித் தமிழ் மக்களின் சட்டபூர்வமான அபிலாஷைகளை நிறைவேற்றும் விதத்தில் ஒரு தீர்வினை எட்டுங்கள் என்று கேட்கின்றபொழுது, இப் பிரச்சினை பற்றிப் பேச உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது? உங்கள் அலுவலை நீங்கள் கவனித்துக் கொள்ளுங்கள் என்ற சிங்கள அரசின் பதிலைச் சம்மட்டி அடியாக வாங்கி மௌனித்து, செய்வதறியாது திகைத்து வறிதே காலத்தைக் கழிக்கின்றன. இது அந்த நாடுகளின் மிகப் பரிதாபகரமான நிலை. மேற்குலக நாடுகள் ஒன்றிணைந்து சிங்கள அரசினை வலியுறுத்துகின்றபோது, வெறும் அறிக்கைகளையும் கண்டனங்களையும் கவலைகளையும் தெரிவிப்பதை விடுத்து, அதற்கான தீர்க்கமான நடவடிக்கைகளை எடுக்கின்றபோது ஒரு மாற்றத்தை மக்கள் காணக்கூடிய வாய்ப்பு ஏற்படும் என்று நம்பலாம். ஆனால் அப்படியொரு சிந்தனைப் போக்கு, செயற்திறன்வீச்சு இன்னமும் மேற்குலகத்தவர்களின் மனதில் உருவானதாகத் தெரிய வில்லை. ஒட்டி உலர்ந்த வயிற்றோடு உணவு கேட்கின்றவர்களுக்கு ஓங்கி உதைப்பது, அடித்து விரட்டுவது நிச்சயமாகத் தீர்வாக மாட்டாது. இந்த உண்மையை உணருகின்ற மாந்தர்கள் மேற்குலகத்திலும் சரி, கீழைத்தேயத்திலும் சரி இன்று இலர்.

விடுதலைப்போராட்டம் என்பது எந்த வடிவத்தில் வெளியே தோற்றினாலும் ஒரு கட்டத்தில் அதுவே ஓங்கி வளர்ந்து உயர்வு பெற்றாலும் இன்னொரு கட்டத்தில் அதுவே சரிந்து வீழுந்துபோனாலும், அதனுடைய உயிர்த்துடிப்பு, வேகம் உரிமைக்காகச் சிந்திக்கின்ற மக்களின் மனதில் நீண்டு நிலைபெற்றிருக்கும். அணையாத விளக்காக இருக்கும், ஆறாத ரணமாக இருக்கும். ஆகவே அரிசியல் சூழ்நிலை மாறுபட்டாலும் சாதகமாகமோ பாதகமாகவோ அமைந்துவிட்டாலும், மக்களின் உள்ளத்து உணர்வு களை எந்த வெளிப்புறச்சக்தியும் குன்றச் செய்துவிடமுடியாது.

இந்திய விடுதலைப் போர் பகத்சிங் போன்ற விறல்மிக்க இளைஞர்களின் உயிர்த் தியாகத்தில் ஆரம்பித்தது. அது சூழ்நிலைக்கு ஏற்றமாதிரி மாற்றமடைந்து, காந்தியின் அகிம்சை வழியில் அமைதிப் போர் வடிவம் பெற்று விடுதலையை மக்கள் ஈட்டும்வரை நிலைபெற்றது. இன்று தமிழ் மக்களின் நிலையும் அதுதான். இன்று தமிழ்மக்கள் கொண்டிருக்கின்ற போர் வடிவம் அகிம்சையைத் தழுவுகின்ற அமைதி ஆகும்.

இந்த அமைதிப் போரில், நீண்ட பயணத்தில் இன்று மக்கள் சந்திப்பது தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்து கின்ற ஒரு சிறு போராகும். இந்தப் போருக்கு எதிர்ச் சக்திகள் கிடையாது. மக்களே அனைத்துமாவார்கள். அவர்களை யாரும் தோற்கடிக்க முடியாது. அவர்கள் தங்கள் வாக்குரிமைப் பலத்தைப் பயன்படுத்த முடிவதால் இந்த உரிமைப் போரில் முதற்கட்டத்துக்கு வலிமை சேர்ப்பதாகும். வெற்றியை நோக்கி வீறுநடை போட்டுச் செல்வதாகும். 30ஆண்டுகளாக நீடித்த உள்நாட்டு யுத்தம் என்ற பதத்தை அனேகர் பாவித்து வருகிறார்கள். அறவழியிலான போராட்டம் 3 தசாப்தங்களுக்கு மேலாக இந்த மண்ணில் நீடித்தது. அது ஆயுத வழியில் அடக்கி ஒடுக்கப்பட்டது. இந்தக் கசப்பான வரலாறு தமிழ் இளைஞர்களில் மனதில் ஒரு புதிய சிந்தனையைத் தோற்றுவித்தது. அது போர் குறித்த சிந்தனையன்று. தாம் நடத்துகின்ற உரிமைப்போரை ஆயுதவழியில் தகர்க்க நினைப்போரின் வலிமையைத் தடுக்கின்ற தற்காப்பு நடவடிக்கையாகும். இதற்கு உள்நாட்டுப் போர் என்று முத்திரை குத்தி 20 நாடுகளை உதவிக்கு அழைத்து, உள்நாட்டுப் போரை அழித்துவிட்டோம், பயங்கரவாதத்தை அழித்து விட்டோம் என்று பறைசாற்றுவது உண்மையை அறியாத சிங்கள மக்களை ஏமாற்றி, தம்முடைய பதவியைத் தக்க வைக்கின்ற அரசியல் தந்திரோபாயமே தவிர வேறொன்றுமல்ல.

பதவி அடைய முன் அரசியல் பதவியைப் பெறுவதற்காகத் தேர்தல் காலங்களில் நடக்கின்ற கொலைகள், அடிதடிச் சண்டைகள் இன்னும் கோரமான ஆயுதங்களைப் பாவித்து அழிவுகளைச் செய்வதை வன்முறை என்ற பதத்தில் உள்ளடக்கி அதிலே பதவியை நாடும் அரசியல் பயங்கரவாதிகள் ஒழிந்துகொள்வார்கள். இதனை மக்கள் உணர்வதுமில்லை, கண்டுகொள்வதுமில்லை. எழுபதுகளில் அப்போதைய பிரதமர் திருமதி.சிறிமாவோ பண்டாரநாயக்கா (ரோகண விஜயவீராவின் தலைமையிலான சேகுவேரா இயக்கத்தை) பிணமாகவோ உயிரோடோ கொண்டு வாருங்கள் என்று தன்னுடைய கூட்டத்தினருக்குக் கட்டளையிட்டார். சிங்களத் தலைவர்கள் அதனைப் பயங்கரவாதம் என்றோ அல்லது அவர்களைப் பயங்கரவாதிகள் என்றோ அழைக்க முற்படவில்லை. மாறாக அவர்களை நாசகாரிகள் (Subversives) என்று மென்மையான சொற்களில் அழைத்தார்கள். அவர்கள் தம் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் அவர்கள் செய்த செயல் பயங்கரவாதமாகத் தென்படவில்லை. இதனை மேற்குலகமும் புரிந்துகொள்ளவில்லை. இந்த இயக்கத்தைத் தடைசெய்யும்படி இலங்கை அரசு எந்த நாட்டையும் கோரவும் இல்லை. எந்த வெளிநாட்டு அரசும் இங்கு நிகழ்ந்தவற்றைப் பயங்கரவாதச் செயல் என்று கருதவுமில்லை.

மேற்குலகத்தைப் பொறுத்தவரை இலங்கை அரசு எதைச் செய்கிறதோ அதைத்தான் அவர்களும் கிளிப்பிள்ளை போல் சொல்வார்கள். அவர்களுக்கு என்று ஒரு புதிய சிந்தனையோ, வரலாற்று நோக்கோ, கடந்தகால நிகழ்வுகளின் அடிப்படையிலான முடிவோ கிடையாது. அதே அரசிடம் அவர்கள் ஏதும் கோரிக்கையை முன்வைக்கின்ற போது அரசின் காட்டமான பதில் அறிக்கை வருகின்ற சொற்களிலான அடி உதையை மௌனமாக வாய் பொத்தி வாங்கிக் கட்டுவார்கள். இந்த வேடிக்கைதான் தமிழ் மக்களின் நியாயபூர்வமான போராட்டத்தை முடக்கி, அவர்களை செயலிழந்து, செய்வதறியாது திகைத்திருக்கச் செய்கின்றன.

தென்னிலங்கையில் நாடாளுமன்றத் தேர்தல் ஒரு இனிய திருவிழா. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அதாவது தமிழர்களின் பாரம்பரிய பிரதேசத்தில் இந்தத் தேர்தல் இன்னுமொரு போராட்ட வடிவம். அமைதியான போராட்ட வடிவம். அடுத்து தாம் செய்வது என்ன என்பதை அவர்களே தீர்மானிக்கின்ற ஒரு சிந்தனைக்கான, அதைத் தட்டிய செயலுக்கான முதற்கட்ட வடிவம். அதை மக்கள் ஆற்றலோடும் அறிவோடும் தங்கள் இன இருப்பினை உறுதிசெய்யும் வகையில் அணுகுவார்கள். ஆக்கபூர்வமாகச் செயற்படுவார்கள். அசமந்தப் போக்கில் தமக்கு வாராது வந்த மாமணியையும் கோட்டைவிட்டு வீதியில் வறிதே அலையமாட்டார்கள் என்று நம்பிக்கை கொள்வோமாக! இறைவனே நாளும் இருளைத் தருகிறான். அவனே இருளைப் போக்கப் பகலைத் தருகிறான். அந்தப் பகலையும் இறைவன் தரவேண்டும் என்று இறைஞ்சுவோமாக! ***

---

# 1860 பெப்ரவரி

# தாவீதுப்பிள்ளை காலமானார்

இன்றும் நினைவில் கொள்ள.....

அன்றைய ஞாபகம் இங்கே.....

தாவீதுப்பிள்ளை தனது பத்தொன்பதாவது வயதில் ஒல்லாந்த அரசின் நிர்வாகத்தின் கீழ் யாழ்ப்பாணம் கச்சேரியில் நெல் திணைக்களத்தில் எழுதுவினைஞராக இணைந்துகொண்டார்.

ஆங்கிலேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய பின்னரும் இவர் தனது சேவையைத் தொடர்ந்து 1855 ஆம் ஆண்டு வரை (அறுபதாவது வயதில் இளைப்பாறும் வரை) ஆற்றிவந்தார்.

இவரது சேவையைக் கௌரவிக்க விரும்பிய அப்போதைய அரசாங்க அதிபர் வில்லியம் துவைனம் (Sir William Twynam) இவர் வாழ்ந்த வீதிக்கு, யாழ்ப்பாணம் பிரதான வீதியிலிருந்து கடற்கரை வீதிக்குச் செல்லும் வீதிக்கு இவரது பெயரை (டேவிட் வீதி)ச் சூட்டினார்.

இந்த வீதி இன்று வரை டேவிட் வீதி என்றே அழைக்கப்பட்டு வருகிறது. இவரது பேரனார் [illegible] பிரித்தானியர் காலத்தில் அங்கீகரிக் [illegible] கடமையாற்றினார். தாவீதுப்பிள்ளை 1860 பெப்ரவரி மாதம் காலமானார்.

-ஆண்டவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இலங்கையில் பரீட்சிக்கப்பட்டுள்ள சகல வகையான இமல்சன் மற்றும் எனாமல் பெயின்ட் உற்பத்திகளின் வர்த்தக நாமங்களில் சர்வதேச பாதுகாப்புத் தராதரங்களுக்கு அமைவாக ஈயத்தின் அளவைக் கொண்டுள்ள பெயின்ட் வகை டியூலக்ஸ் மட்டுமே."

*மூலம் : புதிய அலங்கார பெயின்ட் வகைகளில் ஈயம் என்பது பற்றி Toxic Link மற்றும் IPEN நடாத்திய சர்வதேச ஆய்வு*



- மேலதிக ஈயம் அல்லது குரோமியம் கலந்த சாயங்கள் இல்லை.
- தீங்கு விளைவிக்கக் கூடிய கரைசல்கள் இல்லை.
- சகல உற்பத்தி செயல் முறைகளின் போதும் போதிய பாதுகாப்பு உண்டு.
- பாதுகாப்பான, சூழலுக்கு நட்புறவான மூலப் பொருட்களின் பாவனை.




**Dulux**

பாதுகாப்பில் அக்கறையே - எமது செயற்பாட்டுக்கு அனுமதிப்பத்திரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



''கலைச்செல்வி'' சஞ்சிகை மூலம் ஈழத்துப் புனைகதைத் துறையில் கால் தடம் பதித்தவர்களில் 'துருவன்' என்ற க.பரராசசிங்கமும் ஒருவர். இவர் எழுதிய சிறுகதைகள் சொற்பமேயாயினும், தமது நாடகம் மற்றும் நகைச்சுவைக் கட்டுரைகள் மூலம் வாசகர்கள் மத்தியில் தனி இடம் பெற்ற இவர் சிறந்ததொரு நடிகருமாவார். இவரது சிறுகதைகள் கலைச்செல்வி சஞ்சிகையிலும் சுதந்திரன் பத்திரிகையிலும் பிரசுரமாகியுள்ளன. பேராதனைப் பல்கலைக் கழக சிறப்புப் பட்டதாரியான இவர் இலங்கை நிர்வாக சேவையில் இணைந்து உதவி அரசாங்க அதிபராகப் பணிபுரிந்தவர். இளவயதில்– 1989ஆம் ஆண்டில் அமரராகி விட்டார். 'கலைச்செல்வி' சஞ்சிகையில் பிரசுரமான அவரது 'ஒரு குலை' சிறுகதை இங்கு பிரசுரமாகின்றது.



# ஒரு குலை

மூத்த ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதை வரிசை: 140

'சொத்தியா'
'சொத்தியன்'
'சொத்தி....... சொத்தி'

இளையவன் சின்னராசாவின் குரல் பெருத்துக் கொண்டே போனது. நீல நிறக் காற்சட்டை நாடாவை இழுத்து இறுக்கிச் சொருகிக் கொண்டே அவன் ஓடியோடிக் கத்தினான்.

தென்னை மரத்தோடு முதுகைச் சாத்தியபடி அழுகிய கத்தரிக்காய் போல சூம்பிப் போய் இருந்த தனது இடது காலை உருவிவிட்டு கொண்டிருந்த கனகசிங்கத்தின் கண்களில் நீர் முட்டியது. அவனால், தம்பியார் 'சொத்தி' என்று கத்துவதைப் பொறுத்துக் கொள்ளவே முடியவில்லை. ' இவன் என்ரை தம்பியே? அறுந்தநாய். என்னை எந்த நாளும் பட்டம் தெளிக்கிறது தான் இவனுக்கு வேலை. மூதேவி செத்துப்போனாலும் நல்லது.'

சின்னராசா தமையன் இருந்த தென்னை மரத்தடியைச் சுற்றி கைகளைப் பற்றியபடியே ஓடிக்கொண்டிருந்தான்.

'ஓ..... இவன் செத்துத்தான் போகவேணும். அப்பான் எனக்கு 'சுகம்.' ம்....... ஏன் அவன் சாகவேண்டும். என்று நினைக்கிறேன்? பிறகு கூப்பன் கடைக்குப் போகவும் சாமான் வேண்டப்போகவும் ஆர் இருக்கினம்? சாகாட்டி என்னைப் போல ஒரு கால் சொத்தியாய்ப் போனாலும் நல்லது'

கனகசிங்கத்தின் மனதைச் சுற்றி வேதனை நெருப்பு மூளும் உந்தலில் அவன் முதுகைத் தென்னைமரத்தில் அழுத்தி, வலது கையை நிலத்தில் ஊன்றி எழுந்து கொண்டான். சின்னராசா கையை தட்டிச் சொத்தியா' என்று பலமாகக் கத்திவிட்டு ஓட, அவனைப் பிடித்து சொத்தியாக்கிவிட வேண்டும் என்ற மன வைராக்கியத்தோடு, ஆட்டுக்குட்டி கட்டுவதற்கு அறைந்து வைத்திருந்த பூவரசம் கட்டையைப் பிடுங்கிக் கொண்டு கனகசிங்கம் துரத்தினான்.

அவன் ஓட அவனுடைய இடது கால் நிலத்தில் பட்டும் படாமலும், பிரம்படி பட்ட கையாக உதறுப் பட்டுக்கொண்டது. சின்னராசா அங்குமிங்குமாகத் தென்னை மரங்களுக்கூடாக 'உச்சி' ஓட்டங் காட்டி விட்டு வேலிப்பொட்டுக்கூடாக அடுத்த வளவுக்குள் நுழைந்து விட்டான். ஆத்திரத்தோடு கனகசிங்கம் வீசி எறிந்த பூவரசங்கட்டை வேலியோடு வெறுமனே மோதி நிலத்தில் விழுந்தது. சீ...... எறிபட்டிருந்துதென்டால் இனிமேல் என்னை அவன் பழிக்கவே ஏலாது. தப்பிட்டான். வரட்டும் பாக்கிறன்.'

மனம் ஆத்திரத்தில் கறுவ, தம்பியார் வரப்போகும் பாதையில் பார்வையைக் படர்த்தி தென்னைமரத்தின் மொத்தமான அடிக்குள் மறைந்து நின்றுகொண்டான். பக்கத்தில் காணப்பட்ட எறும்புப் புற்றில் இருந்து அங்குமிங்கும் ஊர்ந்துகொண்டிருக்கும் எறும்புகள் காலில் ஏறி விடாமல் காலை ஒடுக்கி, ஒடுக்கி வைத்துக் கொண்டிருந்த அவனது கண் வலைக்குள், பொட்டுக்கூடாக தலையை விட்டு 'நாக்கிளிப் பாம்பை'ப் போல் உடம்பை வளைத்து சின்னராசா வரும் காட்சி அகப்பட்டது.

''கோப உணர்ச்சியின் உந்தலால் துருதுருத்த கைகளை ஒன்றோடொன்று உரஞ்சிக் கொண்டான். ''மூதேவியார் வரட்டும்''

அகல விரிந்து நிற்கும் வாழையிலைகளின் மேல் மழைத்துளி விழுவதைப் போன்று மனதுக்குள் ஆத்திரம் சொடசொடத்தது!

தமையன் போய்விட்டான் என்ற பயமற்ற நிலையில் கைகளை வீசி நடந்து வந்த சின்னராசா தமையனின் கைக்குள் அகப்பட்டு விடுகின்றான். ( 18 ஆம் பக்கம் பாா்க்க..)

---



## என் தொலைபேசி

காலை என்
கிணுகிணுப்பில் கண் விழித்து
''பெட் கோப்பி'' தான் மறந்து
சோம்பல் படர்ந்த கைகளால் என்
பட்டன்களை
ஒவ்வொன்றாய் அழுத்தி
உசுப்பேற்ற நான்
அப்போதே பல்லைக்காட்டி
இழிக்கத் தொடங்கினேன்
ஏற்றி வச்ச சினிமாப் பாடல்
'கீதாஞ்சலி' செய்ய
''மை ரென்'' இல்
பக்கேஜில்
பலவித வடிவங்களில்
போட்டு வைத்த நம்பர்களை
ஒவ்வொன்றாய்த் தேடி
''ஹலோ'' சொல்ல
எதிர்முனையில் மென்மையாக
நானே பொறாமைப்படும் குரல்
இதமாய் ஒலிக்க
இருந்தும் படுத்தும்
எழுந்தும் நடந்தும்
கெஞ்சலும் கொஞ்சலும்
ஏச்சும் பேச்சும்
நக்கலும் நளினமும்
கொச்சைப் பேச்சுமாய்...
ஒருவாறு முடிய
எழுந்து முகம் கழுவி
உடை மாற்றித் தலைசீவி
சாப்பாடு உண்ட பின்
''பல்சரோ; பொக்ஸரோ''
எதுவென்று தெரியவில்லை
ஏதோ ஒன்றில் ஏறி
கால் நுழைய முடியாத
கச்சிதமான உடையதனில்
தள்ளிப் பொக்கற்றில்
என்னைத் திணித்து
புறப்படும் வேளையிலே
மீண்டும் என்னை வைத்து
அழைப்பொன்று தான் கிடைக்க
காற்சட்டைப் பையிலிருந்து
என்னை; என்மேனி நோக
இழுத்தெடுத்துக் கதைபேசி
புறப்பட்டு; பஸ்தரிப்படைந்து
இருக்கையிலே அமர்ந்து கொண்டு
கழுத்துப் பிடரி வாங்கு மட்டும்
என்னை உரித்து....
போட்டு வைத்த படங்களை(ச்)
சினிமாப் பாடல்களை
உற்பத்தியாளன்
வைத்துவிட்ட வசதிகளை
ஒவ்வொன்றாய் நோண்ட
''சார்ஜ்'' போன வேதனையில்
''ஐயோ ஐயோ'' என நானலற
சே! என்று சலிக்கும் உனக்கு
அலுத்துப் போக வில்லையோ?
விரல் நோக மாட்டாதோ?
காதுக்கும் கொஞ்சம் ஓய்வு கொடுக்க
மாட்டாயோ?
''பில்'' ஏற வில்லையோ?
அப்பன் வீட்டுப்
பணமென்பதால் அக்கறை
இல்லையோ?
இத்தனை திட்டுகின்றேன்
உனக்கேதும் கேட்காதோ?
ஐயோ....
உடையவன் உறங்கும் மட்டும்
இல்லை இல்லை
உறங்கி முடிந்த பின்னும்
உறங்காத கண்களோடு
உலவுகின்ற என் சோகத்தை
யார்க்கெடுத்து உரைப்பேன்?
எப்படித் தானுரைப்பேன்?

- சின்மயி (கோப்பாய்)

---

# தன் மானம் காப்பது போன்று பிறர் மானம் காத்த காவிய பாத்திரங்கள்

தன் மானம் காப்பது போன்று பிறர்மானம் காக்க வேண்டும்.

நாமெல்லாம் தன்மானம் காக்க முனைகின்றோமேயின்றி, பிறர் குறித்துக் கவலைப்படுவதில்லை.

நம்மைப் போலத்தான் பிறரும் என நினைத்துப் பிறர்மானம் காக்கப் புறப்பட்டால் தான் சமுதாயம் துலங்கும்

ராமன், பரதன், இலக்குவன், சத்துருக்கன் ஆகிய நால்வருக்கும் திருமணம் மிதிலையில் நிறைவேறிய பின்னர், மக்கள், மருமக்களோடும், நால்வகைப் படைகளோடும் தசரதன் அயோத்திக்குத் திரும்புகின்றான்.

எதிரில் ஓர் ஆள் தோளில் கோடரியோடு வருகின்றான். அவன் தான் பரசுராமன்.

நால்வகைப் படை, போதாதற்கு நான்கு வீர மக்களுடன் வருகின்ற தசரதன் எதிரில் பரசுராமனைக் கண்டதும் ஓடோடிச் சென்று பரசுராமனின் கால்களில் விழுந்து கெஞ்சுகிறான்.



''என் மகனுக்கு நீ எந்தத் தீங்கும் செய்து விடாதே!''

தசரதனின் கெஞ்சலைப் பொருட்படுத்தாது இராமனை நோக்கிச் செல்ல முற்படுகின்றான் பரசுராமன். இதைக் கண்டு தசரதன் மூர்ச்சை அடைந்தபோதிலும் அது பற்றிப் பரசுராமன் பொருட்படுத்தினானல்லன்.

''மானமுடை முடி மன்னவன் மதி சோர்வுறல் மதியா?''

இப்படிக் கேட்கிறான் கம்பன்.

மானமுள்ளவனாகிய தசரதன் மயக்கமடைந்து வி[illegible] பரசுராமன் சிறிதும் மதிக்கவில்லை.

இன்னொருத்தனின் காலில் விழுந்து கெஞ்சுகின்ற தசரதனை மானமுள்ளவன் என்று எப்படிக் கம்பரால் வர்ணிக்க முடிந்தது?

பிறகு தான் இதற்குப் பொருள் புரிகிறது.

இருபத்தொரு தலைமுறை அரசர்களை அழித்து, தனது தந்தை ஜமக்னி முனிவனுக்கு இறுதிக் கடன் செய்த பின்னர் இனிமேல் அரசர்களை அழிப்பதில்லை எனச் சபதம் செய்து தவம் மேற்கொண்டவன் இந்தப் பரசுராமன்.

அவன் இராமனுக்கு ஏதாவது தீமை செய்து விடுவானானால் அவன் தன் வாக்குத் தவறி மானங்கெட்டுப் போய் விடுவானே என்று பதறினான் தசரதன்.

அதனால் தான் புரசுராமனின் மானம் காக்க அவனது காலில் விழுந்து தவறு செய்து விடாதே எனத் தசரதன் கெஞ்சுகிறான்,

தசரதன் இவ்விதம் பரசுராமனின் மானத்தைக் காக்க முன்றதனாலே தான் கம்பர் தசரதனை மானமுள்ளவன் எனக் காட்டுகிறார்.

இராமாயணத்தில் இன்னொரு கட்டம்;

இராமன் மறைந்திருந்து அம்பு எய்ய வாலி அம்பு பாய்ந்து நிலத்தில் விழுகிறான்.

மார்பில் பாய்ந்த அம்பை வாலி தன்னிரு கைகளாலும் பற்றிக் கொள்கிறான். அம்பு உடலில் பாய்ந்து ஊடறுத்துச் செல்லும் வேகத்தைக் கண்டு வாலி நினைக்கிறான்.

''இது சிவபெருமானுடைய சூலப்படை அன்று; திருமாலுடைய சக்கரமுமல்ல; இந்திரனுடைய வாஜ்ராயுதமும் அன்று; முருகனுடைய வேலும் அன்று;''

தனது உடலில் ஆழ ஊடுருவிச் சென்ற அந்த அம்பை தனது உடலின்பின் புறத்தே இழுத்து எடுக்கிறான். அதுதான் அவனது வலிமை. அந்த அம்பில் இராமனின் பெயரைக் காண்கிறான்.

## இலக்கியக் காட்சி 31

அம்பில் இராமன் பெயரைக் கண்டதும் வாலிக்கு என்ன உணர்ச்சி வரவேண்டும்?

ஒரு தீமையை ஒருவர் செய்தால், பதிலுக்கு அவருக்குத் தீமை செய்யக் கூடிய வல்லமை இருக்குமானால் அவருக்குக் கோபம் வரும். இல்லையானால் மனவருத்தம் வரும்.

[illegible]க்கு அந்தத் தருணத்தில் கோபமும் வரவில்லை. மனவருத்தமும் வரவில்லை.

இது குறித்துக் கம்பர் என்ன சொல்கிறார் தெரியுமா?


சூரிய குலத்திலே பிறந்து, அறத்தினின்றும் வழுவாத ராமன்,மரத்தின் பின் மறைந்திருந்து அம்பு எய்த எந்தக் காரணத்தால், அறத்தில் நின்று தாழ்ந்து தன்மானம் கெட்டுப் போனானே என்று இராமனுக்காக வாலி வெட்கப் படுகிறான்.

இதைக் கம்பர்;

இல்லறந் துறந்த நம்பி
எம்மனோர்க்காகத் தங்கள்
வில்லறந் துறந்த வீரன்
தோன்றலால் வேத நூலில்
சொல்லறந் துறந்திலாத சூரியன் மரபும் - தொல்லை
நல்லறந் துறந்ததென நகைவர நாணுட் கொண்டான்
வெஃகிட மகுடம் சாய்க்கும்
வெடிபடச் சிரிக்கும்''

என்கிறார்.

அந்த நிலையிலும் தன்மானம் போல இராமனின் மானம் கெட்டுவிடக் கூடாதே



என வாலி வருந்துவதாகக் காட்டுகிறார் கம்பர்.

இதனை மனதிற்கொண்டே பாரதியாரும் தனது புதிய ஆத்திசூடியில் ''உன் மானத்தை நீ காப்பாற்றிக்கொள்'' என்று பாடாமல் ''மானம் போற்று'' என்று பாடினான்.

எவனும் தன் நிலையில் இருந்து தாழ்ந்து விடாமல், சமுதாயத்தில் நீயும் தாழ்ந்துவிடாமல் வாழவேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையிலேயே பாரதியார் ''மானம் போற்று'' என்று புதிய ஆத்திசூடியில் பாடிவைத்தார்.

★★★★★★★★★★★★★★★★

[- கம்ப கலாநிதி இரா.இராதாகிருஷ்ணனின் கம்பராமாயண விரிவுரையிலிருந்து]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆண்களைவிடப் பெண்களே புத்திசாலிகள்



ஆண்களை விடப்பெண்களே புத்திசாலிகளாக உள்ளனர் என்று லண்டனில் ஒன்லைன் மூலம் நடத்தப்பட்ட பந்தயத்தில் தெரியவந்துள்ளது.

லண்டனைச் சேர்ந்த ஒரு அறிவுபூர்வ பந்தய அமைப்பு, ஆண், பெண் இரு பாலாரில் யார் புத்திசாலிகள், அறிவுக் கூர்மையானவர்கள் என்பதை அறிய வித்தியாச மான பந்தயம் ஒன்றை ஒன்லைனில் நடத்தியது. பந்தய முடிவில் ஆண்களுக்குக் கசப்பான செய்தியே கிடைத்தது. ஆண்களைவிட பெண்கள் தான் புத்திசாலிகள் என்று முடிவு வெளியாயின.

லண்டனைச் சேர்ந்த இந்த அமைப்பு ஒன்லைனில் இந்தப் பந்தயத்துக்கு ஏற்பாடு செய்திருந்தது.

ஆங்கிலம், பிரெஞ், ஜேர்மன், ஸ்பானிஷ், டச்சு, பின்லாந்து, நோர்வே, சுவீடன், டா ஆகிய ஒன்பது மொழிகளில் இந்த போட்டித் தேர்வை நடத்தியது. இயற்கை, அறிவியல், வரலாறு, புவியியல், கலை, இலக்கியம், விளையாட்டு, பொழுதுபோக்கு அம்சம், மக்கள், முக்கிய இடங்கள் இவை சம்பந்தமாக விஞ்ஞானபூர்வ மற்ற முறையில் பொழுது போக்கான கேள்வி களைத் தயாரித்தது. மொத்தம் ஒன்றரை லட்சம் கேள்விகளை தயார் செய்திருந்தது. ஒன்லைன் மூலம் பதிலளிக்க ஒவ்வொரு கேள்விக்கும் 20 வினாடிகள் ஒதுக்கியது.

பதிலளித்த ஆண், பெண் இரு பாலாரும் மாறி மாறி கூடுதலாகவும் குறைவாகவும் பதிலளித்தனர். முடிவில் ஆண்களைவிட பெண்கள் தான் அதிக கேள்விகளுக்கு பதிலளித்திருந்தனர். பெண்கள் 40,88,139 கேள்விகளுக்கும், ஆண்கள் 40,77,596 கேள்விகளுக்கும் சரியான பதிலை அளித்திருந்தனர். பெண்கள் பொழுதுபோக்கு பிரிவில் 57 சதவீத கேள்விகளும், இயற்கை மற்றும் அறிவியல் பிரிவில் 55 சதவீத கேள்விகளுக்கும் சரியான பதிலை அளித்திருந்தனர். மக்கள், முக்கிய இடங்கள் பரிவில் 42 சதவீத கேள்விகளே சரியான பதிலை அளித்திருந்தனர். ஆண்கள் இயற்கை, பொழுது போக்கு, அறிவியல், விளையாட்டு போன்ற துறைகளில் சிறப் பாகப் பதிலளித்திருந்தனர். ★★★







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீண்ட தூரம் தாவ வல்லது - அது வெட்டுக்கிளி



செடிகளின் இளம் தளிர்களை வெட்டித் துருவி உண்பதாலும், பச்சை நிறமாக இருப்பதாலும் இதனை வெட்டுக்கிளி என்று அழைக்கிறோம். தட்டுக்கிளி மற்றும் தத்துக்கிளி எனவும் இது அழைக்கப்படுவதுண்டு.

பூச்சி இனங்களில் கணுக்காலிகள் பிரிவைச் சேர்ந்த வெட்டுக்கிளி ஆங்கிலத்தில் Grasshopper என அழைக்கப்படுகிறது. இவற்றுக்குக் கணுக்களாகப் பிரிந்த மூன்று சோடிக் கால்கள் உள்ளன. வலுவான தனது பின்சோடிக் கால்களால் எம்பி வெட்டுக்கிளி தரையிலிருந்து வெகுதூரம் தாவிக் குதிக்கிறது. செடிகளைப் பற்றிக்கொள்ள இதனது முன்னங்கால்கள் பயன்படுகின்றன.

உயிரினங்களில் அதிக தூரம் தாண்டக்கூடிய வெட்டுக்கிளிகள் தமது உடலின் நீளத்தைப்போல 500 மடங்கு தூரத்தை ஒரே பாய்ச்சலில் தாண்டத்தக்க வல்லமை படைத்தவை.

தமது இரண்டு பெரிய கூட்டுக் கண்களால் இவற்றால் அதிக பரப்பளவு தூரத்தைப் பார்க்க இயலும். பல நிறங்களின் வேறுபாடுகளைக் கண்டுணரும் தன்மை இவற்றின் கண்களுக்கு உண்டு. அடி வயிற்றுக்குக் கீழ் இருக்கும் தமது காதுகளால் சிறிய சத்தத்தைக்கூட இவற்றால் துல்லியமாகக் கேட்க இயலும்.

வேறுபாடு எதுவுமின்றிச் சகல தாவரங்களையும் ருசிபார்க்கும் தன்மை கொண்ட வெட்டுக்கிளிகளின் உமிழ்நீர் இரையை விழுங்க மட்டுமன்றி உணவு ஜீரணமாகவும் உதவுகின்றது.

இவற்றில் இரண்டு வகைகள் இருப்பதோடு, இவற்றின் நிறத்திலும் உருவத்திலும் வேறுபாடும் உள்ளன.

தனது பின் வயிற்றின் நுனியால் தரையைக் குடைந்து பெண் வெட்டுக்கிளி முட்டையிடும். வெட்டுக்கிளியின் இரத்தம் வெள்ளை நிறமானது. பறவைகள், மூஞ்சூறுகள், சுண்டெலி மற்றும் வண்டுகள் இவற்றின் எதிரிகள்.

இவை வேகமாகப் பறக்க வல்லவை. கூட்டமாகச் சேர்ந்து பயிர்களுக்கு நாசம் விளைவிக்க வல்லவை. உலகில் 65 நாடுகள் வெட்டுக்கிளிகளின் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளதாகக் கண்டறியப் பட்டுள்ளது.

★★★

# வாழ்வுக்கு ஒளி தரும் சூரியஒளியின் மகிமையோ.. மகிமை...!



மனித இனத்தின் பல தேவைகளை 'சூரிய ஒளி' பூர்த்தி செய்வதால் சூரியனைத் தெய்வமாக வணங்கும் பண்பாடு இந்துக்களின் மத்தியில் ஆண்டாண்டு காலமாக நிலவி வருகின்றது.

தற்போது நவீன விஞ்ஞானத் துறை வளர்ச்சியும் மனித உடல் நலத்துக்கு சூரிய ஒளியால் ஏற்படும் உயிரியல் விளைவுகள், மற்றும் மருத்துவ விளைவுகளைக் கண்டறிந்து வெளிப்படுத்தியுள்ளது.

மனச் சோர்வில் இருந்து விடுபடச் செய்ய, பித்தப்பையில் கல், புற்று நோய்க் கட்டிசெல்கள், நோய் எதிர்ப்பு அமைப்புக் கோளாறுகள் என்பவற்றுக்குச் சிகிச்சையளிக்க தற்போது இயற்கையான மற்றும் செயற்கையான ஒளியைப் பயன்படுத்தும் நவீன மருத்துவத் துறை அதற்கு ஒளி உயிரியல் (Photo Biology) எனப் பெயரிட்டுள்ளது. ஒளி மருத்துவம் (PhotoMedicine) என்ற பெயராலும் இச் சிகிச்சை முறை அழைக்கப்படுகின்றது.

ஒளிப்பற்றாக்குறை காரணமாக ஏற்படும் மனச்சோர்வு வியாதிக்கு பருவமாற்றப் பாதிப்புக் கோளாறு (Seasonae Attective Disorder) எனப் பெயரிட்டுள்ளது நவீன விஞ்ஞான மருத்துவத்துறை.

தோலில் வரும் ஒருவகைக் காசநோய், குழந்தைகளுக்கு ஏற்படும் மஞ்சள் காமாலை போன்றவற்றை செறிவு மிக்க ஒளி மூலம் குணப்படுத்த முடியும் என நவீன மருத்துவத்துறை கண்டறிந்துள்ளது.

விஞ்ஞானத் துறை இந்த அளவுக்கு அதி முன்னேற்றம் கண்டிராத பண்டைக் காலத்திலே வாழ்ந்த மக்கள் சூரியஒளி மனித வாழ்க்கையின் ஆரோக்கியத்துக்குப் பல்வகையில் பலன் தருகிறது என்பதை உணர்ந்திருந்ததோடு பயன்படுத்திப் பலன்பெற்று வந்துள்ளனர் என்பது ஆச்சரியம் தரும் ஒரு தகவலல்லவா?★★★

# உழைப்பே உயிர்நாடி



அமெரிக்க கோடீஸ்வரர் ரொக்பெல்லர் ஒரு சமயம் விமானத்தில் பயணம் செய்து கொண்டிருந்தார்.

அவருக்குப் பக்கத்து இருக்கையில் அமர்ந்திருந்த ஒரு இளைஞன் அவரைப் பார்த்து "ஐயா, உங்களை நான் நன்கறிவேன். நீங்கள் போதும் போதும் என்ற அளவுக்குச் செல்வம் சேகரித்து விட்டீர்கள். உங்களுக்கு எந்தவித கவலையோ தொல்லையோ இப்போது இருக்க இயலாது. இருந்தாலும், இவ்வளவு முதுமையிலும் இவ்வளவு சுறுசுறுப்பாக நீங்கள் செயற்பட வேண்டியது தேவைதானா? ஓரிடத்தில் அமைதியாக காலத்தைக் கழிக்கலாமல்லவா?" எனக் கேட்டானாம்.

அதைக் கேட்டுப் புன்முறுவல் பூத்த ரொக்பெல்லர் "இப்பொழுது நாம் பயணிக்கும் இந்த விமானம் இத்தனை ஆயிரம் அடிகள் உயரத்தில் வெற்றிகரமாகப் பறந்துகொண்டிருக்கிறதே. இதன் இயந்திரங்களை இப்போது நிறுத்தி விட்டால் என்ன நடக்கும்? விமானம் விபத்துக்கு உள்ளாகித் தரையில் மோதி நாம் சகலரும் இறந்துவிட நேருமல்லவா? நமது வாழ்க்கையும் ஒரு விமானப் பயணம் போன்றதுதான். நாம் என்று உழைப்பை நிறுத்திவிடுகின்றோமோ அன்றே நமது உடலும் மனமும் சீர்கெட்டு விடும். நமது மனதைவிட்டு மகிழ்ச்சியும் அமைதியும் அகன்றுவிடும். நமது உடலைவிட்டு ஆரோக்கியம் போய், மரணம் என்ற விபத்துக்கு நாம் உள்ளாக நேரிடும்" எனக்கூறினாராம்.

விடாமுயற்சியும், ஊக்கமும், சுறுசுறுப்புமே மனிதனுக்கு வெற்றியைப் பெற்றுத்தரும் என்பதற்கு ரொக்பெல்லர் போன்ற உழைப்பாளிகளின் வாழ்க்கை முன்னுதாரணம் அல்லவா?★




# தமிழ்த் தென்றலின் செவ்வாய் தோஷத்தைப் போக்கிய செவ்வாய்கள்

தமிழ்த்தென்றல் வி.கல்யாணசுந்தர முதலியார் ஒரு சமயம் தமிழ்நாட்டிலுள்ள பெண்கள் உயர் நிலைப் பள்ளியின் தமிழ் மன்ற விழாவில் சிறப்புச் சொற்பொழிவாற்ற அழைக்கப்பட்டிருந்தார்.

விழாவுக்கு வருகை தந்த அவரை கல்லூரி மாணவிகள் சம்பிரதாயபூர்வமாக வருக, வருக, நீண்டகாலம் வாழ்க, வாழ்க என வாழ்த்தி வரவேற்றனர்.

நிகழ்வின் உரையாற்ற எழுந்த வி.க, "எனக்குச் செவ்வாய் தோஷம் இருப்பதாகச் சோதிடர் சொல்லியுள்ளார். ஆனால் இத்தனை 'செவ்' வாய்கள் என்னை வாழ்த்தி வரவேற்கும்போது அந்தச் செவ்வாயால் என்னை என்ன செய்து விட முடியும்?" எனக் கூறித் தன் உரையை ஆரம்பித்தார். 'செவ்'வாய்களின் சிரிப்பு அடக்க நீண்டநேரம் ஆயிற்று.★



# மழலைமொழிக்கு மயங்காதார் யாரோ?



குழந்தைகளின் மழலைப் பேச்சைக் கேட்டு மயங்காதவர் எவருமில்லை யல்லவா?

ஒரு வாத்தியக் கருவியை இயங்கும் திறன் படைத்த ஒருவருடன் நெருங்கிப் பழகினால் நாம் அந்த வாத்தியத்தை இயக்கக் கற்றுக் கொள்ளலாம்.

அதே போன்று தான் எந்தவொரு துறையிலும் திறமைமிக்க ஒருவரிடமிருந்து நாம் அவரது திறனைக் கற்றுக் கொள்ளலாம்.

ஆனால் குழந்தைகளோடு எவ்வளவு தான் பழகினாலும், எவ்வளவு நேரத்தைத்தான் அவர்களுடன் செலவழித்தாலும் எம்மால் அவர்கள் போன்று மழலை மொழியைப் பேச இயலாது.

அதனாற்றான் குழந்தைகளின் மழலைப் பேச்சில் எமக்கெல்லாம் அவ்வளவு ஒரு மயக்கம். ★★★★★★★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# AMW வாகனச் சந்தை யாழ்ப்பாணத்திற்கு வருகிறது

## AMW Auto Fair

**2010 மார்ச் 16 முதல் 18 வரை**
துரையப்பா விளையாட்டரங்கில் (யாழ்நகர்)
காலை 9.00 முதல் மாலை 6.00 வரை

- புத்தம்புதிய கார்கள் (சுசூக்கி மாருதி, சுசூக்கி, நிஸான்), மோட்டோர் சைக்கிள்கள், படகு மோட்டோர்கள் (யமஹா), திரீ வீலர்கள் (பியாகியோ), திறாக்டர்கள் மற்றும் பஸ்களை (ஐஷர்) கொள்வனவு செய்யுங்கள்.
- சுசூக்கி மாருதி, சுசூக்கி மற்றும் நிஸான் கார்களுக்கு இலவச பரிசோதனை அறிக்கைகள்.
- சுசூக்கி மாருதி கார்களுக்கான விசேட பரிமாற்ற வசதி.

மற்றும்

- புதிய வாகனங்களின் கொள்வனவுக்கு விசேட லீசிங் வசதி.
- டயர்கள் மற்றும் ஒயில் வகைகள் விசேட கழிவு விலைகளில் வழங்கப்படும்.
- உத்தரவாதம் கொண்ட பதிவு செய்யப்பட்ட வாகனம்
- இன்னும் பல

## புதிய வாகனம்

வாங்கும் உங்கள் கனவு நனவாக இருக்கிறது

இலவசமாக

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்படும்

**இன்றே பதிவு செய்யவும்**

* நிபந்தனைகளுக்கு உட்படும்

SUZUKI MARUTI Count on us | SUZUKI | NISSAN | RENAULT | EICHER | YAMAHA | bp | Pitstop | Castrol | GOODYEAR | PIAGGIO | AMW CAPITAL LEASING | automall

அழையுங்கள்
விராஜ் 077 2245719

அசோசியேட்டட் மோட்டர்வேய்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்
Web : www.amwltd.lk
E mail : maruti@amwltd.com
For Trade-in offer login to : www.amwtradein.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பீடைகளைத் தாக்கி அழிக்கும் பக்றீரியாக்கள்

## விவசாயிகளுக்கு இயற்கை தந்த கொடைகளில் ஒன்று

பசுமைப்புரட்சியின் பக்க விளைவுகளுள் ஒன்றான பீடையெதிர்ப்புத் தன்மையை இழந்தமை முக்கியமான ஒன்று என சென்ற கட்டுரையில் பார்த்தோம். ஒன்றை உள்வாங்கும் போது அதாவது அதிகரித்த விளைச்சலை அடையும் போது இன்னொன்றை அதுவும் பீடை எதிர்ப்புத்தன்மையை இழந்தமை, எம்மையறியாமலேயே எதிர்பாராதவாறு நடந்த நிகழ்வென்றாலும் அதற்கு கொடுக்கப்பட்ட விலை அதிகமே. அன்றிலிருந்து இன்று வரை பீடைநாசினிப் பாவனை இல்லாத விவசாயம் எங்கும் என்றும் இல்லையென்றாகிவிட்டது. ஒருபுறம் பீடைநாசினிகளுக்கான செலவு அதிகரித்துச் செல்ல இன்னொரு புறம் அவற்றினால் நமது சூழலை வருந்தியழைத்து மாசுபடுத்திய நிகழ்வு வரலாற்றுத் தவறாக, இரண்டுமே விவசாயத்தில் வரவு வைக்கமுடியாத செலவாக ஆகிவிட்டன. ஒரு கட்டத்தில் 65% ஆன விவசாய உற்பத்திச் செலவு பீடைக்கட்டுப்பாட்டுக்கே முதலிடப்பட்டது என்றால் பாருங்களேன்.

இந்தச் செலவினங்களெல்லாம் பட்டினியால் வாடி வதங்கிய உயிர்களைக் காப்பாற்ற உற்பத்தி செய்த உணவுக்கு ஈடானதாக இருந்தமையினால் பெரிய அளவில் கணக்கிலெடுத்துக் கொள்ளப்படவில்லை. பீடைநாசினிக்கான



செலவு ஒரு பொருட்டாகவே எடுத்துக்கொள்ளப்படாவிடினும் இருந்த பீடை நாசினிகளுக்குக் கூட எதிர்ப்புடையனவாக பீடைகள் விருத்தி பெற்று பல்கிப் பெருகியமை விஞ்ஞான உலகத்துக்கு விடுக்கப்பட்ட ஒரு சவாலாகவே அமைந்தது. இயற்கையை, அதன் எழிலைப் பாதுகாக்கும் அதே வேளையில் பீடைநாசினிகளுக்கு எதிர்ப்புத் தன்மைகொண்ட பீடைகளை எவ்வகையாயினும் கட்டுப்படுத்தியே ஆக வேண்டும் என்னும் சமூகப் பொறுப்பு வேளான் விஞ்ஞானிகளுக்கு எழுந்தது. இதற்கு விடைகாண கைகொடுத்தது, வரப்பிரசாதமாகக் கிடைத்த உயிர் தொழில்நுட்பம். அதனால் தான் உயிர் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் மரபணு இயந்திரவியல் தொழில் நுட்பங்கள் பரந்து பட்ட அளவில் கண்டு பிடிக்கப்பட்டன. ஆரம்பத்தில் இத்தகையவற்றைத் தொழில்நுட்ப சாகச நிகழ்வுகளாகவே மக்கள் கருதினர். ஆனால் நாள்கள் செல்லச் செல்ல அவற்றின் நம்பிக்கைத்தன்மை உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் அது மக்களால் விரும்பி ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் உலகத்திலுள்ள அனைத்து மக்களாலும் அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. குறிப்பாக ஆபிரிக்க மக்களால், அந்தந்த நாடுகளிலுள்ள அரசாங்கங்களினால் மரபணு மாற்றம் பெற்ற பயிர்வகைகள் இலவசமாக வேனும் பெறப்படவில்லை. வளர்க்கப்படவுமில்லை. மரபணு மாற்றம் செய்யும் தொழில் நுட்பம் வளர்ந்த நாடுகளுக்கானதாகவே கருதப்பட்டது. இந் நிலையில் பஞ்சம் பட்டினியால் தினந்தினம் மக்கள் இறந்து கொண்டிருந்த போதும் கூட மரபணு மாற்றம் செய்த பயிர் இனங்களை ஆபிரிக்க தேசம் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லாதிருந்ததிலிருந்து தமது சூழலை இனிவரும் சந்ததிக்கு மாசுபடுத்திக் கொடுக்க அவை விரும்பவில்லை என்றே பொருள்படுகின்றது அல்லவா? இதனைப் பசுமைப் புரட்சியின் தந்தையான ''நோர்மன் போர்லாக்'' மனம் வருந்தியே கூறியிருக்கின்றார். சென்ற வருட பிற்பகுதியில் அவர் இறக்கும் வரை உணவுப் புரட்சிக்காக நோபல் பரிசு பெற்ற 'போர்லாக்'கால் ஆபிரிக்க தேசத்தின் உணவுப் பஞ்சத்தைப் போக்க எந்தவிதமான வழிவகைகளையுமே காணமுடியவில்லை. இன்னும் கொடிய பஞ்சமும் பட்டினியும் அந்த மக்களை வாட்டி வதைத்து இன்றும் அந்த இன்னலிலிருந்து மீள முடியாது ஆக்கிவிட்டிருக்கின்றது. தேவையானளவு உணவு கிடைக்காது, சத்துணவு என எதுவுமே கிடைக்காது, எலும்புகளை எண்ணுவதற்காகவே பிறந்த பிள்ளைகளும், அவர்களுக்கு பாலூட்ட முடியாது தவிக்கும் அன்னையர் என உயிர்வதை அங்கேதான் நடைபெறுகின்றது. இந்த நூற்றாண்டில் விஞ்ஞானம் இந்த அளவுக்கு வளர்ந்திருந்தும்கூட இப்படியொரு அவலநிலை, துன்பியல் நிகழ்வு, மனித இனத்துக்கேயான சாபக்கேடாக நடந்து கொண்டிருப்பதை அறிய எந்தக் கல்மனமும் ஒரு கணம் இளகும். இவை எல்லாவற்றுக்கும் மேலாக இயற்கையின் சீற்றங்களும் இம்மக்களை மேலும் வதைத்துப் பார்க்கிறதே! வரட்சியின் கோரப்பிடிக்குள் சிக்கி உழலும் இம் மக்களைப் பயிர்களில் வரும் அதிகரித்த பீடைத்தாக்கம் இன்னும் சொல்லொணாச் சோதனைகளுக்கும் வேதனைகளுக்கும் ஆக்கி விடுகின்றன.

ஆபிரிக்க தேசம் பற்றிக்கொள்ள மறந்ததை, மறுத்ததை உலகத்தின் ஏனைய மக்கள் பயன்படுத்திக் கொண்டனர். மரபணு மாற்றம் எனும் தொழில்நுட்பம், வித்திலிருந்து விருட்சமாகியது போல பூதாகாரமாக உருவெடுத்தது. இந்தத் தேவை கருதிய மாற்றத்தைத் தமதாக்கிக் கொண்டு அந்த வெற்றிக் கனியைச் சுவைத்தனர், வளர்ந்த நாடுகளில் அடித்தளத்தைக் கொண்டு அங்கும் இங்குமாகத் தமது கிளைகளைப் பரப்பி வளர்ந்தெழும்பிய பெரிய கம்பெனிகள். இவற்றுள் குறிப்பிடத்தக்க நிறுவனம் 'மொன்சன்ரோ'' (MONSANTO) எனும் அமெரிக்க அடித்தளத்தைக் கொண்ட, ஆய்வினை அடிப்படையாகக் கொண்ட பன்னாட்டு நிறுவனம்.

### விவசாயத்துறையில் நவீன தொழில்நுட்ப முன்னேற்றங்களும் எதிர்கொள்ளும் சவால்களும் 3

இந்நிறுவனத்திற்கு ஏன் இந்தளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும்? இவர்களின் செயற்பாடுகள் என்ன என்பதை மரபணு மாற்றம் எவ்வாறு நிகழ்ந்தது என்பதைப் பற்றி அலசிய பின்னர் விலாவாரியாகப் பார்ப்போம்.

**மரபணு மாற்றம் எவ்வாறு சாத்தியமானது?**

தாவரங்களில் நோயை உருவாக்குவதில் பல வகையான நுண்ணங்கிகளின் பங்கு உண்டு. இவற்றுள் பங்கசு, பக்றீரியா, புரொட்டசோவன்கள், வைரசுக்கள் எனப் பல உண்டு. இந்த வகையிலே பக்றீரியாக்களினது தாக்கம் ஏனைய நுண்ணங்கிகளிலிருந்து மாறுபட்டதாகவே காணப்படுகின்றது.

பக்றீரியாக்களுள் அக்ரோபக்றீரியம் ரியூமிபேசியன்சு (Agrobacterium tumifaciens) எனப்படுவது தாவரங்களுள் தொற்று ஏற்படுத்தி அதன் மூலம் சிறிய பெரிய கழலைகளை ஏற்படுத்துகின்றது. இந்தக் கழலைகளை மனிதனில் ஏற்படும் புற்றுநோய்க்கு ஒப்பிடலாம். நோய்த் தொற்று ஏற்பட்ட தாவரக் கலங்கள் தொடர்ச்சியாகப் பிரிந்து செல்வதையே இங்கு புற்று நோய்க்கு ஒப்பிடலாம். இவ்வாறு தொடர்ச்சியாக கலங்கள் பிரிவதன் மூலமாகவே கழலை போன்ற அமைப்பு தாவர பாகங்களுள் தோன்றியது. இதுவே பின்பு மரபணு இயந்திரவியல் முறைக்கு ஏற்புடையதான வாகனம் (Vehicle) ஆகியது.

**பி.ரி.(B.T) பக்றீரியா**

இயற்கையன்னை தந்த வளங்களுள் முக்கியமானதாக பசிலசு துரொன்சியென்சிசு என்னும் ஒருவகை மண்ணில் வாழும் பக்றீரியாவைக் குறிப்பிடலாம். விவசாயிக்கும் ஏனையோருக்கும் நன்மைதருகின்ற இவ்வகை பக்றீரியாக்கள் பயிர்களில் சேதத்தை ஏற்படுத்தும் பூச்சிப் பீடைகளை இயற்கையாகவே கட்டுப்படுத்தும் திறனுடையதாகின்றன. Bacillus thuringiensis என்னும் இருசொற் பெயரீட்டின் முதலெழுத்துக்களைப் பயன்படுத்திப் பெயரையும் சுருக்கி B.t என இப்பக்றீரியாக்களை அழைப்பார்கள்.

ஆரம்ப காலங்களில் இப் பக்றீரியாக்களை இனம்பெருக்கி பூச்சிப் பீடைகளைக் கட்டுப்படுத்துவதற்காகப் பயன்படுத்தினர். வளர்ந்த நாடுகளில் இவ்வகையான பக்றீறியாக்களைப் பயன்படுத்தி சிறந்த பீடைக் கட்டுப்பாட்டை மேற்கொண்டு வெற்றிகரமானதாக ஆக்கியிருக்கின்றனர். குறிப்பாக வெட்டியுண்ணும் வாயுறுப்புக்களுடைய கொலியொப்தீரா (Coleoptera) லெப்பிடொப்தீரா (Lepidoptera) மற்றும் டிப்தீரா (Diptera) ஆகிய வருணங்களுள் உள்ளடங்கும் பூச்சிப் பீடைகளைக் குறிவைத்து தாக்குவனவாக இவை உள்ளன. மேற்படி வருணங்களுள் சேதத்தை ஏற்படுத்தும் உண்ணும் பருவ நிலைகளான குடம்பியும் நிறைவுடலியுமாக தாவரத்தை வெட்டி உண்ணும்போது உணவினூடாக இப்பக்றீரியாக்கள் உட்செல்லுகின்றன. உணவுக்கால்வாயின் இரைப்பையில் இப்பக்றீரியாக்களின் தொழிற்பாடு, அவற்றின் உறை கிழிதலிலிருந்து ஆரம்பிக்கின்றது. தடித்த புரதத்திலான பக்றீரியாவின் உறை பிரிந்தழிவதற்கு அதற்குரிய காரத்தன்மையுடையதாக இரைப்பை இருந்தால் மட்டுமே பிரிந்தழியும். இதிலிருந்து ஒன்றை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எமது இரைப்பையில் அமிலத்தன்மை இருப்பதுவும் எமக்கு எம்மை இவ்வாறான பக்றீரியாக்களிலிருந்து அவற்றின் சேதத்திலிருந்து விடுபட உதவும். இதுவும் இயற்கையின் அன்புப் பரிசன்றோ! ஆக மொத்தத்தில் பி.ரி.பக் றீறியாவினால் எமக்குத் தீங்கு இல்லை.


தனித்துவமான இவ்வாறான பக்றீரியாக்களின் செயற்பாடுகளை விஞ்ஞான உலகம் கண்டுபிடித்ததால் உயிரியல் கட்டுப்பாட்டில் புதிய புதுமையான விதத்தில் பூச்சிப் பீடைகள் கட்டுப்படுத்தப்பட்டன. இயற்கையை அனுசரித்ததான இவ்வித கட்டுப்பாட்டை சிறப்புடையதாகவே எம்மவர்கள் நோக்கினர். இதுவே மரபணு மாற்றத்தை ஏற் படுத்துவதற்கான வழியையும் தேடித்தந்தது. அந்த வழி எதுவென்பதைத் தொடர்ந்து பார்ப்போம்.

(வளரும்)



-கலாநிதி: கு.மிகுந்தன்-
தலைவர், விவசாய உயிரியற்றுறை,
விவசாயபீடம், யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாண்புமிகு ஜனாதிபதியின் நேரடி வேட்பாளர்

எதிர்வரும் பொதுத் தேர்தலில் உங்களதும் உங்கள் எதிர்காலச் சந்ததியினரதும் வளமான எதிர்கால வாழ்வை நீங்கள் தீர்மானிக்கவுள்ளீர்கள்.

யாழ் மண்ணில் பிறந்து வளர்ந்த எனக்கு இங்கு வாழ்ந்த மக்கள் தமது காணி, பூமி, சொந்தங்களை இழந்து அனுபவித்த சொல்லொண்ணா துயரங்களை நன்கு அறிவேன். நான் உலகின் பல்வேறு பாகங்களுக்கு பயணம் செய்து அங்குள்ள தொழிநுட்ப வளர்ச்சியை அறிந்துள்ளேன்.வெளிநாட்டில் பட்டப்படிப்பை முடித்து அங்கு எனக்கு நிலையான வதிவிட உரிமை இருந்தும் அங்கு தங்காமல் மீண்டும் எனது நாட்டிற்கு திரும்பியதன் நோக்கம் எனது கல்வி அறிவு, அனுபவம், திறமைகளைக் கொண்டு எனது மக்களுக்கும், இளைய சமுதாயத்திற்கும் எனது மாவட்டத்திற்கும் சேவை செய்வதை இலட்சியமாகக் கொண்டே.

நீங்கள் உங்கள் பெறுமதிமிக்கப் பொன்னான வாக்குகளை வழங்கும் முன்பாக உங்கள் பொருளாதார முன்னேற்றத்தையும், சமூக மேம்பாட்டையும் முன்னிறுத்தி சற்று நிதானமாகச் சிந்தித்துப் பாருங்கள்.

✣ வடக்கு மக்கள் இன்று சுவாசிக்கும் சுதந்திரக் காற்றுடன் தமது சமூக மேம்பாட்டையும், கல்விவளர்ச்சியையும், இன்று போட்டி போட்டுக்கொள்ளும் சந்தைப் பொருளாதாரத்தின் மத்தியில் பல்கலைக்கழக மாணவர்கள் தமது திறமையை முன்னிறுத்தி வேலை வாய்ப்பு வசதிகளைப் பெற்றுக் கொள்வதும் எமது சமூக வளர்ச்சிக்கு இன்றியமையாதது மட்டுமன்றி அது காலத்தின் தேவையுமாகும்.

✣ இன்று யுத்தத்தினால் சீரழிந்து போயுள்ள யாழ் வாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்கு இன்று கிடைத்துள்ள அரிய வாய்ப்பை நாம் எல்லோரும் சரியான முறையிலும் புத்திசாதுர்யத்துடனும் பயன்படுத்திக் கொள்வது நமது எதிர்காலச் சந்ததியினரை சரியானதும் தீர்க்கமானதுமான பாதையில் இட்டுச் செல்லும்.

✣ என்னிடமுள்ள உள்நாட்டு வெளிநாட்டு வலையமைப்புத் தொடர்புகளைக் கொண்டு எனது சொந்த முயற்சியுடன் இது வரை எவரும் முயலாத ஒரு புதிய செயற்றிறன் மிக்க நிருவாகக் கட்டமைப்பை உருவாக்கி புலம் பெயர் வாழ் மக்களின் அனுசரணையுடன் பெறப்படும் நிதி, வளங்கள், மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு புத்தி ஜீவிகளின் அறிவு, அனுபவம், நிருவாகத்திறன் போன்றவற்றை ஒருங்கிணைத்து சகலரின் பங்களிப்புடனும் இச் செயற்றிறன் மிக்க கட்டமைப்பை திறன்பட இயங்கச் செய்வதன் மூலம் யாழ் மாவட்ட அபிவிருத்தியை மாசற்ற முறையில் கொண்டு செல்வதே எனது பிரதான நோக்கமாகும்.

✣ நமது இன்றைய காலத்தின் கட்டாயத் தேவை யாழ் வாழ் மக்களின் பொருளாதார அபிவிருத்தி, வாழ்க்கைத் தர முன்னேற்றம், கல்வி வளர்ச்சி, வேலைவாய்ப்பு, புதிய உட்கட்டுமான வசதிகள், வீடமைப்புத் திட்டங்கள்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் துணிவுடனும், நிரம்பிய எதிர்பார்ப்புடனும் பல அபிவிருத்திக் திட்டங்களை ஆரம்பித்துள்ளதை நீங்கள் நன்கு அறிவீர்கள். மேலும் வெற்றி நடைபோட இத்தேர்தலிலும் உங்கள் பங்களிப்பு மிகவும் அவசியம்.

மக்கள் சேவையே எமது தேவை. உங்கள் பெறுமதிமிக்க வாக்குகளைத் தந்து சுபீட்சமான வாழ்வை எதிர்பாருங்கள். இளைய தலைமுறையினருக்கு நல்வாழ்வு அவசியமல்லவா! பண்பு மிக்க தமிழ் மக்களே நீங்கள் இன்று ஒரு மூலையில் ஒதுங்கி வாழவில்லை, நாடு முழுவதும் பரந்துபட்டு சகோதரத்துடனும் சம நோக்குடனும் வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள்.



மேலும் உங்கள் வாழ்வு மிளர மங்கலப் பொருளான வெற்றிலைச் சின்னம் இலக்கம் 1 ற்கு வாக்களித்து உங்கள் எதிர்கால வாழ்க்கையை வளமாக்குங்கள்.

இ. அங்கஜன்

திரு.அங்கஜன் இராமநாதன்

சிந்தித்துச் செயற்படுவோம், நாளை நமதே, வெற்றி எமக்கே.



## அங்கஜன் இராமநாதன்


**Angajan Ramanathan** B.ENG (HON), MBA

இளமைத்துடிப்பு செயற்றிறன்

www.angajanramanathan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 103



அனுப்புபவர் பெயர்:..............................

விலாசம்:..............................

..............................

கையொப்பம்:..............................

### இடமிருந்து வலம்

1. அளவுக்கு அதிகம்.
6. சேர்
7. இது ஆளைக் கெடுக்கும் கெட்ட பழக்கம்.
8. பலவல்ல
9. இந்திரலோக ஆடல் அழகி.
11. ஓர் இராசி.
12. கூற்றுவன்
14. நல்ல
15. திருமணமாகாத பெண்.
17. ஒரு கிழமை/ ஒரு கிரகம்.
18. விவாதித்தல்.
20. விஷ்ணு/ கிருஷ்ணன்.
22. மண்ணுக்கு முந்தியது.
23. சிதம்பரம்.
24. மனைவி.

### மேலிருந்து கீழ்

1. தமிழ் எழுத்தின் தொடக்கம்.
2. வலு/ சக்தி.
3. அதிக.
4. அடிக்கடி தொற்றும் நோய். சளியுடன் தொடர்புடையது.
5. ஓர் பிரபந்த வகை
8. தலை
10. சிறுவன்
13. ஆறறிவுடையவன்
15. பழுத்தல்.
16. பிரச்சினை.
17. மீளாத்துயிலுக்குரிய இடம்.
21. ஒன்றைப்பிடிக்க விரிப்பது.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத்தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 101 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) அவகாசம் (5) பாவி (7) கடந்து (8) கடல் (9) திக்குதல் (11) பாதி (12) கரும் (14) வணிகம் (16) பசளி (19) தம்பதி (21) பாபா (23) அம்புலி (24) பொடுகு

**மேலிருந்து கீழ்**

(1) அகம்பாவம் (2) வட (3) காந்தி (4) சதுக்கம் (5) பாடல் (6) வில் (8) கதம்பம் (10) குரு (13) ஒளி (15) கரும்பு (17) சமிபாடு (18) குதி (19) தம் (20) பலி (22) பாகு

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 101 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு** க. ரகுராமன், யேகமனை, இளவாலை.

**2 ஆம் பரிசு** வே. குமாரசுவாமி, கட்டைவேலி, கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

**3 ஆம் பரிசு** இ. ரஜிந்தன், க.பொ.த (உயர்தரம்) 2010, யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்

**4 ஆம் பரிசு** இ. சிவப்பிரியா, இல: 22/5, புகையிரத வீதி, கண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

**5 ஆம் பரிசு** வே. ஒ. செல்வப்பிரகாசநாயகம், வட்டுவினி ஒழுங்கை, இணுவில் மேற்கு, இணுவில்.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப்பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 103**
நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 17.03.2010 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.101இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 21.03.2010 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

### பாராட்டுப் பெறுவோர்

(1) **திருமதி ப. தயாபரன்**
இல. 272, ஆனந்தன் வடலி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

(2) **சோ. லோகேஸ்வரி,**
கலம்பரை, கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

(3) **க. ராகுலன்,**
தரம் 10D, யாழ். இந்துக்கல்லூரி. யாழ்ப்பாணம்.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

# ஒரு குலை....

( 11 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

கனகசிங்கத்தின் கைகள் பிடிச்சிராவியாகி அவன் கழுத்தை நெரிக்கும் உக்கிரம் பொறுக்கமாட்டாமல் அவன் கழுத்தை மேலே மிதத்தித் தலையை அப்படியும் இப்படியும் ஆட்டியபடி, தலைக்கு மேலால் தன் கைகளை உயர்த்தி தமையனின் பிடரியைக் கட்டிக்கொண்டான்.

கால்கள் ஒன்றையொன்று பின்ன இருவரும் தடக்குப்பட்டு கீழே விழுந்து உருண்டனர். கனகசிங்கம் தம்பியின் தலைமயிரைப் பிடித்து உலுப்பினான்.

''இனிமேல் பட்டம் சொல்லுவியோடா........''

''நீ விடு என்னை.......''

''பட்டம் சொல்ல மாட்டேன் என்று சொல்லு''

''இல்லை.... நான் சொல்லேலை......''

''ஒரு நாளும்......?''

கனசிங்கத்தின் பிடி நெகிழ, எழுந்து தன் காற்சட்டை நாடாவை இழுத்துச் சொருகிக் கொண்டே ஓடிய சின்னராசா பின்னரும் கத்தினான்.

''சொத்தி''

''சொத்தி''

''சொத்திக் காலன்''

கையில் கிடந்ததைப் பறிகொடுத்துவிட்ட ஏமாற்ற நிலையில் அவனையே பார்த்துக்கொண்டு பேசாமல் நின்றவனின் பார்வை எதிரில் வந்து கொண்டிருந்த பக்கத்துவீட்டு முருகுவின் இடத்துக்கு திசைமாறியது.

முருகு காற்சட்டையின் இரண்டு 'பொக்கெட்'களிலும் நிரம்பிய போளைகளோடு, சலிக்......சலிக்...... என்ற சத்தம் எழும்பக் கூடியவாறு நடந்து வந்தான்.

* * *

போளை அடித்து விளையாடும் மும்முரத்தில் கனசிங்கத்தின் ஆத்திரம் எல்லாம் மறைந்துபோக அவனது கவனமெல்லாம் இப்போ விளையாட்டில் வெற்றி பெறுவதிலேயே திரும்பி நின்றது. அவன் கீறப்பட்ட கோட்டுக்குப் போய் குனிந்து அடிப்பதிலும், பின் திரும்பி வந்து ''குண்டு'' க்குப் பக்கத்தில் இருப்பதிலும் ஈடுபட்டிருந்தான்.

''கட்டு......கட்டு''

''கோட்டிலை கால் முட்டாமல் விடு''

''சலீர்.......''

போளைகள் சிதறிப் பறக்கின்றன! ஒவ்வொரு தடவையும் முருகுவின் அடிகள் தவறிவிட கனகசிங்கம் வெற்றி பெற்று விடுகின்றான். மனக்கிணற்றிலே மகிழ்ச்சிப் பாசிகள் சூழ்ந்து மிதக்கின்றன.

முருகு கொண்டு வந்த அத்தனை போளைகளையும் தோற்று விட்டு, பின்னரும் எடுத்துக்கொண்டு வருவதற்காக வீட்டுக்குப் போவதை இடுப்பில் கையை வைத்தபடியே நிமிர்ந்து நின்று பார்க்கும் அவனது எண்ணம்எல்லாம் போளைகளைச் சுற்றியே சுழல்கின்றது.

''அங்கை பேணிக்கை இருக்கிறது. முப்பத்தேழு..... இஞ்சை எல்லாமாகப் பதினெட்டு.... அப்ப முப்பத்தேழும் பத்தும் நாப்பத்தேழு எட்டும் அம்பத்தைஞ்சு. இனிக் கொண்டாற எல்லாத்தையும் வெண்டு போட்டால் அவனுக்கே விலைக்கு விக்கலாம். புதிசு ஒண்டு ஒரு சதம். சொறிப்போளையெண்டால் ரெண்டு'

'ம்.... ஆள் வாறார், வாறார்....'

தோற்றுப்போய் விட்ட அவமான உணர்வில் முருகு புதிய சட்டங்களைக் கிளப்பினான்.

'கோடு கிட்டவாய்ப் போச்சு. கொஞ்சம் தூரக் கீறவேணும். நீ அப்போதையெல்லாம். 'பிஸ்றியா வைச்சு அடிச்சனி'

'ஓ.... நீ வேணுமெண்ட அளவு தூரக்கீறு....'

புதியகோடு கீறப்பட்டு விளையாட்டு மீண்டும் ஆரம்பமாகியது. முருகு வெறிபிடித்தவன் போல பாய்ந்து அடித்தபோதும் அவனது அடி ஒன்றாவது படவில்லை.

கனகசிங்கம் நொண்டி, நொண்டி ஓடி அடித்து போளைகளின் எண்ணிக்கையை [illegible] கூட்டிக் கொண்டான்.

முருகு வைத்திருந்த கடைசிப் போளையையும் கோட்டை விட்டு விட்டான்.

'உன்ரை கைமாபிளைத் தா...'

'இந்தா....'

அந்தக் கத்தரிப்பூப் போளையாலாவது அடித்து வென்று விடலாம் என்ற முருகுவின் நம்பிக்கை, போளை நொருங்குவதுபோல் சிதறிப்போய்விட்டது. கடைசிப் போளையையும் கனகசிங்கம் அடித்து எடுத்துக்கொண்டு விட்டான்.

முருகுவின் கண்கள் ஆத்திரத்தால் எரிச்சலெடுத்துச் சிவந்தன.

கனகசிங்கம் எல்லாப் போளைகளையும் எடுத்து இரண்டு கைகளாலும் அளைந்து எண்ணிப் பார்க்க முருகு ஆற்றாமையோடு அவனைப் பழிக்கத் தொடங்கினான்.

'நீ அளாப்பி வெண்டுபோட்டாய். எனக்குத் தெரியாது. என்ரை போளையெல்லாம் தந்து போடவேணும்.'

'நான் ஏன் தருவான். நான் முறையாத்தான் விளையாடினன். அளாப்பினால் அப்போதை நீ சொல்லியிருக்கவேணும்'

'போடா அளாப்பியா. சொத்தியா....'

'நீதான்ரா அளாப்பி..... குளாப்பி'

முருகுவின் கண்களின் நீர் முட்டி நின்றது.

கனகசிங்கம் மீண்டும் போளைகளைக் கைக்குள் வைத்து அளைய முருகு எட்டித் தட்டிவிடுகிறான்.

போளைகளெல்லாம் சிதறிப் பறக்க அவற்றைப் பொறுக்கக் குனியும் முருகுவிற்கும் அவனுக்கும் சண்டை மூளுகிறது.

'தாடா சொத்தியா... விர்றா சொத்தியா'

'நான் விடன்'

'எளிய சொத்தியா?'

எங்கிருந்தோ பாய்ந்து வந்த சின்னராசா முருகுவைப் பிடித்து இழுத்துத் தமையனை விடுவிக்க, முருகு சின்னராசாவின் தலைமயிரைப் பிடித்து அவன் முகத்தில் குத்தினான்.

இரண்டுபேரும் கட்டிப் பிடித்து உருண்டு [illegible]

'நான் [illegible] பார்த்துக் கொண்டுதான்ரா நிண்டனான். அண்ணை முறையாத்தான் விளையாடி வெண்டவர்.'

'போடா... நீ கொண்ணைக்காக நாயம் பேசவேணாம். எளிய சொத்தியன் அளாப்பி....'

'இனிச் சொத்தியன் எண்டு சொன்னியோ உன்ரை மண்டையை நொருக்கிப்போடுவன்'

'சொத்தி'

'சொத்தி'

சின்னராசா முருகுவின் முகத்தில் குத்திவிட, அவன் ஓடிப்போய்த் தூர நின்று கல்லால் எறிந்து, சின்னராசாவின் நெற்றியில் காயத்தை உண்டாக்கிவிட்டு ஓடிவிட்டான்.

'முகத்தில் வடியும் இரத்தத்தைக் கனகசிங்கம் துடைத்தான்.

வடுகன் வரட்டும். பாக்கிறன்.'

* * * *

தமையனும் தம்பியாரும் போளை அடித்து விளையாடுகிறார்கள்.

போளையடியில் மட்டும் கனகசிங்கத்தை மிஞ்ச யாருமில்லை என்ற அளவுக்கு அவன் விண்ணன். சின்னராசா தனது போளைகளைத் தமையனிடம் தோற்றுவிட்டான்.

'அண்ணை' ரெண்டு போளை கடன் தராயோ?'

'முந்தி வாங்கின கட்னைத் கொண்டா, இனித்தரமாட்டன்.'

'தராயோ?'

'இல்லைப்போ.'

'தா எண்ணுறன். ஒண்டெண்டாலும் தா'

'ஒண்டும் தரன்'

'போடா சொத்தியா'

'இஞ்சை பட்டம் தெளிச்சுத்தான் காலமை என்னோடை கொழுவினனி... இப்ப பேசாமல் போய் உன்ரை அலுவலைப்பார்'

'சொத்தியா'

'சொத்தி'

'சொத்தி'

ஓடி ஓடிக்கொண்டே சின்னராசா கத்துவது கனகசிங்கத்தின் செவியில் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து மோத, அவனது மனதில் பழையபடி வேதனை நெருப்பு மூண்டது.

'நீ வா உனக்கு அவன் எறிஞ்சது பத்தாது. இனி நான் நொருக்கிறேன். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

கொழும்பை தலைமையகமாகக் கொண்ட தனியார் நிறுவனம் ஒன்றிற்கு யாழ்.மாநகர சபை எல்லைக்குள் அலுவலகப் பாவனைக்காக சிறிய கடை அல்லது சிறிய வீடு ஒன்று உடனடியாகத் தேவை.

தொடர்பு: S.பகீரதன்,
தொ.பே.இல: 0771530130 (95507)

Affiliated with JOBSNET
Ministry of Labour Relation and Manpower

19

தபால் மூலம்
தமிழ் மொழி மூலம்

ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
Feb.2010 To July 2010

- ~ Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
- ~ Dip. In Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
- ~ Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
- ~ Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
- ~ Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
- ~ Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
- ~ Dip. in Sales & Marketing Management விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா
- ~ Dip. in Health & Hospital Management சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை முகாமைத்துவ டிப்ளோமா
- ~ Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
- ~ Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
- ~ Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**

கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு, ஹட்டன், வேருவலை மற்றும் நுவரேலியா.

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர்,முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844 / 071 803 48 48

**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:**

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)
ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st Floor, Supermarket Complex, Main Street, Sainthamaruthu-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

**விண்ணப்ப முடிவுத் திகதி :10.03.2010**

## ஓராண்டு நினைவலைகள்



திருமதி
**காசிப்பிள்ளை நாகமுத்து**
(செல்லம்மா)

மண்ணில் 11.09.1918 விண்ணில் 16.02.2009

துடித்தன இதயம் உங்கள் நினைவால்
ஒருவருடம் உருண்டோடி விட்டதம்மா!
எத்தனை வருடங்கள் சென்றாலும்
ஆறாதம்மா உம் நினைவு
இறுதிவரை எம்மோடு இணைந்திருப்பீர்கள்
என்றிருந்தோம் அம்மா
இடைநடுவில் தவிக்கவிட்டு சென்றது
ஏனம்மா
கதறுகின்றோம் நாம் இங்கே
கதிகலங்கி நிற்கின்றோம் அம்மா
மறுபடியும் உம் தரிசனத்திற்காக
தங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

நிரந்தர முகவரி:
அரசர் கேணி,
பளை.

தற்காலிக முகவரி:
பொன்னர் ஒழுங்கை,
மீசாலை மேற்கு,
மீசாலை.

என்றும் உம் நினைவில்:
குடும்பத்தினர்.

## 16 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 11 | 20 |
| 09 | 02 |
| 1944 | 2010 |



அமரர் **சின்னத்தம்பி தர்மரத்தினம்**
(ஓய்வுபெற்ற தபாலதிபர்)

எமது குடும்பத்தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்கள், அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்கள் மற்றும் பலவழிகளிலும் உதவியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 07.03.2010 ஞாயிற்றுக் கிழமை காலை 7.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும். 08.03.2010 திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 91, பருத்தித்துறை வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
நல்லூர் , யாழ்ப்பாணம்.
தொ.பே. இல.: 021-321-8339

குடும்பத்தினர்.

## அழகுக் கலைப் பயிற்சி

யாழ்ப்பாணம்,மார்ச் 7

சமூக அபிவிருத்தி மன்றம் அழகுக் கலைப் பயிற்சி வகுப்பை நடத்தவுள்ளது. இந்தப் பயிற்சி வகுப்பு எதிர்வரும் 10ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாக வுள்ளது.

முக ஒப்பனையும் அவயங்களின் ஒப் பனையும், தலை அலங்காரம், மணப் பெண் அலங்காரம் போன்ற பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. (50-224)

## ஆசிரியர்களுக்கான செயலமர்வு

யாழ்ப்பாணம்,மார்ச் 7

யாழ்.கல்வி வலயக் கோப்பாய் கோட்ட கணித பாட 10,11ஆம் தர ஆசிரியர்களுக் கான செயலமர்வு இன்று ஞாயிற்றுக் கிழமை யாழ்.அத்தியார் இந்துக் கல்லூரி யில் நடைபெறவுள்ளது என வலயக் கல் விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(50-14)

### காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம், கோண்டாவில் மேற்கு கல் லூரி ஒழுங்கையில் (திரு கல்வி நிலையத்திற்கு அருகில்) உள்ள 2பரப்புக் காணி நல்ல சுற்றாடலில் விற்பனைக்கு உண்டு. தொடர்புக ளுக்கு: 0779673557 K.M.இராதாகிருஷ்ணன், சட்டத் தரணி, சட்டநாதர் வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். (95425)

### மணமகன் தேவை

யாழ்ப்பாணத்தில் பிறந்த இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, கனடாவில் வசிக்கும் குடும்ப வைத்தியராகப் பணி புரியும் சகோதரர், தனது 29வயது நிரம்பிய பட்டதாரி ஆசிரி யையாகப் பணிபுரியும் 5' 6" உயரமுடைய சகோதரிக்கு தன் னுடன் இணைந்து அல்லது தனியாகப் பணிபுரிய விரும்பும் தகுதியுள்ள மணமகனைத் தேடுகின்றார். ஜாதகத்தில் செவ் வாய், ராகு, கேது கிரகபாவமுடையவர்கள் விரும்பப் படுகின் னர். விளம்பர இல: 3992, மே/பா உதயன்.

### காணி வீடு விற்பனைக்கு

5அறைகளையும் 2விசாலமான விறாந்தைகளையும் கொண்ட வீடும் அதனுடன் கடையும் இணைந்து 5பரப்பு காணி சித்தன்கேணி டச்சு றோட் சந்தியில் விற்பனைக்கு உண்டு.
மேலதிக தொடர்புகளுக்கு:
0716277192/ 0719016643 (95495)

### தேவை

CLARET உயர்கல்வி நிறுவனத்தின் யாழ். கிளைக்கு A/L, O/L படித்த பேச்சாற்றல் உடைய ஆண், பெண் சந்தைப்படுத்தல் முகாமையாளர்கள் உடன் தேவை. நீங்கள் வதியும் பகுதியிலேயே பகுதி/முழு நேரமாக தொழில்புரியலாம். மாதம் 25000.00ற்கு மேல் உழைக்க அரிய வாய்ப்பு.
நேர்முகத்தேர்வு 13.03.2010 அன்று மு.ப. 10மணிக்கு நடைபெறும்.
தொடர்புகளுக்கு:
இல.772, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
தொ.பே. 0213206360 (C/565266)

### திருமண சேவை

B.A, B.Sc, M.Sc பட்டதாரிகள், டாக்டர்கள், பொறியியலாளர்கள், ஆசிரியர்கள், வர்த்தகர்கள் உட்பட உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பலரின் ஜாதகங்கள் எம்மிடம் உண்டு.
உங்கள் பிள்ளைகளின் திருமண வாழ்வு வளமுடன் அமைய எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.
த.சிவானந்தன், பிரபல சோதிடர்,
100, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
(யா/இந்து மகளிர் கல்லூரி முன்பாக) (95447)

### மணமகள் தேவை

30வயதுடைய 5½' உயரமுள்ள அவுஸ்திரேலியாவில் Engineer ஆக உள்ள மணமகனிற்கு மணமகள் தேவை. பட்டதாரிகள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 0112623679 (95443)

### காணி தேவை

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் அல்லது பலாலி வீதியில் குறைந்தது 2பரப்பு வெற்றுக் காணி வாடகைக்கு உடன் தேவை.
(தரகர்கள் தேவையில்லை)
தொடர்புகளுக்கு: 0775060317 (95357)

### வீடு விற்பனைக்கு

மானிப்பாய் மெமோறியல் லேனில் 7பரப்புக் காணியும் அதற்குள் அமைந்துள்ள வீடும் விற்பனைக்கு உண்டு. இவ் வீடு கோயில், பாடசாலைகள், ஆஸ்பத்திரி ஆகியவற்றுக்கு அண்மையில் அமைந்துள்ளது.
தொடர்பு: 0112503018, 011 2337594, 0777349357. Mohan 1821 @ hotmail.com (95423)

### வீடு விற்பனைக்கு

சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கு அண்மையில் ஐந்து பரப்புக் காணியுடன் கூடிய கல்வீடு வளவு விற்பனைக்குண்டு. நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: முருகன் நகை மாளிகை, சாவகச்சேரி. தொ.பே 0775369798 (95515)



Obtain a World Class
British Qualification

edexcel
BTEC **HND**
Higher National Diploma
in
Business Management
(Finance/Marketing /HRM/IT)

New Batch Starts on 23.04.2010 at 10.00 am

**IIS CITY CAMPUS**
200, SIVAN PANNAI ROAD, JAFFNA.
Tel: 021 222 6060 Fax: 021 222 6933
Web: iiscitycampus.com Email: iiscc@sltnet.lk





# நீண்ட இடைவெளிக்குப்பின்னர் யாழ். - தமிழக மக்களைச் சந்திக்க வைத்த கச்சதீவு அந்தோனியார் உற்சவம்

**லக்ஸ்மன்**

புயலின் பின்னரான ஒரு அமைதி யான சூழலில் இம்முறை கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய உற்சவம் இடம் பெற்ற போதும் கோடி அற்புதத்தை தரிசிக்க இம்முறை இந்திய மக்களைவிடக் குறைந்த அளவிலேயே இலங்கை மக்கள் வந்திருந் தனர். நாட்டில் இடம்பெற்ற அசம்பாவிதங்களால் பாதிக்கப்பட்டு ஓடாகிப் போன மக்கள் தமது இருப்பிடங்களில் இருந்தவாறே அற்புதரின் அருளை வேண்டியிருக்கலாம். அத்துடன் இங்கிருந்து போதிய படகு வசதிகளும் ஏற்படுத்தப்படவில்லை.

எது எப்படியாயினும் கச்சதீவு உற்சவம் இம்முறை களைகட்டி யிருந்தது. இறுதி நேரத்தில் இராமநாதபுரம் மாவட்டக் கலெக்டரும் பங்குத் தந்தையர்களும் மேற்கொண்ட நடவடிக்கைகளால் தமிழக அரசும் மக்கள் கச்சதீவுக்குச் செல்ல அனுமதியளித்தது. 3500 பேர் வரையான தமிழக மக்கள் வந்திருந்ததாகத் தெரிகின்றது. நெடுந்தீவு, மன்னார் மற்றும் குருநகர் பகுதிகளில் இருந்து சுமார் 1000 பேர்கள் வரை கச்சதீவுக்கு வந்திருந்தனர்.

நண்பகல் 12 மணிக்குத் திருப்பலிப் பூசைகளை ஒப்புக் கொடுத்த நெடுந்தீவுப் பங்குத் தந்தை அருட்திரு. அன்ரன் அமலராஜ் பி.ப1.30மணிக்கு உற்சவக் கொடியை ஏற்றி வைத்தார். இதே சமயம் சுமார் 15 இற்கும் அதிகமான இந்தியப் படகுகள் கூட்டமாகக் கச்சதீவுக்கு வந்து கரைக்கு வரமுடியாத நிலையில் சிறிது தூரத்தில் நங்கூரமிட்டன. அவற்றில் வந்த இந்திய மக்களைக் கரைசேர்க்கும் பணியில் உதவிய இலங்கைப் படையினரின் உதவிகளுக்கான உணர்வு பூர்வமான நன்றியை இந்திய மக்கள் தெரிவித்தனர். இந்த நடவடிக் கைக்காக மட்டுமல்ல பொது மக்களுக்குத் தேவையான குடிதண்ணீர் வசதிகளையும் ஏற்பாடு செய்து கொடுத்த நெடுந்தீவுக் கடற்படை அதிகாரி கொமாண்டர் வீரரட்ணவுக்கும் மக்களின் பாராட்டுக் கிடைத்தது.

உற்சவ காலங்களில் மக்கள் தங்கும் இயற்கையின் இல்லங்களில் வந்தவுடன் குடிபுகக் கூடியதாக சுற்றாடல் களிலும் மரங்களின் உள்ளே காணப்படும் பரட்டைக் காடு களை அழித்தும் சுற்றாடல்களில் வளர்ந்து கிடந்த புல்லுகள் அகற்றப்பட்டும் புனித சூசையைப்பர் உருவச்சிலை அமைந்துள்ள இடம் வரை பாதைகளைச் சீர்செய்தும் மக்களுக்கு தேவையானவற்றை உரியமுறையில் செயற் படுத்த நடவடிக்கை எடுத்த யாழ். அரச அதிபர் கே.கணேசின் நடவடிக் கைகளைப் பாராட்டவும் மக்கள் தயங்கவில்லை. பற்றைகளை அழித்துத் துப் புரவு செய்ய கச்சதீவின் வரலாற்றி லேயே முதன்முறையாகப் பாரிய இயந்திரத்தை அனுப்பி உதவியிருந்தார் யாழ். அரச அதிபர் கணேஸ்.

நெடுந்தீவு, குருநகர், மன்னார் பகதிகளிலும் தமிழகத் தின் இராமேஸ் வரம், தங்கச்சி மடம், பாம்பன் கீழ்க்கரை, மதுரை, திண்டுக்கல் பகுதிகளில் இருந்தும் வந்திருந்த மக் கள் முதலில் தமது பக்தி பூர்வமான பிரார்த்த னைகளை, நேர்த்திகளை நிறை வேற்றினார்கள். அந்த மக்கள் சிலரிடம் 'கச்சதீவுக்கு வந்திருக்கும் உங்கள் மகிழ்ச்சிகளை, கருத்துக் களை எங்களுடன் பகிர்ந்துகொண்டால் நன்றாக இருக்கும் தானே' என்றேன்.

**எம் மாரிமுத்து சர்வை (ராமேஸ்வரம்)**



மனித உரிமைகள் கழகத்தின் உறுப்பினர்களுக் கான அட்டையைக் காண்பித்த மாரிமுத்து 'நாங்கள் இங்கு வருவ தற்கான அனுமதியை தமிழக அரசு வழங்கியுள்ளது. கச்சதீவில் மிகவும் கௌரவமாக நடந்து கொள்ளுமாறும் அது அறிவுறுத்தியிருந்தது. இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மத்திய அரசு அவர்களைக் கைவிட்டு விட்டதாக ஒரு குறைபாடு உண்டு. தமிழக மக்களைப் பொறுத்தவரை அதற்காக மனம் நொந்து கொண்டேயுள்ளோம். இலங்கைத் தமிழர்கள் தமது சொந்த இடங்களில் நிம்மதியாகவும் சந்தோசமாகவும் உரிமை பெற்றவர்களாகவும் வாழ வேண்டும் என்பதில் சாதாரண மக்கள் எல்லோருமே ஒத்த கருத்துடையவர் கள்தான். அரசியல் வாதிகளை விடுங்கள். அவர்கள் சொல்வ தொன்று செய்வதொன்று. சுயலாபத்திற்காக இலங்கைத் தமிழர்களுக்காகக் கண்ணீர் வடிப் பவர்கள்.

**எம்.சந்தியா**
**(சீனிவாசப் பெருமாள்தெரு, மதுரை-9)**

"இராமேஸ்வரத்தில் எங்களுக்கு எந்தப் பிரச்சினைகளும் இல்லை. நான் கச்சதீவுக்கு வருவது இதுவே முதற்தடவை. இலங்கைக் கடற் படையினரும் பொலிஸாரும் எங்களுக்கு நல்ல முறையில் உத வினார்கள். புனித அந்தோனியாரைத் தரிசிக்க வேண்டும். என்ற எனது கனவு நனவானது குறித்து மிக மகிழ்ச்சியாக இருக்கிறேன். குடிதண்ணீர் கிடையாத ஒரு இடமாக இருந்தாலும் மிகவும் அழகான இடமாக உள்ளது. மக்கள் தங்கக் கூடியதாக மரங்கள் உள்ளமை. இத்தீவின் மகிமை என்றே நினைக்கிறேன். இயற்கை தந்த இல்லங்கள் இவை. இம்முறை இலங்கைத் தமிழர்களும் பெரிய அளவில் வரக்கூடும் என்று எதிர் பார்த்திருந்த எமது மக்களுக்குக் கொஞ்சம் ஏமாற்றமே கிடைத்தது. போரின் வடுக்களைச் சுமந்துள்ள அந்த அப்பாவித் தமிழ் மக்களின் சுபீட்சம் மிக்க வாழ்வுக்காகவும் அந்தோனி யாரைப் பிராந் திப்போம். அவரது அருளும், ஆசியும் அந்த மக் களுக்கு என்றும் துணைநிற்கும். இருநாட்டு மக்களும் ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்பதே எனது விருப்பம்." என்றார்.




**எஸ்.ஜாபுதீன் (கீழ்க்கரை, இராமநாதபுரம்)**

'எமது முன்னோர்கள் கொழும்பில் இரத்தினக்கல் வியாபாரம் செய்தவர்கள்.ஓர் இஸ்லாமியராக இருந்தபோதும் இங்கு கிறிஸ்தவ ஆலயத்திற்கு வந்து பிராத்தனைகளில் கலந்து கொள்ள வேண்டும் என்று விரும்பினேன். காரணம் இரு நாட்டு மக்களும் ஒற்றுமையுடன் வாழவேண்டும் என்பதே. இலங்கை மக்கள் பழக இனியவர்கள். முன்பு அறிமுகமில்லாதவர்களுடன் கதைத்த போது இதை உணர்ந்து கொள்ள முடிந்தது. விசாரணைகள் எதுவுமின்றி இலங்கைப் படையினர் எங்களைத் தமது படகுகளில் ஏற்றிக் கரைசேர்த்தனர். பிரச்சி னைகள் எங்குதான் இல்லை. ஒருவரை ஒருவர் புரிந்து கொண் டால் பிரச்சினைகள் முடிவுக்கு வந்துவிடும்' எனத் தெரிவித்தார்.



**சுவாமி பிரணவானந்தா**
**(நிர்வாகி, விவேகானந்தகுடில் ராமேஸ்வரம்)**

இலங்கை அகதிகளுக்காக 27 வருடங்கள் பணிசெய்திருக்கிறேன். இந்திய மீனவர்களுக்கு 30 வருடங்கள் சேவையாற்றியுள்ளேன். மீனவர்களுக்காக கச்சதீவு உற்சவகாலத்தில் நான்கு முறை எமது பங்குத்தந்தையுடன் சேர்ந்து வந்துள்ளேன். எமது மீனவர்கள் தொழிற் சிறப்புக்காக மைக்கல் ராஜ. கேட்டுக் கொண்டதன் பேரில் 300 இந்து மீனவர்களையும் அழைத்துக் கொண்டுவந்துள்ளேன். இந்தக் கடலுக்கு எமது பிள்ளைகள் 300 பேர்வரை காவு கொடுத்துவிட்டோம். எல்லோரும் ஒற்றுமையுடன் வாழ்ந்து இந்தக் கடல் பரப்பில் தொலைந்து போனவர்களுக்காகவும் இது போன்ற நிகழ்வுகள் இடம்பெறக்கூடாது என்பதற்காகவும் அருள்மிகு அந்தோனியாரைப் பிரார்த்தனை செய்வதே எனது நோக்க மாகவும் உள்ளது.



**எஸ். கனிதா (மேலைக்கிராமம், ராமேஸ்வரம்)**

நான் மண்டபம் [illegible] பள்ளியின் 7ஆம் வகுப்பு மாணவி. கடற் பயணம் பயமாக இருந்தது. அந்தோனியாரைத் தரிசித்து அவரது பிரார்த் தனைகளில் கலந்து கொண்டது சந்தோசமாக இருக்கின்றது. தண்ணீர் இல்லை என்கிறார்கள். எனக்கு எங்களு டைய ஊரைவிட இந்த ஊர் நன்றாக உள்ளது போல் தெரிகின்றது. புதுமையான தெய்வம் என்கிறார்கள். எனக்கு நன்றாகப் படிப்பு வரவேண்டும் என்று வேண்டிக்கொண்டி ருக்கிறேன்.



**கே. பொனடிற் லயனல் (ஜாஎல)**

நெடுந்தீவு பங்குத் தந்தை எனக்கு அறிமுகமானவர். நான் கிறிஸ்தவன் என்பதால் கச்சதீவுக்கு வந்ததைப் பெருமையாகக் கொள்கிறேன். ஒவ்வொரு கிறிஸ்தவனும் வந்து அந்தோனியாரின் அருளைப் பெற வேண்டிய இடம் இது. நானும் எனது சகோதரர் குடும்பமும் வந்துள்ளோம். இங்கு இடம்பெற்ற உற்சவம் மிகவும் சிறப்பாக இருந்தது. பிரார்த்தனைகள் தமிழில் இடம் பெற்றதால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. நான் யாழ்ப் பாணத்தில் தங்கவில்லை. அதனால் அதைப் பற்றிக் கூறமுடியாதுள்ளேன். இந்த உற்சவத்தில் கலந்து கொண்ட ஒரேயொரு சிங்களக்குடும்பம் எனது குடும்பம் தான் என்பதில் மகிழ்ச்சியாக இருக்கின்றது. நான் பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பணியாற்றுகின்றேன். சிங்கள மக்கள் தமிழும் தமிழ்மக்கள் சிங்களும் படிக் வேண்டும். அப்போது நாட்டில் பிரச்சினை இருக்காது. நெடுந்தீவு மக்கள் மிகவும் நல்ல வர்கள் எங்களை மிகவும் அன்போடு உபசரித்தனர். கச்சதீவில் படையினர் மக்களிடம் காட்டிய மரியாதை என்னைக் கவர்ந்தது. நாடு பூராவும் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துபவர்களாக இருந்தால் மிகவும் சிறப்பாக இருக்கும்.



கச்சதீவுக்கு வந்திருந்த இரு தேச மக் களும் பரஸ்பரம் அன் பைப் பரிமாறிக் கொண்டனர். பெரும்பான்மையான மக்கள் தம் முடன் எவ்வித பொருள் களையும் எடுத்து வரவில்லை. பண்டபரிமாற் றங்கள் இடம்பெறவில்லை. இந்திய யாத்திரிகர்களுக்கு ராணி சோப்பில் நிறையவே விருப்பம் இருந்தது. எனினும் ராணி சோப் கிடைப்பதில் பலர் ஏமாற்றமடைந்தனர். சிறிய அளவில் எடுத்து வரப்பட்ட ராணிசோப் கிடைக் காததால் வேறு வழியின்றி லக்ஸ் சோப்பைப் பலர் வாங்கிச் சென்றனர். அகதிகளாக இந்தியா சென்ற சிலர் கச்சதீவுக்கு வரக்கூடும் என எதிர்பார்த்தவர்களுக்கும் ஏமாற்றமே கிடைத்தது.

இம்முறை தீவின் கோயில் சுற்றாடல் தவிர்ந்த ஏனைய பகுதிகளுக்குச் செல்ல எவருமே அனுமதிக்கப்பட வில்லை. போதிய மலசலகூட வசதிகள் அமையாத பட் சத்தில் இந்த 'நோஎன்றி' யினால் பலர் சிரமப்பட்டுக் கொண்டிருந் தனர்.

மக்களின் அத்தியாவசிய தேவைகளில் கணிசமான அளவு நிறைவேற்றப்பட்டிருந்தது.

இறுதி நாளன்று யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு புனித அந்தோனி யாரை வழிபட்டதுடன் நிலைமை களையும் பார்வையிட்டார்.

யாத்திரிகர்களுக்குத் தேவையான வசதிகளை நெடுந் தீவு உதவி அரசாங்க அதிபர் என்.திருலிங்க நாதன், கிராம அலுவலர் ப.கதிரேசு நெடுந்தீவுக் கடற்படை அதிகாரி விஜரட்ண உட்பட நெடுந்தீவுப் பிரதேச சபையினர் செய் திருந்தனர்.

இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் ராமேஸ்வரக் கிளை யினர் யாழ். அரச அதிபருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்ததுடன், பொது மக்களுக்கென குடிதண்ணீர் பைகளையும் வழங்கினர்.

காலை 6 மணிக்கும், மு.ப. 9.30 மணிக்கும் இடம் பெற்ற திருப்பலிப் பூஜைகளின்போது இலங்கைத் தமிழ் மக்க ளினதும் இந்திய மக்களினதும் நிம்மதி, சமாதானம், ஒற் றுமை என்ப வற்றை வேண்டிப் பிரார்த்தனைகள் இடம் பெற்றன.

விழாவில் இந்தியத் தூதரக அதி காரியும் தமிழகத்தைச் சேர்ந்த 20 வரை யாலான ஊடகவியலாளர்களும் கலந்து கொண்டனர். செய்தியாளர்களிடம் பேசுவதையும் புகைப் படம் எடுப்பதை யும் தூதரக அதிகாரி தவிர்த்துக் கொண்டார்.

பகல் 10 மணிக்கு இந்திய மக்களும் 12 மணிக்கு இலங்கை மக்களும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பி . விட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டதும் மக்கள் சுறுசுறுப் பாகத் தங்கள் மூட்டை முடிச்சுக்களைக் கட்டத் தொடங் கினர். கச்சதீவில் ஒரு கைக்குட்டையாவது வாங்க முடியாமல் போனதில் இலங்கை இளசுகளுக்கு நிரம்பவே கவலை.

வட பிராந்திய கடற்படை அதிகாரி அட்மிரல் எஸ்.எம். வி.வீரசேகர, ஊர் காவற்றுறை டீ.எஸ்.பி.பிரேறமரட்ண, வடக்கின் தரைக் கட்டளைத் தளபதி ஹேமந்த பீரிஸ், நெடுந் தீவு பொதுசனத் தொடர்பு அதிகாரி போல்ராஜ், நெடுந் தீவுப் பங்குத் தந்தை அன்ரன் அமலராஜ் ஆகியோர் உற் சவ காலம் சிறப்புற யாழ். அரச அதிபருக்குத் தமது முழுமை யான ஒத்துழைப்புக்களையும் வழங்கியிருந்தனர். ★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BOC
இலங்கை வங்கி

திருடர்களிடமிருந்து உங்கள் பெறுமதிக்க பொருள்களைப் பாதுகாக்க...

மிகச் சொற்ப அளவே கையிருப்பில் உண்டு.

# இலங்கை வங்கியின் பாதுகாப்புப் பெட்டகங்கள்

## தொடர்புகளுக்கு:

பிரதான முகாமையாளர்,
**இலங்கை வங்கி,**
அதிமேற்தரக் கிளை,
யாழ்ப்பாணம்.


உ
சிவமயம்

# 31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



## திருமதி பொன்னம்மா செல்வத்துரை
(பிரபல வைத்தியர், சுழிபுரம்)

**பார்போற்றும் பழம் தமிழர் பண்பில் வந்து**
**பண்பான வைத்தியத்தை தொழிலாய்ச்செய்து**
**சீர்மேவு சுழிபுரத்தில் சிறப்பாய் வாழ்ந்து**
**சித்த வைத்திய பரம்பரையைத் தோற்றி வளர்த்து**
**நாம் நாளும் வணங்கும் தெய்வமாய்**
**நம்முன்னே காட்சி தந்து-நலம் செய்த அம்மாவே**
**பிள்ளைகளாகிய எம்மைப் பிரிந்து நீர்**
**விநாயகரின் திருவடியில் சேர்ந்தீரோ.**

05.02.2010 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி பொன்னம்மா செல்வத்துரை அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (07.03.2010) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் அன்னாரது இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அமரர் செல்வத்துரை ஞாபகார்த்த வைத்தியசாலை,
சுழிபுரம் மேற்கு, சுழிபுரம்.

**பிள்ளைகள்,**
**சகோதரர்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

(95532)

## கால்நடை வளர்ப்போர் சங்கத்தின் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச்.7

சாவகச்சேரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்குத் தென்மராட்சி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும். சங்கத் தலைவர் த.சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்களாக யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ. சிவலிங்கம், கால்நடை உற்பத்திச் சுகாதார திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி வ.அமிர்தலிங்கம் ஆகியோர் கலந்துகொள்வர்.

(50-202)


## வெளிநாட்டு புலமைப்பரிசில்கள் 65ஐ பெற்றுக்கொடுத்த IVS நிறுவனத்தினூடாக
## இந்தியா மற்றும் பங்களாதேஷில் உயர்கல்விக்கான அழைப்பு !

அனுமதி வரையறுக்கப்பட்டது

### மருத்துவத்துறை

- எமது நிறுவனத்தின் 15ஆவது வருட நிறைவை முன்னிட்டு 2009 டிசம்பர் மாதம் 26ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடத்தப்பட்ட புலமைப்பரிசில் வழங்கும் வைபவத்தில் மருத்துவத்துறையை கற்பதற்காக நாட்டின் பல பாகங்களிலிருந்தும் தெரிவுசெய்யப்பட்ட அதிகூடிய பெறுபேறுகளைப் பெற்ற மாணவ. மாணவியருக்காக பங்களாதேசின் University of Science & Technology(USTC) சித்தகோங் இல் மருத்துவத்துறையில் கற்பதற்கு முழுமையான புலமைப்பிரிசில் வழங்கப்பட்டதோடு அம்மாணவர்கள் உட்பட 2010ஆம் ஆண்டு 10ஆவது குழுவாக 130 மாணவர்கள் கடந்த ஜனவரி மாதம் 26ஆம் திகதி இலங்கையிலிருந்து வெளியேறியதை மகிழ்ச்சியாக தெரிவித்துக்கொள்கின்றேன்.
- இந்தப்பல்கலைக்கழகத்தில் மருத்துவத்துறை கற்பதற்கு மேலும் இலங்கை மாணவ,மாணவிகளுக்கான வரையறுக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் உள்ளதால் உடனடியாக விண்ணப்பியுங்கள்.
- நாட்டின் பிரபல்யமான 100 வைத்தியர்களுக்கு மேலான தொகையினரின் பிள்ளைகள் தற்போது இந்த பல்கலைக்கழகத்தில் மருத்துவத்துறையில் கற்கின்றனர்.
- பங்களாதேஷில் தனியார்மருத்துவக்கல்லூரிகளில் University of Science & Technology(USTC) சித்தகோங்க் இலங்கை வைத்தியசபை, இங்கிலாந்தின் வைத்தியசபை, அயர்லாந்து வைத்தியசபை, நேபாள வைத்தியசபை உலக சுகாதார அமைப்பின் ஊடாக மருத்துவப்பட்டத்தை ஏற்றுக்கொள்ளும் ஒரேயொரு பல்கலைக்கழகமாகும்.

### பொறியியல் விஞ்ஞானம் உட்பட ஏனைய விடயங்கள்.

- Micro Biology, Bio Technology, BBM, BCA, BBA, BHM போன்ற விடயதானங்களுக்காக புலமைப்பரிசில் பெற்ற மாணவ.மாணவிகள் ஜூன் மாதம் புறப்படவுள்ளனர். க.பொ.த(உ/த) பெறுபேறுகளுடன் நீங்களும் விண்ணப்பிக்கலாம்.

திரிய காந்தா பிரசாதினி விருது பெற்ற கே.டி.விஜித மல்லிகா சேனாநாயக

**Institute of Vocational Studies (Pvt) Ltd.**

இல.476, கண்டி வீதி, தலுகம, களனி.
தொலைபேசி : 0777-444500/ 077-2224339/ 5757276/ 4925640/ 2910323
ஈமெயில் : ivsltd@hotmail.com இணையதளம் : www.ivsedu.com
(காலை 9.00 மணி தொடக்கம் நண்பகல் 2.00 மணி வரை மேற்கண்ட பிரதான காரியாலயத்திற்கு வருகை தந்து சந்திக்க முடியும்).

கிளைக்காரியாலயங்கள் மற்றும் விசாரணைகளுக்கு :

| | | |
|---|---|---|
| நியூ லெக்சிகோன் | - குருநாகலை | - இரசாயன விஞ்ஞானம் கலாநிதி திலக் ராஜகருணா |
| மொண்டானா | - கம்பஹா | - உயிரியல் விஞ்ஞானம் கலாநிதி மகிந்த பண்டாரநாயக |
| சசிப் | - நுகேகொடை | - பௌதீகவியல் கலாநிதி அமித் புஸ்ஸெல்ல |
| சயன்ஸ் சென்டர் | - இரத்தினபுரி | - இரசாயன விஞ்ஞானம் கலாநிதி நிஹால் தேவபிரிய |
| சிபாரா | - காலி | - பொருளியல் கலாநிதி ... |
| சில்ப சாலிகா | - அம்பலாங்கொடை | - ஐ.வீ.எல்.ஜ... |
| நவ சாலாவ | - மாத்தறை | - இரசாயனவியல் கலாநிதி டி.பீ.ஆரியரத்ன |

Manu Ad



கொங்கிறீட் கூரைகள், குளியல் அறைகள்,
நீர்த் தாங்கிகள், நீச்சல் தடாகங்கள் எதுவாயினும்

**நீர்க் கசிவுகளுக்கு உடன் நிவாரணம்**

24மணி நேரத்தில் பலன். உத்தரவாதம். உடைத்தல் இல்லை. திருத்தி அமைத்தல் இல்லை. இந்தியத் திருநாட்டின் அதி உயர் தொழில்நுட்ப அதிசயமான ACQATYTE மூலம் உடனடிச் சிகிச்சை. கொழும்பு மாநகரிலும், நாட்டின் பல்வேறு இடங்களிலும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. நூறு வீதம் திருப்தி. முதல் முறையாக யாழ்.மண்ணுக்கு அறிமுகம். அவசர வேலைகளுக்கு முன்னுரிமை. கட்டட வேலைகளும் ஒப்பந்த அடிப்படையில் செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு கொள்ளுங்கள்:
சரா சேது சேவிஸஸ்
207, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.
தொ.பே.இல: 0777738484

(95510)


## 9ஆவது பிறந்தநாளில் 330 ஆவது நாள் நினைவஞ்சலி

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 07 | 10 |
| ★ | ★ |
| 03 | 04 |
| ★ | ★ |
| 2001 | 2009 |



## செல்வி டக்சாயினி சத்தியநாதன்
(சென்.திரேசா பெண்கள் கல்லூரி மாணவி)

**ஆயிரம் ஆயிரம் கதை சொல்லும்**
**அந்தக் கண்களை மறக்கத்தான் முடியுமா**
**திரும்பி எங்களிடம் வரும் நாளை**
**ஆவலுடன் எதிர்பார்க்கலாமா?**
**என்றும் உம் நினைவுகளுடன்**

கந்தசுவாமி கோயில் முன்பாக,
ஏ-9 சாலை, கிளிநொச்சி.

அப்பா, அம்மா, அக்கா, தம்பி,
அம்மம்மா, மாமாமார், அத்தைமார்.

(95524)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...... இராசிபலன்

## மார்ச் 07 முதல் 13 வரை

தருபவர் - வித்யா

### மேடம்

இந்த வாரம் பிள்ளைகள் வழியிலோ, மற்ற வழியிலோ எதிர்பாராத செலவுகளைச் சந்திக்கலாம். சிறிய விடயங்களுக்காக பெரிய அளவில் அலட்டிக் கொள்வீர்கள். திடீர் வெளியூர் பயணங்கள் செல்ல நேரிடலாம். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளலாம். உறவினர்கள் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள். லாப ஸ்தானத்தில் குரு இருப்பதால்; கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். பெரிய மனிதர்களின் நட்பு, சகாயம் கிட்டும். பிள்ளைகளின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். சுபகாரிய விடயங்களில் முன்னேற்றம் உண்டு. சுக்கிரன், புதன், சூரியன் சாதகமாக இருப்பதால், மனைவி வழியிலும், குடும்ப உறுப்பினர்கள் வழியிலும் உதவிகள் கிடைக்கலாம். சகோதரிகள் மீதான பாசம் அதிகரிக்கும். அவர்கள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள். பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள், ஆடம்பர ஈடுபாடுகள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள்.மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள், தந்தை, அதிகாரிகள், அரசியல்வாதிகள் போன்றவர்களால் அனுகூலம் உண்டு. அரசு காரியங்கள் அனுகூலமாகமுடியும். அரசியல்வாதிகளுக்கு செல்வாக்கு கூடும். புதியவர்களின் நட்பைப் பெறலாம். இளைய உடன் பிறப்புக்களால் சில ஆதாயங்களைப் பெற வாய்ப்பு உண்டு. மாற்று மதத்தினர் உதவிகரமாக இருப்பர். உங்களுக்காகவோ, வீட்டில் உள்ளவர்களுக்காகவோ ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். தண்டச் செலவு நேரும்.

### இடபம்

இந்த வாரம் ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். உறவினர்கள் வகையில் அன்புத் தொல்லைகளை சந்திக்கலாம். நம்பிக்கை குறைந்து, அவநம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பாராத செலவுகளை, அலைச்சல்களை சந்திக்கலாம். மற்றவர்களை நம்பி ஒப்படைத்த வேலைகள் முடியாமல் அவற்றை நீங்களே செய்ய நேரிடலாம்.ஐந்தாம் இடத்தில் வக்கிரகதியில் இருக்கும் சனியால், குடும்பத்தினருடன் பிள்ளைகளுடன் கருத்து வேறுபாடுகள் ஏற்படலாம். புதிய முதலீடுகள் தொடர்பான விடயங்களில் கவனம் அவசியம். மற்றவர்கள் சொல்வதை நம்பாமல், எதிலும் தீர விசாரித்து முடிவுக்கு வருவது நன்மை தரும். பத்தாமிடத்தில் குரு இருப்பதால், தொழில் ரீதியான விடயங்களில் கவனம் அவசியம். சிலர் உங்களை மாட்டிவிட்டு வேடிக்கை பார்க்கலாம். சூரியன், புதன் சாதகமாக இருப்பதால், திட்டமிட்ட காரியங்கள் மட்டுமின்றி, திட்டமிடாத காரியங்களும் முடிவுக்கு வரும். அரசியல், மருத்துவம், அரசாங்கம், அதிகாரிகள் தொடர்பான விஷயங்கள் சாதகமாக அமையும். பெரிய மனிதர்களின் நட்பு கிடைக்கும். உறவினர்கள், நண்பர்கள், மாமன், மைத்துனர்கள் உதவிகரமாக இருப்பர். வீட்டுக்குத் தேவையான விலை உயர்ந்த பொருள்கள் வாங்குவீர்கள். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். பெரிய மனிதர்களின் சந்திப்பு நிகழும். நண்பர்கள் உதவி கிட்டும்.

### மிதுனம்

இந்த வாரம் புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். சிரமம் இல்லாமல் சில வேலைகளை சுலபமாக முடித்துக் கொள்வீர்கள். நண்பர்கள் வட்டம் விரிவடையும். புதிய பொருள்கள் வாங்கலாம். ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆட்படலாம். மற்றவர்களுக்காக உங்களின் கைப்பணத்தை செலவிடலாம். நடக்காத காரியங்களை நினைத்து மனவருத்தம் அடைவீர்கள்.நான்காம் இடத்தில் சனி இருப்பதால், தொழில், உத்தியோகம், விவசாயம் போன்ற ஜீவன காரியங்களில் இடர்பாடுகள், சிரமங்கள் தொடரும். எதுவும் நினைத்தது போல நடக்காமல், முரண்பாடாக நடக்கலாம். சட்டம், நீதிமன்றம், தொழிலாளர்கள் தொடர்பான விஷயங்களில் அனுகூலம் இல்லை. இருந்தாலும், ஒன்பதாம் இடத்தில் இருக்கும் குரு, உங்களின் வெறுப்பு, விரக்தியை குறைத்து அவ்வப்போது, ஆறுதலான, மாறுதலான அனுபவங்களை ஏற்படுத்திக் கொடுப்பார். பெரிய மனிதர்களின் நட்பையும் பெறலாம்.ஒன்பதாம் இடத்தில் சூரியன், புதன் இருப்பதால், அரசியல், மருத்துவம், அரசு தொடர்பான காரியங்கள், அதிகாரிகள் தொடர்பான விடயங்கள் மனதிற்கு ஆறுதல் தரும் வகையில் அமையாது. வீண்பழிகள் உருவாகலாம் என்பதால், எதிலும் எச்சரிக்கையோடு செயற்பட வேண்டும். எதிர்பாராத சில சம்பவங்களும் நடக்கலாம். குடும்ப உறுப்பினர்களுக்கோ, உங்களுக்கோ ஆரோக்கிய குறைவில் பிரச்சினைகள் வரலாம் என்பதால், கவனம் அவசியம். எதிர்பாராத செலவுகள் நேரும். பணவரவு உண்டு.

### கடகம்

இந்த வாரம் அதிகரிக்கும் செலவுகளால் பணப்பிரச்சினைகளைச் சந்திக்கலாம். சிலர் உங்களை மரியாதைக் குறைவாக நடத்தலாம். திட்டமிட்ட காரியங்களை முடிக்க முடியாமல் தடை, தாமதங்களை எதிர்கொள்ளலாம். எதிர்பார்த்த பணவரவுகள் வரலாம். மனதிற்கு உற்சாகம் தரும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். நல்ல செய்திகளைக் கேட்கலாம்.சனி, சாதகமான நிலையில் இருப்பதால், எடுத்த காரியங்களில் தங்கு தடையற்ற வெற்றி காண்பீர்கள். நீங்கள் எதிர்பார்த்தபோது, கிடைக்காத வாய்ப்புகள் எல்லாம் இப்போது உங்களை தேடி வரலாம். பெரிய மனிதர்களின் நட்பால் முக்கிய காரியங்களை நிறைவேற்றிக் கொள்வீர்கள். சுபகாரிய விடயங்களில் முன்னேற்றம் உண்டு. மனைவி வழி உறவுகள் உங்களின் முயற்சிகளுக்கு துணையாக இருப்பர். ஆடம்பரப் பொருள்கள் வாங்கத் திட்டம் போடுவீர்கள். புதன் சாதகமாக இருப்பதால், மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் வழியில் சந்தோஷமான செய்திகளைக் கேட்கலாம். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். இருந்தாலும், ஜென்மத்தில் செவ்வாய் இருப்பதால், எதிலும் கோபம், வேகத்தை காட்டாமல் பொறுமையாக செயற்படுவது நல்லது. உறவினர்களால் தொல்லையுண்டு. வெளிவட்டாரத் தொடர்பு விரிவடையும். குழப்பங்களைச் சந்திக்கலாம்.

### சிங்கம்

இந்த வாரம் ஊக்கம், உற்சாகமாக செயல்படுவீர்கள். உறவுப் பெண்கள் வழியிலோ, மற்ற பெண்கள் வழியிலோ உதவிகள் கிடைக்கலாம். விருப்பமான உணவு வகைகளைச் சாப்படுவீர்கள். சுகமான அனுபவம் உண்டு. ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியாமல் சாக்குப் போக்கு சொல்லி சமாளிப்பீர்கள். ஏழாம் இடத்தில் நான்கு கிரகங்கள் உள்ளன. குருவைத் தவிர மற்றவர்கள் எல்லாம் பாதகமான நிலையில் உள்ளதால், அலைச்சல், திரிச்சல் அதிகரிக்கலாம். பெண்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ளவும். பயணங்களாலும் பணம் கரையலாம். தந்தை, அரசியல் வாதிகள், அதிகாரிகள், மருத்துவம் தொடர்பான விடயங்களும் சாதகமாக இருக்காது. குடும்ப உறுப்பினர்கள் சிலரால் வீட்டில் பிரச்னைகள் வரலாம் என்பதால், கவனமாகவும், பொறுமையாகவும் இருப்பது நல்லது. கணவன் மனைவி உறவில் இணக்கம் பாதிக்கப்படும். இருந்தாலும், ஏழாம் இடத்தில் இருக்கும் குரு ராசியைப் பார்ப்பதால், மற்றவர்கள் மத்தியில் பளிச்சென தோற்றம் அளிக்க நினைப்பீர்கள். சமூகத்தினர் மத்தியில் உங்களின் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். குடும்பத்தில் சுபகாரியங்களை நடத்த மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. அதற்காக கேட்ட பணமும் கிடைக்கலாம். சனி இரண்டாம் இடத்தில் உள்ளதால் கொடுக்கல்வாங்கல்களில் கவனம் அவசியம். சிலர் குடும்பத்தைவிட்டு, தொழில் நிமித்தமாகவோ, மற்ற வேலையாகவோ பிரியலாம். வரும் பொருள்கள் சேரும். பணம்வரும். அலைச்சல், திரிச்சல் உண்டு.

### கன்னி

இந்த வாரம் எதிர்பாராத செலவுகள், சிரமங்கள் நேரும். உடல் ரீதியான உபாதைகளாலும் உற்சாகம் குறையலாம். மற்றவர்களை நம்பி ஒப்படைத்த வேலைகள் முடியாமல், அவற்றை நீங்களே செய்ய நேரிடலாம். எதிர்பாராத நல்ல சம்பவங்கள் நடக்கலாம். மற்றவர்கள் மத்தியில் உங்களை முன்னிலைப்படுத்திக் கொள்ள முற்படுவீர்கள். ஜென்மத்தில் சனியும், ஆறில் குருவும் இருப்பதால், தேக ஆரோக்கியத்தில் அடிக்கடி குறைபாடு ஏற்பட்டு, உங்களின் ஊக்கம், உற்சாகத்தைக் குறைக்கலாம். நெருங் கிய உறவினர்கள் சிலருடன் மனஸ்தாபம் வரலாம் என்பதால், அவர்கள் தொடர்பான விடயங்களில் பட்டும்படாமல் நடந்துகொள்ள வேண்டும். பெரிய மனிதர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பது தள்ளிப் போகும். விலை உயர்ந்த பொருள்களை கையாளும் போது கவனம் அவசியம். சுக்கிரன் சாதகமற்ற நிலையில், முயற்சிகள் சிலவற்றில் தோல்வி காணலாம். அதனால், பிரச்னைகளுக்கும் ஆட்படலாம். பற்றாக்குறை நிலவரம் அதிகரிக்கும். புதன் சாதகமாக இருப்பதால், தொழில் ரீதியாக சிலர் கடனுதவி பெறலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள், வெளிவட்டாரத் தொடர்புகள் விரும்பும் விதமாக அமையும். நான்காம் இடத்தில் ராகு இருப்பதால், சுகம்கெடும் வகையில் அலைச்சல் கூடும். தாயார் உடல் நலன் தொடர்பான விடயங்களிலும் கவனம் அவசியம். சூரியன் சாதகமாக இருப்பதால், அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியும். அரசியல்வாதிகளால் ஆதாயம் பெறலாம். வரும் செலவுகள் கூடும். வாக்குவாதங்களில் ஈடுபடலாம். பணவரவு உண்டு.

### துலாம்

இந்த வாரம் லாபகரமான பணவரவுகளைப் பெறலாம். உறவினர்கள் வழியில் உதவி கிடைக்கும். ஆசைப்பட்ட சில பொருள்களை வாங்குவீர்கள். கேளிக்கை, கொண்டாட்டங்களால் சந்தோஷம் உண்டு. செலவுகள், அலைச்சல் உண்டு. சிலரிடம் கடன் வாங்கலாம் அல்லது சிலருக்கு கடன் கொடுக்கலாம். தர்ம, புண்ணிய காரியங்களைச் செய்வீர்கள். விரயஸ்தானத்தில் சனி இருப்பதால், இடம், பூமி தொடர்பான விடயங்கள், குழந்தைகள் தொடர்பான வழிகளில் எதிர்பாராத செலவுகள் நேரும். மற்றவர்களை நம்பி எந்த வேலைகளையும் ஒப்படைக்காமல் நீங்களே அனைத்தையும் செய்வது நன்மை தரும். நல்லவர்கள் போல நடித்து சிலர் உங்களை ஏமாற்றலாம் என்பதால், கவனம் அவசியம். பத்தாம் இடத்தில் செவ்வாய் இருப்பதால், இந்த வேலை, அந்த வேலை என, அடிக்கடி பல வேலைகள் உங்களை முடுக்கிவிட்டுக் கொண்டே இருக்கும். ஓய்வாக இருக்க முடியாத அளவுக்கு ஏதாவது ஒன்றைச் செய்து கொண்டிருப்பீர்கள். உடன் பிறப்புக்கள் நீங்கள் கேட்ட உதவிகளைச் செய்யலாம். ஐந்தாம் இடத்தில் இருக்கும் குருவால், தேவையான பணத்தை புரட்டிக் கொள்வீர்கள். சுபகாரியங்களை நடத்த மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. பிள்ளைகள் எதிர்காலம் கருதி சில காரியங்களைச் செய்வீர்கள். மனைவியின் நீண்ட நாள் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்களால் சந்தோஷம் அடைவீர்கள். வரும் ஊக்கம், உற்சாகம் கூடும். எதிர்பாராத சந்திப்பு நிகழும்.

### விருச்சிகம்

இந்த வாரம் திட்டமிட்ட காரியங்களில் மட்டுமின்றி, திட்டமிடாத காரியங்களிலும் வெற்றி காண்பீர்கள். தொழில் ரீதியாகவோ அல்லது மற்ற வகையிலோ நல்ல செய்திகளைக் கேட்கலாம். உறவினர்கள் உதவி கிட்டும். லாபகரமான பணவரவுகளைப் பெறலாம். அடகு வைத்த பொருள்களை மீட்கலாம். ஆடை, ஆபரணங்கள் வாங்கலாம். விருந்து, விசேஷங்களால் சந்தோஷம் உண்டு. சனி சாதகமான நிலையில் இருப்பதால், தொழில், உத்தியோகம், விவசாயம் போன்ற ஜீவன காரிய விடயங்களில் முன்னேற்றம் காணப்படும். வழக்கு விவகாரங்கள் சாதகமாகும். இழுபறியாக இருந்த கடன் பாக்கிகள் வரலாம். வீடு கட்ட, வீட்டைச் சீரமைக்க மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. இருந்தாலும், குரு சாதகமாக இருப்பதால், உடல் நலன் தொடர்பான விடயங்களில் அக்கறை அவசியம். மனதில் சந்தோஷத்தை விட, ஏதோ ஒருவித குழப்பம், நெருக்கடிகளே அதிகமாக இருக்கும். தாயார் தொடர்பான விடயங்களில் பட்டும்படாமல் நடந்து கொள்வது நல்லது. சூரியன் நான்காம் இடத்தில் இருப்பதால், அரசியல், மருத்துவம், அரசாங்கம், அதிகாரிகள் தொடர்பான விடயங்கள் சாதகமாக இருப்பது சிரமமே. வரும் சுக்கிரன் ஐந்தாம் இடத்திற்கு செல்வதால், பொன், பொருள்கள் சேரும். சகோதரிகள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். பழைய வாகனங்களை மாற்றி புதிய வாகனங்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறலாம். மாமன், மைத்துனர்கள், உறவினர்களால் அனுகூலம் உண்டு. வரும் எதிர்பாராத செலவு, சிரமம் நேரும். பணவரும். சந்தோஷ அனுபவம் உண்டு.

### தனுசு

இந்த வாரம் உடல் ரீதியான உபாதைகளால் உற்சாகம் குறையலாம். நீண்ட தூர பயணங்கள் செல்ல போட்ட திட்டம் நிறைவேறும். சில விடயங்கள் எதிர்பார்த்தபடி நடக்காமல் ஏட்டிக்குப் போட்டியாக நடக்கலாம். இழுபறியாக இருந்த காரியங்கள் முடிவுக்கு வரும். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு, சந்தோஷம் கூடும். தம்பதியர் இடையே அன்னியோன்னியம் கூடும். மூன்றாம் இடத்தில் சூரியன் இருப்பதால், சொல்வாக்கும், செல்வாக்கும் அதிகரிக்கும். அரசு தொடர்பான காரியங்கள் தடங்கலின்றி அனுகூலமாக முடிவுக்கு வரும். அரசியல்வாதிகளை நம்பி இறங்கிய காரியங்களில் வெற்றி பெறலாம். தந்தையுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் நீங்கி பாசம் அதிகரிக்கும். இருப்பினும், குரு,மூன்றாம் இடத்தில் இருப்பதால், தொழில் ரீதியான விடயங்களில் நஷ்டம் வராமல் இருக்க எச்சரிக்கையாக செயற்பட வேண்டும். பிள்ளைகள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். செவ்வாய் 8ம் இடத்தில் இருப்பதால், வாகனங்களில் செல்லும் போது கவனம். வீடு, மனை வாங்கப் போட்ட திட்டங்களை தள்ளிப் போடுவது நன்மை தரும். உடன் பிறப்புக்கள் ஏட்டிக்குப் போட்டியாக நடக்கலாம். நான்காம் இடத்தில் சுக்கிரன் சஞ்சரிப்பதால், பிரிந்த உறவினர்கள் சிலர் மீண்டும் ஒன்று சேரலாம். நீண்ட தூர பயணங்கள் செல்ல போட்ட திட்டம் நிறைவேறும். ஆடம்பர ஈடுபாடுகளில் நாட்டம் செல்லும். ஏழாம் இடத்தில் கேது இருப்பதால், கணவன் மனைவி உறவில் சிறு நெருடல்கள் ஏற்படலாம். எதிர்பார்த்த பணவரவுகளைப் பெறலாம், தண்டச் செலவு நேரும்.

### மகரம்

இந்த வாரம் சந்திராஷ்டமம் என்பதால், மறதி, கவனக்குறைவு, தண்டச் செலவு, வீண் அலைச்சல், காரியத் தடை, பயணங்களில் சிரமம் போன்றவற்றை சந்திக்கலாம். கலகலப்பான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். சில பிரச்னைகளை நினைத்து அதிக அளவில் பயம் கொள்வீர்கள். உடல் ரீதியான உபாதைகளாலும் உற்சாகம் குறையலாம். சூரியன் இரண்டாம் இடத்தில் இருப்பதால், கண் தொடர்பான, உஷ்ண சம்பந்தமான நோய் உபாதைகள் உருவாகலாம். அவ்வப்போது சிலரிடம் வாயைக் கொடுத்து வம்பில் மாட்டிக்கொள்ளலாம். சுக்கிரன், புதன், குரு சாதகமான நிலையில் உள்ளதால், பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். பிள்ளைகள் கல்வி விடயங்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள். எதிர்ப்புகள், போட்டிகள் இல்லாமல் எந்த வேலையையும் சுலபமாக முடித்துக் கொள்வீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி, சந்தோஷம் அதிகரிக்கும். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் சந்திப்பால், மகிழ்ச்சி அடைவீர்கள். அவர்கள் கேட்ட உதவிகளைச் செய்து பெருமைப்படுவீர்கள். சனி ஒன்பதாம் இடத்தில் இருப்பதால், கடன் பிரச்னைகளால் மற்றவர்களுக்கு பயந்து சிலர் வாழ நேரிடலாம். வழக்கு விவகாரங்களாலும் மன அமைதி பாதிக்கலாம். செவ்வாய் பாதகமாக இருப்பதால், உடன் பிறப்புக்கள் வகையில் அனுகூலம் இல்லை. வரும் சுபகாரிய நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம். சந்தோஷ அனுபவம் உண்டு. பணவரவு வரும்.

### கும்பம்

இந்த வாரம் ஊக்கம், உற்சாகமாகவும், பரபரப்பாகவும் செயல்படலாம். நண்பர்கள் வழியில் எதிர்பாராத உதவிகள் கிடைக்கலாம். மற்றவர்கள் சிக்கலாக நினைக்கும் வேலைகளை நீங்கள் எளிதாக முடிப்பீர்கள். சந்திராஷ்டமம் என்பதால், காரியத்தடை, சபலங்களால் சங்கடம், காத்திருப்புகள், இழுத்தடிப்புகள், மன அமைதி பாதிப்பு போன்ற பிரச்சினைகளைச் சந்திக்கலாம். ஜென்மத்தில் சூரியன் இருப்பதால், எதற்காகவும், கோபம் கொள்ளாமல் பொறுமையாக செயல்படுங்கள். மருத்துவ காரியங்களுக்காக கணிசமான பணத்தை செலவிடலாம். பணிபுரிவோர் உயர் அதிகாரிகள் விமர்சித்தாலும், பொறுமை காட்டுவது நன்மை தரும். ஜென்ம குருவால், குடும்பத்தில் சச்சரவுகள் வரலாம் என்பதால், மனைவி, குழந்தைகள் விடயங்களில் விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். சுக்கிரன் சாதகமான நிலையில் இருப்பதால், பயணங்கள், பெண்கள், பொழுது போக்கு விடயங்கள் , பெரிய மனிதர்கள் சகாயம் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். நீண்ட தூர பயணங்கள் செல்ல போட்ட திட்டமும் நிறைவேறலாம். அஷ்டமத்தில் சனி இருப்பதால், எதிலும் ஒன்றுக்கு பல முறை யோசித்தும், முன்யோசனையுடனும் செயற்பட்டால் தோல்விகளை தவிர்க்கலாம். உறவினர்களிடம் மனஸ்தாபம் வராமல் அவர்களிடம் கடன் வாங்குவதை தவிர்க்கவும். ராகு சாதகமான நிலையில் இருப்பதால், மாற்று மதத்தினர், மாற்று மொழி பேசும் நண்பர்கள் உதவிகரமாக இருப்பர். சிலருக்கு புதிய ஆண் அல்லது பெண் நண்பர்களின் நட்பு கிடைக்கலாம். எதிர்பாராத சந்திப்புகள் நிகழும். பக்தி நாட்டம் கூடும். காரிய வெற்றி உண்டு.

### மீனம்

இந்த வாரம் எதிர்பாராத உதவிகள் கிடைக்கலாம். சில வேலைகளை சுலபமாகவும், சகாயமாகவும் முடிப்பீர்கள். சக ஊழியர்கள் உதவிகரமாக இருப்பர். கடன் பாக்கிகள் வசூலாகும். பெண்களால் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். சிலருடன் சேர்ந்து வெளியிடங்களுக்கு செல்லலாம். கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.விரயஸ்தானத்தில் குரு, சூரியன், புதன், சுக்கிரன் இருப்பதால், நீண்ட தூர பயணங்களுக்காகவும், தேக பராமரிப்பற்காகவும், பிள்ளைகள், குடும்பத்தினர் தேவைகளை பூர்த்தி செய்யவும் கணிசமான தொகையை செலவிடலாம். அரசியல், மருத்துவம், அரசாங்கம், அதிகாரிகள் தொடர்பான காரியங்களில் இழுபறிகளே அன்றி, எதுவும் சுலபமாக நடக்க வாய்ப்பு இல்லை. மாமன், மைத்துனர்கள், நண் பர்கள், உறவினர்கள் வகையில் மனஸ்தாபம் வராமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். அவர்கள் தொடர்பான சுப நிகழ்ச்சிகளுக்காக பண உதவி செய்யவும் நேரிடலாம். சுக்கிரன் ஜென்ம ராசியில் உச்ச பலத்துடன் சஞ்சரிப்பதால், மற்றவர்கள் கவனத்தையும் ஈர்க்கும் வகையில், ஆடை, ஆபரணங்கள் அணிவதில் நாட்டம் செல்லும். மற்றவர்கள் பெருமையாக நினைக்கும் வகையில் சில காரியங்களைச் செய்வீர்கள். பெண்கள் பிறந்த வீட்டின் உதவிகளைப் பெற்று மகிழ்ச்சி அடைவர். [illegible]ஸ்தானத்தில் எந்த விடயத்திலும் தெளிவான முடிவுகள் எடுக்க முடியாமல் [illegible]மாற்றங்களுக்கு ஆட்படலாம். சகோதரர்கள், பங்காளிகள் வகையிலும் தொந்தரவே அன்றி, அனுகூலம் இல்லை. வரும் சந்திராஷ்டமம் என்பதால் கவனம் அவசியம். புதிய அனுபவம் பெறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்ததான முகாம்

யாழ்ப்பாணம்.மார்ச்.7

யாழ்.நகர்மைய றோட்டறக் கழகம், யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவினருடன் இணைந்து சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு இரத்ததான முகாம் ஒன்றினை ஒழுங்கு செய்துள்ளது.

இம்முகாம் நாளை திங்கட்கிழமை யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியில் மு.ப 11 மணிக்கு ஆரம்பமாகிறது. முற்றுமுழுதாக பெண்கள் பங்கேற்கும் இம் முகாமில் அனைத்துப் பெண்களின் பங்களிப்பையும் எதிர்பார்ப்பதாக றோட்டறக் கழகம் அறிவித்துள்ளது. (50)

# ஐந்தாவது பிறந்தநாள் வாழ்த்து



## கோடீஸ்வரன் பரணிகன்

ஆறுகால்மடம் மயிலு வீதியைச் சேர்ந்த கோடீஸ்வரன்-லதா தம்பதியரின் செல்வப்புதல்வன் பரணிகன் தனது 5ஆவது பிறந்தநாளை இன்று (07.03.2010) ஞாயிற்றுக் கிழமை மிக எளிமையாகக் கொண்டாடுகின்றார்.

அவரை அம்மா, அப்பா, பிரசாத் மாமா, சுலோ அன்ரா, பெஸ்கி அண்ணா, அன்புத் தங்கை சுகநிதா ஆகியோர் மன மார வாழ்த்துக்கின்றார்கள்.

இவர் எமது பேராயர், வண.பிதாக்கள், சென். ஜோன்ஸ் பரிஸ் முன்பள்ளி ஆசிரியர்கள், உற்றார், உறவினர், நண்பர்களது ஆசீர்வாதத்துடன் சீரும் சிறப்புமாக வாழ வாழ்த்துகின்றோம்.

மயிலு வீதி,
ஆனைக்கோட்டை.

தகவல்:
கோ.லதா (தாய்).

# பல ஆண்டுகள் இடைவெளியின் பின் பாலைதீவு அந்தோனியார் பெருவிழா

பல ஆண்டு கால இடைவெளியின் பின் பாலைதீவு தூய அந்தோனியார் ஆலய விழாவை இன்று 7ஆம் திகதி கொண்டா யாழ். மறை மாவட்டம் ஆயத்தமாகியுள்ள வேளை புதுமைகள் புரியும் இப் புனிதரின் புனித ஆலயத்தைப் பற்றி நாம் நோக்குவதும் சிறப்பான ஓர் அம்சமாகும்.

யாழ். குடாநாட்டிலிருந்து கிட்டத்தட்ட 10 மைல்களுக்கு அப்பால் உள்ள அழகிய வெண்மணலைக் கொண்ட நீலக்கடலின் கரையோரத்தை தன் அழகாகக் கொண்ட பாலைதீவு என்னும் இச் சிறிய தீவிலேயே தூய அந்தோனியாரின் ஆலயமும் உண்டு. 1895 ஆம் ஆண்டு இவ் ஆலயம் மீனவர்களால் அமைக்கப்பட்டு அங்கு அவர்கள் தம் தொழிலுக்காகவும், பாதுகாப்புக்க்ாகவும் புனிதரின் சுரூபத்தை வைத்து வழிபட்டு வந்ததாக நல்லூர் சுவாமி அருட்பணி ஞானப்பிரகாசர் எழுதிய நூலின் சான்றுகள் கூறுகின்றன. தற்போது இவ் ஆலயம் வலைப்பாடுப் பங்கின் பங்குத்தந்தையின் கண்காணிப்பில் வழிநடத்தப்படுகின்றது.

தவக்காலத்தில் இறைமக்கள் குறிப்பாக பாசையூர், குருநகர், மண்டைதீவு, அல்லைப்பிட்டி, நாவாந்துறை, வலைப்பாடு, புங்குடுதீவு ஆகிய மக்கள் தாம் செய்யும் தவக்கால யாத்திரையாகவும் இந்த ஆலயத்துக்குச் சென்று வருவது வழக்கமாக உள்ளது. பல புதுமைகளை தம் விசுவாசிகளுக்குப் புரிந்து வரும் எம் புனிதர் அந்தோனியார் இத் தீவிலும் பல புதுமைகளை ஆற்றியுள்ளார் என்பது வரலாறு.

புனித அந்தோனியாரில் மட்டில்லாப் பக்தி கொண்ட ஒரு சிலர் அங்கு கூடும் மக்களுக்கு இலவசமாக தண்ணீர் கொண்டு வந்து கொடுப்பதும் மற்றும் உணவு, விருந்துகள், அந்தோனியாரின் அப்பம் என்ற தருமங்களையும் யாத்திரிகர்களுக்காக செய்வதும் அங்கு இடம் பெறும் முயற்சியாகும்.

எல்லா மக்களும் தங்கள் பங்குகளில் இருந்து இங்கு வந்து புனிதரின் விழாவில் கலந்து, மகிழ்ந்து அவரின் ஆசியையும் இறைவனை நோக்கி அவரின் பரிந்துரையையும் கேட்டு நிற்கும் காட்சி ஓர் அருட்சியான ஒன்றாகும். கொடிய யுத்தத்தின் பின் கோடி அற்புதரை இத் தீவில் கண்டு அவர் அருள் பெற எம் மக்கள் புறப்பட் இருக்கும் இந் நாள்களில் புனிதரின் ஆசீரும் அருளும் எல்லோருக்கும் கிடைக்க மன்றாடுவோம்.

அருட்பணி.இ.ஜி.விஜின்ரஸ்
ஆயரின் செயலர்,
ஆயர் இல்லம்.

## பதவி வெற்றிடம்-சிரேஷ்ட மருத்துவர்

THE HALO TRUST

HALO Trust ஆனது உலகில் 10 நாடுகளில் பணிபுரியும் ஒரு பிரித்தானிய கண்ணிவெடி அகற்றும் அரசசார்பற்ற அமைப்பாகும். HALO Trust ஆனது இலங்கையில் சமூக பாதுகாப்புக்காகவும் பொருளாதார அபிவிருத்திக்காகவும் தேசிய பிராந்திய மற்றும் பிரதேச அளவில் கண்ணி வெடிகளையும் ஏனைய யுத்த வெடிபொருள்களையும் அகற்றி வருகின்றது.

HALO Trust கிளிநொச்சி அமைவிடத்திற்கு சிரேஷ்ட மருத்துவரை நியமிக்கவுள்ளது.

தேவையான தகுதிகள்/அனுபவம்

1. சிரேஷ்ட மருத்துவராக ஆகக்குறைந்தது 3 வருடங்கள் பணியாற்றிய அனுபவம்.
2. ஆங்கிலத்தில மிகச்சிறந்த ஆளுமை.
3. செல்லுபடியாகக் கூடிய சாரதி அனுமதிப்பத்திரம்.
4. நீண்ட நேரம் கடின வேலை செய்யக்கூடிய திறனும் வட இலங்கையின் எப்பகுதிக்கும் சென்று பணியாற்றும் விருப்பமும் கொண்டிருத்தல்.
5. மாதத்தின் 3 வாரங்களுக்கு கிளிநொச்சியில் தங்கியிருந்து பணியாற்ற வேண்டும்.

மேற்குறிப்பிட்ட தகுதியுடையவர்கள் தமது சுயவிவரக்கோவை, தொடர்பு கொள்வதற்கான விவரம், அனுபவம் பற்றிய சுருக்கமான குறிப்புடன் 09.03.2010 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

அனுப்பவேண்டிய முகவரி:

ஹேலோ டிரஸ்ட்,
12, நல்லூர் குறுக்குத் தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம்.

ஹேலோ டிரஸ்ட்,
140, கண்டி வீதி,
கிளிநொச்சி.

மின்னஞ்சல்: mail@halosrilanka.org

தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பத்தாரிகளே நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்படுவர். இப்பதவி நிதிவழங்குநர்களிற்கேற்ப மீள புதுப்பிக்கக் கூடியதான ஒப்பந்த அடிப்படையிலானது. ஹேலோ டிரஸ்ட் ஆனது இருபாலாரும் விண்ணப்பிப்பதற்கு சமசந்தர்ப்பத்தை வழங்கும்.

# சங்கானைக் கூ.சங்கத்தில் சீனிக்குத் தட்டுப்பாடு

மூளாய்.மார்ச் 7

சங்கானைப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைக் கடைகளில் சீனிக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுவதால் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க நுகர்வோர்கள் கூடிய விலை கொடுத்து தனியார் கடைகளில் வாங்க வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சங்கானைப் பல நோக்குக் கூட்டுறவு சங்கக் கிளைகளில் பொதுவாக பொருள்கள் தட்டுப்பாடு ஏற்படுவது அண்மைக் காலமாக வழமையாகி வருகிறது.

இந்நிலையில் சங்கக் கிளைகளில் தற்போது சீனிக்குப் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (50-93)

## எலைட் வினாத்தாள்கள் தற்பொழுது யாழ்.மாவட்டத்திலும்!

வவுனியா, மன்னார் மற்றும் தமிழ் மாவட்டங்களிலும் புலமைப்பரிசில் மாணவர்கள் உயர் புள்ளிபெற வழிகாட்டிய "எலைற் நிறுவனம்" தற்பொழுது யாழ். நகரிலும் தனது சேவையை விஸ்தரித்துள்ளது. எலைட் வினாத்தாள்கள் மற்றும் பயிற்சி நூல்களை யாழ். நகரிலுள்ள பூபாலசிங்கம், அன்னை, சுன்னாகம் துர்க்கா மற்றும் ஏனைய பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்புகளுக்கு : 0776510134, 0774118950

## வேலையாள் தேவை

எலக்றோ பிளேட்டிங் பொலிசிங் வேலைக்கு அனுபவமுள்ள வேலையாள் தேவை.

செல்வா ஹாட்வெயார்ஸ்,
120, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

## காணிகள் தேவை

* கடற்கரை வீதி, குருநகர் பகுதியில் முதலாம் குறுக்குத் தெரு சந்திக்கு அண்மையில் 3 பரப்புக் காணியும்,
* பலாலி வீதி புன்னாலைக்கட்டுவன் பகுதியில் கிணற்றுடன் கூடிய 5பரப்புக் காணியும்,
* கண்டிவீதியில், யாழ்.நகரிலிருந்து 10 மைல்கள் தூரத்திற்கு இடைப்பட்ட பகுதியில் 5-10 பரப்புக் காணியும் தேவை.

தொடர்பு: 0772078458

## வீடுவளவு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் 3ஆம் குறுக்குத்தெருவில், அடைக்கலமாதா கோவிலுக்கு அண்மையாக 10 அறைகள் கொண்ட சகலவசதிகளுடன் கூடிய மாடிவீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0776146434

# ஓராம் ஆண்டு நினைவலை

பிறப்பு
07 ★ 02 ★ 1970



இறப்பு
16 ★ 02 ★ 2009

## பண்டாரி விநாயகமூர்த்தி

(கார்-மூர்த்தி-ஆனைவிழுந்தான்)

*வந்தவேலை முடியுமுன் பாதியிலே போனதேனோ?*
*குண்டு ஓசைக்கிடையில் குழந்தைகள் அழுகுரல் கேட்கலையா?*
*நாங்கள் மீண்டும் மனிதப்பிறவி எடுத்துள்ளோம்*
*ஆனால் நடைப்பிணமாக உண்ணுகின்றோம், உறங்குகின்றோம்*
*உள்மனதின் வேதனையை யார் அறிவார் இவ்வுலகில்.*

16.02.2009 அன்று தேவிபுரம் பகுதியில் ஏற்பட்ட அனர்த்தத்தின் போது எம்மைவிட்டுப் பிரிந்த எம் குடும்பத் தலைவரின் ஓராண்டு நினைவு இன்று (07.03.2010) சிறுப்பிட்டி வடக்கைச் சேர்ந்த கந்தசாமி (கார்- சிவம்) வீட்டில் நடைபெறவுள்ளதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சிறுப்பிட்டி, வடக்கு
நீர்வேலி.

(95551)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்,
சகோதரன்-ப.கிருஷ்ணகுமார்.

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை தேவரத்தினம்

(ஓய்வு பெற்ற ஆசிரியர், பாலசுப்பிரமணிய வித்தியாசாலை, ஆனைக்கோட்டை)



நவாலி தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட ஓய்வுபெற்ற ஆசிரியர் வேலுப்பிள்ளை தேவரத்தினம் நேற்று முன்தினம் (05.03.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஓய்வுபெற்ற ஆசிரியை அன்னப்பிள்ளை தேவரத்தினத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான ஓய்வுபெற்ற ஆசிரியர் வேலுப்பிள்ளை-சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், திருமதி அருளையா இன்பமலர், வே.சபாரத்தினம், திருமதி தம்பையா றஞ்சிதமலர், வே. யேசுரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், வே. ரவீந்திரன் (பெற்றோலியக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்), தே. தேவரஞ்சன் (வியட்னாம்), காலஞ்சென்ற தே.ஞானரூபன் (வசந்தன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி மே.ரவீந்திரன் (ஆசிரியை, சென்.சாள்ஸ் ம. வி.), திருமதி சு.தேவரஞ்சன் (சென்.மெதடிஸ்த கல்லூரி, கொள்ளுப்பிட்டி) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரவீன், கெனா, சன்றா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை அவரது இல்லத்தில் இன்று (07.03.2010) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று பி.ப 3 மணிக்கு பூதவுடல் நவாலி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

தேவாலய வீதி,
நவாலி வடக்கு, மானிப்பாய்.

(95530)

தகவல்:
குடும்பத்தினர்.

# நன்றி நவில்லல்



அமரர்

திருமதி சரஸ்வதிதேவி பொன்னையா

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்டு அமரத்துவமடைந்த திருமதி சரஸ்வதிதேவி பொன்னையா அவர்களின் மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்கள், மலர் வளையம் வைத்து கௌரவித்தவர்கள், அனுதாபச் செய்தி அனுப்பியவர்கள் மற்றும் பல்வேறு வழிகளில் உதவி செய்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல்:
பொ.சிவபாலன் (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துர்க்காபுரம் மகளிர் இல்லத்தில் வளர்ந்தவர்கள் இப்போது வாழ்க்கையில் சீரும் சிறப்புடனும்


## ஆன்மீகம் சார்ந்த மனப்பதிவுகளால் நன்னிலையில்

### இன்று இருபத்தெட்டாவது அகவையில் துர்க்காபுரம் மகளிர் இல்லம்

''இன்னறுங் கனிச்சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகளியற்றல்
அன்ன சத்திரமாயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிர நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்''

பாரதியின் மேற்கண்ட வாக்குக்கு செயல் வடிவம் கொடுத்தவர் சிவத்தமிழ்ச் செல்வி அன்னை அவர்கள். 1982 ஆம் ஆண்டு அன்னையின் தூய நோக்கினால் உருவானதே தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லம். இன்று இவ்வில்லம் வளர்ந்து பெரு விருட்சமாகி வேரூன்றி நிலைத்து நிற்பதற்குக் காரணம் துர்க்கை அம்மனின் பேரருட் சக்தியும், அம்மா அவர்களின் தூய உள்ளமும், ஆலயநிர்வாக சபையின் புனிதமான பணியுமே ஆகும். 9 பிள்ளைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட இவ்வில்லம் இன்று எத்தனையோ வசதிகுன்றிய பெண் பிள்ளைகள் வளர்வதற்கு நிலைக்களனாக விளங்குகின்றது.

பெண் பிள்ளைகளை வளர்த்தல் என்பது சுலபமான காரியமன்று. ஒரு வீட்டில் ஒரு பெண் பிள்ளையை வளர்த்தலே இன்று கடினமான பணியாகக் காணப்படுகின்றது. ஆனால் பெண் பிள்ளைகளையும் மிகவும் திறமையாக வளர்க்க முடியும் என்று வாழ்ந்து காட்டியவர் அம்மா அவர்கள். ஆலயத்தோடு சார்ந்த அறவாழ்க்கைப் பயிற்சி மூலம் ஏழைப் பெண் பிள்ளைகளை வளர்த்து அவர்களையும் சமூகத்தின் நற்பிரஜைகளாக்கலாம் என்ற சமுதாயப் புரட்சிக்கு வித்திட்டவர் அன்னை அவர்கள். தனது ஆளுமைத் திறத்தினாலும், அன்பினாலும் அடியவர்களைத் தன்பால் ஈர்த்து இவ்வில்லத்துக்குரிய பொருளாதாரக் காரணிகளைத் தேடி மிகவும் சிறப்பான முறையில் நடத்தி சைவத்துக்கும், தமிழுக்கும் பெருமை தேடித் தந்தவர் இவர். இன்றும் அம்மையார் அவர்களின் பணியைத் தொடர்ந்தும் சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்பவர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் ஐயா அவர்கள். இன்று இவ்வில்லத்தில் 108 பிள்ளைகள் கல்வி கற்று வருகின்றார்கள் என்பது இதற்குச் சான்று பகரும். இடம் பெயர்ந்து பல இன்னல்களை அனுபவித்த பெண் பிள்ளைகளுக்கும் இன்று இவ்வில்லம் ஆறுதலைக் கொடுக்கும் நிழல் மரமாக விளங்குகின்றது.



இவ்வில்லத்தில் காலத்துக்குக் காலம் பல பிள்ளைகள் வளர்ந்து கல்வி கற்றுப் பல்கலைக்கழகம், தேசிய கல்வியியற் கல்லூரி ஆகியவற்றுக்குச் சென்று தமது வாழ்வில் முன்னேற்றம் கண்டுள்ளனர். இன்று பலர் அரச உத்தியோகம் வகிப்பவர்களாகவும் வேறுசிலர் நிறுவனங்களில் பதவி வகிப்பவர்களாகவும் வேறுசிலர் தனியார் வெளிநாடுகளில் வதிபவர்களாகவும் காணப்படுகின்றனர். இங்கு வளர்ந்த பிள்ளைகள் ஏதோ ஒரு வகையில் திறமை பெற்றுத் தமது வாழ்க்கைப் பாதையைச் சீரான முறையில் கொண்டு செல்வதற்குப் பயிற்சி அளிக்கப் பட்டுள்ளனர். ஒரு வீட்டில் காணப்படாத சகல வசதிகளும் உடையவர்களாக இவர்கள் வளர்க்கப்படுவது கண்கூடு.

1984ஆம் ஆண்டு 4ஆம் வகுப்பில் இவ்வில்லத்தில் சேர்ந்த நான் பல்கலைக்கழகம் சென்று தமிழில் சிறப்புப் பட்டம் பெற்ற பட்டதாரியாகி இன்று ஒரு ஆசிரியையாகக் கடமையாற்றுகிறேன் என்றால் எனது வளர்ச்சிக்கு உதவியது இவ்வில்லமே ஆகும். என்பதனை நன்றியுடன் தெரிவிக்கிறேன். தனது அன்பான அரவணைப்புடனும், கண்டிப்புடனும் கல்வியைப்



போதித்து எம்மை உயர்த்திய அன்னையையும் ஆலய நிர்வாக சபையினரையும் நாம் என்றும் மறக்க மாட்டோம். இவர்களது சேவையினால் எம்போன்ற பல பிள்ளைகளது வீடுகள் சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றன என்றால் மிகையில்லை.

சமய வாழ்க்கை மூலமே நாம் அமைதி நிலையை அடைய முடியும். இங்கு வளரும் பிள்ளைகளும் அதிகாலை நித்திரை விட்டு எழுவது தொடக்கம் இரவு

**திருமதி தவனேஸ்வரி சிவகுமார்**
ஆசிரியை
யா/கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயம், மல்லாகம்

நித்திரைக்குச் செல்லும் வரை இவர்களது வாழ்க்கை வட்டமும் சமய நிலையை ஒட்டியே காணப்படுவது சிறப்பான விடயமாகும். ஆன்மீகம் சார்ந்த எமது மனப்பாங்குகள்- மனப்பதிவுகள் எம்மை நல்நிலையை அடையத் தூண்டுவதாகும். இந்த வகையில் இவ்வில்லத்தில் வளரும் பிள்ளைகளும் பாக்கியசாலிகளே.

எம்போன்ற பல.பெண்பிள்ளைகளின் வாழ்க்கையில் ஒளியைப் பரப்ப துர்க்காபுரம் மகளிர் இல்லம் உதவட்டும் என எம்பெருமாட்டி துர்க்கா தேவியைப் பிரார்த்தித்து நிறைவு செய்கின்றேன். *

---

# கலை ஊடகத்துறைகளில் முன்னிலை வகித்த நாதஸ்வரக் கலைஞர் ஞானசுந்தரம்



87ஆவது அகவையில் துர்க்காதேவி தேவஸ்தானத்தில் விருதுபெற்ற வேளையில்....

மூதுபெரும் கலைஞர் நாதஸ்வர வித்துவான் எஸ்.ஆர். ஞானசுந்தரம் அவர்களுக்கு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம் அன்னை தங்கம்மா அப்பாக்குட்டியின் 85ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழாவில் ''சிவத்தமிழ்'' விருது வழங்கிக் கௌரவித்தமை பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள், நாதஸ்வர வாத்தியக் கலைஞர்கள், இசைவேளாளர் சமூகத்தினரைப் பெரிதும் மகிழ்வித்த ஒரு நிகழ்வாக அமைந்தது.

**அதி முக்கியத்துவம் பெறும் விருது**

ஏற்கனவே ஞானசுந்தரம் அவர்கள் கலாபூஷணம் விருதினைப் பெற்றுக்கொண்ட சிறப்புக்குரியவர். அத்துடன் சமாதான நீதவான் பட்டத்தையும் பெற்றுக் கொண்ட கௌரவமும் அவருக்குண்டு. இவை எல்லாவற்றையும் விட இன்று அவர் பெற்றுக்கொண்டுள்ள 'சிவத்தமிழ்' விருது அதி முக்கியத்துவம் பெறுகின்றது.

**பாராட்டுகளுக்கு உரியவர்கள்**

ஞானசுந்தரம் அவர்களுக்கு இன்று 90ஆவது அகவை அண்மிக்கின்றது. தளர்ந்து விட்டார். மெலிந்து விட்டார். நீரிழிவு நோய் அவரைத் தாக்கி விட்ட காரணத்தால் கண்பார்வையும் செயலற்றுவிட்ட வேளையில் அவர் வாழும் காலத்திலேயே அவரைக் கௌரவித்த துர்க்காதேவி தேவஸ்தானத்தினர் பாராட்டுதல்களுக்கு உரியவர்களா கின்றனர்.

**மாவிட்டபுரம் தேவஸ்தானம்,**

யாழ்.குடாநாட்டில் இரவு பகலென்று வித்தியாசமில்லாமல் கோயில் திருவிழாக்கள் நடைபெற்ற காலத்தில் பல முன்னணி நாதஸ்வர வித்துவான்களைப் பேணி வளர்த்தெடுத்த பெருமை மாவிட்டபுரத்திற்கும் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் தேவஸ்தானத்தினத்திற்கும் உரியதாகும். மாவிட்டபுரம் உருத்திராபதி நாயனக்காரரின் மரபில் உதித்த ஞானசுந்தரம் அவரின் சகோதரரின் மகனாவர்.

ஞானசுந்தரம் அவர்களை வளர்த்தெடுத்த பெருமையில் உருத்திராபதி நாயனக்காரருக்குப் பெரும் பங்குண்டு. அந்தக் காலத்தில் ஞானசுந்தரம் இலங்கை, இந்தியாவைச் சேர்ந்த பல முன்னணி வித்துவான்களுடன் சேர்ந்து நாதஸ்வரம் வாசித்துச் சிறப்புப்பெற்ற பெருமைக்குரியவர்.

**ஞானமும்சுந்தரமும்**

ஞானசுந்தரம் அவர்களுடைய வாசிப்பில் ஞானமும் இருக்கும் சுந்தரமும் இருக்குமென அவரது இரசிகர்கள் பலர் கூறக் கேட்டிருக்கிறேன். நாதஸ்வரக் கலைஞர்களுக்குரிய நடை, உடை பாவனை, காதில் கம்மல், சிரித்த முகத்துடன் அவர் எவரையும் வசீகரிக்கும் பண்பினர். இவரை யான் அதிகம் அறிந்து கொண்டது முதன் முதலில் ஒரு பத்திரிகையாளராகத்தான். தினபதி, சிந்தாமணி, உதயன் ஆகிய பத்திரிகைகளுடன் இவருக்கு அதிக தொடர்புகள் இருந்தன. இவர் 'இசை'யாளர் என்ற பெயரில் தம்து சமூக மேம்பாட்டிற்கான பத்திரிகை ஒன்றையும் நடத்திய பெருமைக்குரியவர். 'சிலம்பொலி' என்ற பத்திரிகையை நடத்திய சிறப்பு இவருக்குண்டு.

**நல்லுறவு பேணியவர்**

சமூக சேவையிலும் தனக்கென தனி முத்திரை பதித்த ஞானசுந்தரம் வீமன்காமம் கிராமோதய சபையின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுச் சிறந்த சேவையாற்றியவர். பளை கடத்தியாவத்தைக் கிராம அபிவிருத்திச் சங்கம், மாவிட்ட புரம் கிராம அபிவிருத்திச் சங்கம், கடத்தியாவத்தை சனசமூக நிலையம், தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கம், கம்பன் கலைக்கழகம், காசநோய் தடுப்புச் சங்கம், தெல்லிப்பழை வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் போன்ற அமைப்புகளில் பல முக்கிய பதவிகளை வகித்து அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர். சமூகசேவை மனப்பான்மை இயல்பாகவே அவரிடம் காணப்பட்டமையே இதற்குக் காரணம் என்பேன்.

**- 'நடா' -**

**இளைய தலைமுறையினர் அறியார்**

இவர் ''இசையாளன்'' ''சிலம்பொலி'' ஆகிய பத்திரிகைகளை இன்று அறுபது ஆண்டுகளுக்கு முன்பே நடத்தியவர் என்ற இவரது வரலாற்றை இன்றைய இளைய தலைமுறையினர் அறிய மாட்டார்கள்.

**இசைவேளாளர் சங்கம்**

இவர் இசை வேளாளர் சங்கத்தைத் தாபித்து இசை வேளாளர்களின் முன்னேற்றத்துக்காகப் பாடுபட்டவர்.

ஞானசுந்தரம் அவர்கள் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் ஆரம்பிக்கப்பட்ட மங்கள இசைப் பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றி நாதஸ்வரக் கலையைப் பல மாணவர்களுக்குக் கற்றுக் கொடுத்த விற்பன்னர். தமது இந்த வயதிலும் நாதஸ்வரக் கலைஞர்களுடைய பழைய அந்தப் பாரம்பரியங்களைப் பேணிப் பாதுகாத்து வருபவர்.

தனது சமூகத்திற்கும், தமது துறைக்கும், தமது கிராமத்திற்கும், தமது நாட்டிற்கும் பிறிதொரு நாதஸ்வரக் கலைஞர் இவரைப்போல அர்ப்பணிப்புடன் தொண்டாற்றியிருப்பார் எனக் கூற இயலாது.

**தணியாத தாகம்**

தமது காலத்தில் எப்படியாவது ஒரு காணி வாங்கி அதில் இசை வேளாளர்களுக்கான இசைப் பயிற்சிக் கல்லூரி ஒன்றை நிறுவ வேண்டும் என்பது இவரது மனதில் உள்ளதொரு தாகமாகும். மகேஸ்வரன் அவர்கள் இந்து கலாசார அமைச்சராக இருந்த போது மேற்படி கல்லூரி ஒன்றை நிறுவுவதற்கான திட்டமொன்று முன் வைக்கப்பட்ட போதும் துரதிஷ்ட வசமாக அம் முயற்சிகை கூடவில்லை.

**வரலாற்றுக் கடமை**

துர்க்காதேவி தேவஸ்தானம் ஞானசுந்தரம் அவர்களுக்குச் 'சிவத்தமிழ் விருது' அளித்ததன் மூலம் அவரை மட்டுமல்லாமல் அவரது முழுச் சமூகத்தையுமே கௌரவித்துள்ளது எனலாம். இதேவேளை, துர்க்காதேவி தேவஸ்தானம் தனது வரலாற்றுக் கடமை ஒன்றையும் நிறைவேற்றி உள்ளது. ஞானசுந்தரம் அவர்களை இன்றைய இளைய தலை முறையினருக்கு அறிமுகஞ்செய்து வைக்க வேண்டும் எனப் பெரிதும் அவாக்கொண்டிருந்தேன்.

அக் கைங்கரியத்தை ஏற்படுத்தித் தந்தமை எல்லாம் வல்ல அந்தத் துர்க்கா தேவி யின் திருவருளே என்பேன். *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச மகளிர் தினம்- மார்ச் 08

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு எதிரான செயற்பாட்டுக்குழு, பிராந்திய சுகாதாரப் பணிமனை யாழ்ப்பாணம் என்பன இணைந்து அமைதிப் பேரணி நிகழ்வினை கச்சேரி முன்பாக ஆரம்பித்து யாழ்.நகரத்தில் முடிவுபெறும் வகையில் முன்னெடுக்கவுள்ளது. இந்நிகழ்வில் ''பூர ணத்துவம்மிக்க பெண்ணை உருவாக்குவதனூடாக பால்நிலை சமத்துவத்தை பேணுவோம்'' என்ற கருப்பொருளை யாழ்ப்பாண மாவட் டத்தில் 2010 இன் கருப்பொருளாகக் கொண்டு செயற்படுவதை நோக்காகக் கொண்டு நடைபெறவுள்ளது. இந்நிகழ்வினை அரசாங்க அதிபர் ஆரம்பித்து வைப்பதுடன், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கம், மேலதிக அரசாங்க அதிபர், திருமதி ரூபினி வரதலிங்கம், வைத்தியர் திருமதி திருமகள் சிவசங்கர், திரு.உதய டி சில்வா, H.Q.I யாழ்ப்பாண பொலிஸ் நிலையம், ஆகியோரின் பங்குபற்றுதலுடன் நடைபெற உள்ளது என்பதை செயற்பாட்டுக் குழுவின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் ''பூரணத்துவம்மிக்க பெண்ணை உருவாக்குவதனூடாக பால்நிலை சமத்துவத்தை பேணுவோம்'' என்ற கருப்பொருளை யாழ்ப்பாண மாவட்டத்தில் 2010 இன் கருப்பொருளாகக் கொண்டு செயற்படுவதை நோக்காக கொண்டு நடைபெறவுள்ளது.

இம் முன்னெடுப்பில் சமூக அங்கத்தவர்கள் எல்லோரும் பங்களிப்பை வெளிப்படுத்துமாறு நிகழ்வின் இணைப்பாளர் கேட்டுள்ளார்.

பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு எதிரான செயற்பாட்டுக்குழு, யாழ்ப்பாணம்.

(சி/565544)

## சட்டத்தரணிகளாகிட! சட்டக் கல்லூரி நுழைவுப் போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டி வகுப்புக்கள்

இவ்வருடம் புரட்டாதி மாதம் நடைபெற இருக்கும் சட்டக் கல்லூரி நுழைவுப் பரீட்சைக்கான வழிகாட்டி வகுப்புக்கள் இம்மாதம் ஆரம்பமாகவுள்ளன. போட்டிப் பரீட்சையில் தேர்ச்சி பெறுபவர்கள் 2014 இல் இலங்கை உயர்நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக வெளியேற முடியும். பயிற்சி வகுப்புக்களில் கலந்துகொண்டு சட்டத்தரணியாக உருவாக ஆர்வம் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சட்டக்கல்லூரி நுழைவுப் பரீட்சைக்கான வழிகாட்டி வகுப்புக்களை கொழும்பில் நடத்திவரும் அனுபவம்மிக்க, பல சட்டத்தரணிகளை கடந்த வருடங்களில் உருவாக்கிய சட்டத் தரணிகள், சட்டக்கல்லூரி விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் சட்டக் கல்லூரி மாணவர்கள் இணைந்து இவ் வழிகாட்டி வகுப்புக்களை நடத்தவுள்ளார்கள்.

சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களில் வழிகாட்டி வகுப்புக்கள் நடத்தப்படும்.

**அடிப்படைத் தகைமைகள்:**

* க.பொ.த. (சாதாரண) பரீட்சை ஆங்கிலம் மற்றும் தமிழ்/சிங்களம் திறமைச்சித்தி (C)உடன்
* க.பொ.த. (உயர்தர) பரீட்சை பழைய பாடத்திட்டம் ஆயின் 4 பாடங்கள் சித்தி, புதிய பாடத்திட்டம் ஆயின் 3 பாடங்கள் சித்தி
* வழிகாட்டி வகுப்புக்கான விண்ணப்பங்கள் 15.03.2010 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.
* பதிவுகளை மேற்கொள்ள வேண்டிய முகவரி

Academy for Legal Environment, Top World Com
768B,Point Pedro Road, Nallur, Jaffna.
Tel:+94212228387 Hotline: 0777575701

இவ்விடயம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நாளை (08.03.2010),திங்கட்கிழமை பி.ப 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது. சட்டத்துறையில் ஆர்வமுள்ள அனைவரும் கலந்து கொள்ளலாம்.

மேற்படி முகவரியில் 08.03.2010 முன் தங்கள் ஆசனங்களை உறுதிப்படுத்திக் கொள்ளவும். கருத்தரங்கு நடைபெறும் இடம்: மறைக்கல்வி நடுநிலையம், பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

(95547)

## மரண அறிவித்தல்

### துரைசிங்கம் ஷடாட்சரன்

வேதக்குட்டிவளவு, நவாலி தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட துரைசிங்கம் ஷடாட்சரன் 05.03.2010 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் மட்டுவில் சிவசந்திரமௌலீசர் கோயிலினதும் (கலுவம் சிவன்கோயில்), கலுவம் காளி கோயிலினதும் பரம்பரை தர்மகர்த்தாவும், நிர்வாகியும், ஓய்வுபெற்ற உதவி புடைவை அதிகாரியும், தொழில் அதிகாரியும், காலஞ்சென்ற துரைசிங்கம் மற்றும் செல்லம்மா தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்ற திருமதி குணபூஷணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தம்பு - அமிதலக்சுமி தம்பதியரின் மருமகனும் திருமதி சந்திரிகா (கனடா), காலஞ்சென்ற சிவசந்திரமௌலி மற்றும் திருமதி வசுந்தரா (கொமஷல் வங்கி, சுன்னாகம்), திருமதி தபோதினி (அம்பாள் - அவுஸ்திரேலியா), திரு.சஞ்சயன் (இந்தியா), துளசி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுதேந்திரன் (கனடா), ஜெபாகதிர்காமர் (கொமர்ஷல் வங்கி, யாழ்ப்பாணம்), பஞ்சநாதன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் மாமனும் காலஞ்சென்றவர்களான திருமதி இராஜபூபதி அருணாசலம், திருமதி சிரோன்மணி நவரத்தினராஜா, திருமதி சிவானந்தசோதி பாலச்சந்திரன், திரு.துரைசிங்கம் பத்மநாதன் ஆகியோரின் சகோதரனும் சிவம், அபர்ணா ஆகியோரின் அன்புப் பேரனு மாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (07.03.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நவாலி ஆரியம்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நவாலி தெற்கு,
நவாலி.

தகவல்:
திருமதி வசுந்தரா ஷடாட்சரன் கதிர்காமர்.

(95546)

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்
SUPER MASALA
தங்கப்பரிசுப்போட்டி

☑ சுப்பர் மட்டன் மசாலா
☑ சுப்பர் மீன் மசாலா
☑ சுப்பர் சிக்கன் மசாலா
☑ சுப்பர் பிரியாணி மசாலா
☑ சுப்பர் குறுமா மசாலா

என்பவற்றில் மூன்றின் பக்கட்டுகளை இணைத்து
Super Masala Food Company
No: 478/1G, K.Cyril Perera Mawatha, Colombo - 13
என்ற முகவரிக்கு அனுப்பி பெறுமதிமிக்க தங்கத்தை பரிசாக வெல்லுங்கள்.

BEST QUALITY மங்கையர் மனம் கவர் சுப்பர் மசாலாத்தூள்
தரம், மணம், குணம் கொண்ட
இலங்கையின் முன்னணி மசாலா தூள்
NSJ Multi Marketing
கொக்குவில் மேற்கு, யாழ்ப்பாணம். Tel: 021 2229151
மசாலாத்தூள் என்றதும் ஞாபகத்திற்கு வரவேண்டிய பெயர் சுப்பர் மசாலாத்தூள்
விபரங்களுக்கு: 0773762278

சுப்பா மசாலா புட் கம்பனி
No:478/1G, K.Cyril C Perera Mawatha,
Colombo - 13. Tel: 0114 908640, 0114 341500
Branch: Super Masala Sales Center
Sri Kathirasen Street, Colombo - 11.

திருமண சேவை

சுலபமான வாழ்க்கைத் துணைத் தெரிவுக்குச் சுயதெரிவு முறையே. சுயதெரிவு முறை பற்றிய வரன்முறையைத் தெரிந்திட திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில் மூத்த, புகழ் பூத்த-சுயதெரிவு முறை முன்னோடி-தனிமனித நிறுவுநர்-சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர் மாயெழு வேலமுதனுடன் தொடர்பு கொள்க.
கொழும்பு நேரடித் தொலைபேசி:2360488, 2360694, 4873929

தேவை

CLARET உயர்கல்வி நிறுவனத்தின் யாழ்.கிளைக்கு A/L, O/L படித்த பேச்சாற்றல் உடைய ஆண், பெண் சந்தைப் படுத்தல் முகாமையாளர்கள் உடன் தேவை. நீங்கள் வதியும் பகுதியிலேயே பகுதி/முழு நேரமாக தொழில் புரியலாம். மாதம் 25000/= இற்கு மேல் உழைக்க அரிய வாய்ப்பு. நேர்முகத் தேர்வு 13.03.2010 அன்று காலை 10 மணிக்கு நடைபெறும்.

இல.772, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 3206360

## நாய் கடித்த நபர் 18 நாள்களின் பின்னர் மரணமானார்

நாய் கடித்த நபர் ஒருவர் உரிய முறையில் சிகிச்சை பெறத் தவறிய நிலையில் - பதினெட்டு நாள்களின் பின் நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் மரணமானார்.

இதுகுறித்து தெரியவருவதாவது -

வீடமைப்புத் திட்டம், கட்டுடை மேற்கைச் சேர்ந்த இராமையா விவேகானந்தன் (வயது 34) வன்னியில் ஸ்கந்தபுரத்திலுள்ள தனது வீட்டைப் பார்வையிடச் சென்றிருந்தவேளை அங்கு வீதியில் நின்ற நாய் அவரைக் கடித்துள்ளது. ஆனால் அவர் அதற்கான சிகிச்சையைப் பெறவில்லை.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் சுகவீனமுற்ற அவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் அங்கிருந்து யாழ். போதனா வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.(ஓ-16)

### நல்லூர்ப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் கூட்டம்

நல்லூர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம், விவசாயக்குழுக் கூட்டம் என்பன நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை 9.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செய [illegible] தலைமையில் நடைபெறவுள்ளன. (50-167)

Oriental Aquarium Multy Farm

கொழும்பு விலையில் வளர்ப்புக் கலர் மீன்கள்
18.02.2010 முதல் அதிரடி மலிவு விற்பனை

வளர்ப்புக் கலர் மீன்கள், மீன் தொட்டி, மீன்தொட்டி உபகரணங்கள், வளர்ப்பின செல்லப் பிராணிகள் (வளர்ப்பின புறாக்கள், முயல், கினிப்பிகள், குருவிகள்) பல விதமான சாடி வகைகள் கண்டியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பல வர்ணப் பூக்கன்றுகள் என்பவற்றை மிக மலிவான விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு
தொடர்பு: மல்லிகாம்
61,இராமநாதன் வீதி, கலட்டி,
யாழ்ப்பாணம் (நாச்சிமார் கோயில் முன்வீதி)
0217912997, 0775397035

அடுத்த பிரிவு ஆரம்பம்:-10.03.2010
Grammar. Speaking & Pronunciations..Reading. .Listening......Writing... ... Vocabulary.....etc
Free Audio CD & Handouts
அனுபவமிக்க திறமைவாய்ந்த ஆசிரியர்களால் ஆங்கிலத்தில் சரளமாக பேச எழுத வாசிக்க பயிற்சி வழங்கப்படும்
SPOKEN ENGLISH 2-3 Months
DIPLOMA IN ENGLISH
ISO Certified Certificate வழங்கப்படும் T.P: 0776642432
பதிவுகளை முந்திக்கொள்ளுங்கள். Tel:-0774032051
INTERNATIONAL CITY COLLEGE PVT LTD
NO 21, Stanly Road (People bank Lane), JaffnaTel: 0214 901 464
Email: www.icclanka@gmail.com Web: www.icclanka.com.
Impossible is nothing Experience the different

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை புவனேஸ்வரி



பருத்தித்துறை, 2ஆம் குறுக்குத்தெருவைப் பிறப்பிடமாகவும் இல.14, 1ஆம் குறுக்குத்தெரு, தெங்க நகர், திருச்சியை தற்காலிகவதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை புவனேஸ்வரி 03.03.2010 புதன்கிழமை காலமானார்.

இவர் பருத்தித்துறையைச் சேர்ந்த இளைய தம்பி-மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகளும் கொக்குவிலைச் சேர்ந்த முருகேசு செல்லத்துரையின் அன்பு மனைவியும் புனிதாம்பிகை (திருச்சி), கனகலிங்கம் (சுவிஸ்), பாலசுப்பிரமணியம் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் நவரத்தினசாமி (இத்தாலி), ஆனந்தராணி, நந்தினி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சுமன் (திருச்சி), மதன் (திருச்சி), சுஜித்தா, சோபிகா (திருச்சி) ஆகியோரின் அம்மம்மாவும் ருஷா (சுவிஸ்), கோபிகன், கோகுல் (சுவிஸ்) ஆகியோரின் அப்பம்மாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.03.2010) ஞாயிற்றுக்கிழமை திருச்சியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஓயாமாசி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறீர்கள்.

நவரத்தினசாமி புனிதாம்பிகை (மகள்)
J.சுமன் (பேரன்), J.மதன் (பேரன்).

தொ.பே: 4312351967

SAMSUNG

விற்பனைப் பிரதிநிதிக்கான பதவி வெற்றிடம

அலுவலக தன்னியக்க உபகரணங்கள் மற்றும் அவை தொடர்பான சேவைகளை வழங்குவதில் இலங்கையின் முன்னோடியான ஜோண் கீல்ஸ் ஒபிஸ் ஓட்டொமேஷன் (பிறைவேட்) லிமிட்டட் தனது செயற்பாடுகளைத் துரிதமாக விரிவுபடுத்துவதால், மேலும் பல விற்பனைப் பிரதிநிதிகளை நியமிக்க இருக்கிறது.

தெரிவு செய்யப்படும் விற்பனைப் பிரதிநிதிகள், உலகப் புகழ்பெற்ற சம்சுங் உற்பத்தியான லேஸர் அச்சு இயந்திரம், பல்தொழிற்பாட்டு பிரதியெடுக்கும் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் விற்பனையை ஊக்குவித்தல், சந்தைப்படுத்துதல், உயர்ந்த மட்டத்திலான வாடிக்கையாளர் சேவைகளை வழங்குதல் ஆகிய துறைகளில் திறமையாகச் செயற்படக்கூடியவர்களாக இருக்க வேண்டும். அத்துடன், சம்சுங் உற்பத்திகளின் விற்பனையை ஊக்குவிப்பதற்கு ஜோண் கீல்ஸ் ஒபிஸ் ஓட்டொமேஷன் நிறுவனத்தின் பிரதேச் ஊக்குவிப்பு அலுவலர்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். பாரிய இயந்திர சாதனங்கள், நுட்பமான பாவனை உபகரணங்கள், புரொஜெக்டர்கள், படச் சட்டங்கள், உல்லாசப் பயண ஹொட்டேல்களுக்குத் தேவைப்படும் தொலைக்காட்சி போன்ற சாதனங்கள் என்பவற்றின் விற்பனையும் விரைவில் ஆரம்பிக்கப்பட இருப்பதால், எமது விற்பனைப் பிரதிநிதிகளுக்கு சிறந்த வியாபார வாய்ப்புக்கள் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

பின்வரும் பிரதேசங்களில் விற்பனைப் பிரதிநிதிகள் தேவைப்படுகிறார்கள்:

1. பதுளை
2. மட்டக்களப்பு
3. கொழும்பு
4. காலி
5. கம்பஹா
6. ஹம்பாந்தோட்டை
7. யாழ்ப்பாணம்
8. களுத்துறை
9. கண்டி
10. வவுனியா

நீங்கள் எமது விற்பனைப் பிரதிநிதிகள் வலையமைப்பில் இணைந்துகொள்ள விரும்பினால், அடுத்த 7 தினங்களுக்குள் www.jkoa.com. என்ற இணையத்தளத்தில் பிரவேசித்து, அவசியமான தகவல்களைப் பெற்றுக்கொள்ளவும்.

077-3613263 என்ற தொலைபேசி இலக்கத்தில் ஏற்பாடுகள் மற்றும் ஊக்குவிப்புப் பிரிவின் பிரதம அதிகாரி பிரதீப் டயஸ் அவர்களுடன் தொடர்புகொண்டும் மேலதிக விபரங்களை அறியலாம்.

ஜோண் கீல்ஸ் ஒபிஸ் ஓட்டொமேஷன் (பிறைவேட்) லிமிட்டட்
320/1, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 2313000, 011 2431576, 011 4702611 ; பெக்ஸ்: 011 2431745
இணையத்தளம்: www.jkoa.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தேர்தல் வன்செயல் நச்சுமரம்...!

நாடாளுமன்றத்துக்கு அங்கத்தவர்களைத் தெரிவு செய்வதற்கான பொதுத் தேர்தலுக்கு வேட்புமனுக்களைத் தாக்கல் செய்வதற்கான இறுதி நாள் கடந்த மாதம் 26ஆம் திகதி ஆகும். அன்றிலிருந்து கடந்த வெள்ளிக்கிழமை வரை - அதாவது ஒரு வார காலத்தில் - பெரியளவிலான பதினாறு தேர்தல் வன்செயல்கள் நடைபெற்றிருக்கின்றன.

இந்தப் பொதுத் தேர்தலில் எத்துணை வன்முறைகள் நடைபெறப்போகின்றனவோ - எண்ணுக்கணக்குக்கு அப்பாற்பட்டு விஞ்சிவிடுமோ - என்ற அச்சத்தை இந்த ஆரம்பக் கணக்கு உண்டாக்குகிறது.

ஜனவரி மாதக் கடைசியில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில், முன்னர் எப்போதும் இல்லாதவாறு வன்செயல்கள் உச்சத்துக்கு வளர்ந்து உயர்ந்திருந்தன. தேர்தல் நெருங்கி இறுதி நாளை அண்மித்த போதும் தேர்தல் முடிவுற்ற பின்னரும் என்று மொத்தம் 757இற்கும் மேற்பட்ட வன்செயல்கள் நடைபெற்றதாக தேர்தல் கண்காணிப்புக் குழுக்கள் விவரம் வெளியிட்டிருந்தன.

ஆனால் இம்முறை, தேர்தல் வன்செயல்கள் கடந்த தேர்தலின் எல்லையையும் - உயரத்தையும் தாண்டிச் செல்லும் என்பதற்கான சமிக்ஞை இப்போதே காட்டப்பட்டிருக்கிறது.

தேர்தலில் தமது பக்கம் - தாம் சார்ந்துள்ள கட்சி - வெற்றிபெற்றுவிடவேண்டும். தாம் ஆசனத்தைப் பெற வேண்டும் என்ற அரசியல் வெறியும் அதிகார மோகமுமே தேர்தல் கால வன்செயல்களுக்கு வித்தாகவும் உரமாகவும் அமைக்கின்றன.

வாக்குரிமை என்பது ஒவ்வொரு வாக்காளனும் தனது தெரிவுக்கும் விருப்பத்துக்கும் ஏற்றாற்போன்று அதனைப் பயன்படுத்துதல் என்ற சுதந்திரச் செயற்பாட்டை, அடித்தளத்தைக் கொண்டது. அந்தக் கோட்பாட்டைத் தகர்த்து எறியும் விதத்தில் அரசியல்வாதிகள் தமது அடாவடித்தனங்களைக் கட்டவிழ்த்து, தாமே வெற்றிபெறவேண்டும் என்று செயற்படுவது இந்த நாட்டில் கடந்த சில வருடங்களாகச் சர்வ சாதாரணமாகிவிட்டது.

தேர்தல் என்பது வன்செயல்களோடு சேர்ந்தது, ஒன்றித்தது என்ற நிலை இங்கு வழமையாகிவிட்டது. அதனையே வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட சிலநாள்காளில் வன்செயல்களின் பெருக்கம் எடுத்தியம்புகிறது!

அனேகமாகத் தேர்தல் கால மோதல்களும் வன்முறைகளும் போட்டியிடும் எதிரணி கட்சிகளுக்கு இடையே நடைபெறுவதுதான் வழக்கமாக இதுவரை இருந்த வந்தது. இம்முறை ஒரே கட்சியை, அணியைச் சேர்ந்த வேட்பாளர்கள் தாமே எம்.பி.ஆசனத்தில் அமர வேண்டும் என்ற அதீத ஆசையினால், தமக்குள் மோதிக் கொண்டுள்ளதாக தேர்தல் கண்காணிப்புக் குழுக்கள் கவலையுடன் சுட்டிக்காட்டுகின்றன.

ஒரேகொள்கை, கோட்பாடு, செயல்முறைகளைக் கொண்ட கட்சிகாரர் தமக்குள்ளே மோதிக்கொள்வதானது எதிரும் புதிருமென கட்சிகளின் வேட்பாளர்கள் மோதிக்கொள்வது மற்றும் வன்செயல்களில் ஈடுபடுவதை விடவும் பெரும் ஆபத்தான நிலையை உண்டாக்கும். ஜனநாயகத்தை குழிதோண்டிப் புதைக்கவே வழிசெய்யும். எதேச்சாதிகாரப் போக்கை விதைத்து, சர்வதிகாரத்துக்கு வழி திறக்கும்.

தேர்தல் தொகுதிகளின்அடிப்படையில் தேர்தலை நடத்தி மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வது என்ற முந்திய நடைமுறைக்கு மாற்றீடாகக் கொண்டுவரப்பட்டுள்ள இப்போதைய நடைமுறை, பொருத்தமற்றது, வன்செயல்களுக்கு வழிகோலுவது என்ற எதிர்மறை நிலையைத் தோற்றுவித்துள்ளது, அது மக்களாட்சி முறைக்கு பாதகமானது என்ற கருத்துக்கு இட்டுச்செல்வதாகவும் கொள்ளலாம். இது பிள்ளையார் பிடிக்கப் போய் பெருங்குரங்கான கதையாகிவிட்டதோ என்று சந்தேகிக்க வைக்கிறது

எவ்வாறிருப்பினும் -

மக்கள் ஆட்சி என்ற ஆணிவேரை அடியோடு பிடுங்கி எறிந்து துவம்சம் செய்துவிடவல்ல தேர்தல் வன்செயல்களை தடுப்பதும் அவற்றில் ஈடுபடுவோரை பாகுபாடு, தயவு தாட்சண்யம் இன்றித் தண்டிப்பதும் பக்கச் சார்பின்றி தடுப்பு நடவடிக்கைகளை எடுப்பதும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் பெரும் பொறுப்புள்ள பொலிஸாரையும் நீதிமன்றங்களையும் சார்ந்தவை.

நச்சு மரத்தை முளையிலேயே கிள்ளி எறியத் தவறினால் மக்கள் ஆட்சி மல்லாக்காகப் படுக்க நேரிடும். ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களே தமக்குள் மோதிக்கொள்வது என்பது ஜனநாயகத்தை கேலிக்குரியதாக்கிவிடும். நீதியும் நியாயமும் நிலைநாட்டப்படுவதாகக் கூறிக்கொள்ளும் ஆட்சியாளர்கள் இவற்றைத் தடுக்க ஆரம்பத்திலேயே அக்கறை காட்டுவார்களா?

# வடமராட்சிக் கடலில் இந்திய இழுவைப் படகுகளால் உள்ளூர் மீனவர்களின் மீன்பிடிவலைகள் நாசம்

## பல கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக முறைப்பாடு

வடமராட்சி,மார்ச்7

வடமராட்சி வடக்கு கடற் பகுதியில் இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகள் ஆக்கிரமித்து உள்ளூர் மீனவர்களின் கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகளை அறுத்துச் செல்கின்றன.

இதனால் வடமராட்சிப் பிரதேச மீனவர்களும் இடம்பெயர்ந்து வடமராட்சியில் தொழில்புரியும் மயிலிட்டித்துறை மீனவர்களும் பலத்த நட்டங்களை எதிர்கொண்டுள்ளதுடன் மீன்பிடிக்க முடியாத நிலையும் இருந்து வருவதாக வலிகாமம் வடக்கு கடற்றொழிலாளர் சங்கச் செயலாளர் அ.யோகராசா தெரிவித்துள்ளார்.

கடந்த சில வாரங்களாக இந்திய மீனவர்கள் இழுவைப் படகுகள் மூலம் வடமராட்சி கடலில் கரையிலிருந்து மிக அண்மித்ததாக 5 கிலோ மீற்றர் தூரத்தில் வந்து மீன்பிடித்துச் செல்கின்றனர்.

வடமராட்சி வடக்கு, மயிலிட்டித்துறை மீனவர்கள் மீன்பிடிப்பதற்காக இரவிரவாக கடலில் வலைகளை வீசிவிட்டுக் காத்திருக்க இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகள் அங்கு வந்து அவற்றை அறுத்துச் சிதைத்துச் செல்கின்றன. இதனால் இப்பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் தொழிலை இழப்பதுடன் தொழில் உபகரணமான மீன்பிடி வலைகளையும் இழந்து விடுகின்றனர். மீண்டும் புதிதாக மீன்பிடி வலைகளை வாங்கிக்கொள்ள கஷ்டமுறுகின்றனர்.

கடலில் மீன்பிடித் தொழிலை சுமுகமாக மேற்கொள்ளக்கூடிய இக்காலகட்டத்தில் இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகளின் தொல்லையால் தொழிலை இழக்க வேண்டிய அபாய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் ஏனைய உயர் அதிகாரிகளினதும் கவனத்திற்கு வலி.வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாசச் செயலாளர் அ.யோகராசா கொண்டு வந்துள்ளார். (05-236)

# மக்கள் வங்கியின் அச்சுவேலிக் கிளையிலும் இணுவில், உரும்பிராயிலும் 'ஒன்லைன்' சேவை

## நாளை காலை ஆரம்ப நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மார்ச்7

மக்கள் வங்கியின் கன்னாதிட்டிக் கிளையின் இணுவில் சேவை நிலையம், அச்சுவேலிக் கிளை, பிரதான வீதிக் கிளையின் உரும்பிராய் சேவை நிலையம் ஆகியன வலைப் பின்னலுடன் 'ஒன்லைனில்' நாளை திங்கட்கிழமை இணையவிருக்கின்றன.

இணுவில் சேவை நிலையத்தில் காலை 8.30 மணிக்கு நடைபெறும் நிகழ்வில் மானிப்பாய் ப.நோ.கூ.சங்கத்தின் தலைவர் ஆர்.வன்னியசிங்கம் பிரதம விருந்தினராகவும் அச்சுவேலிக் கிளையில் காலை 9 மணிக்கு நடைபெறும் நிகழ்வில் கோப்பாய் பிரதேச செயலாளர் சி.ஏ.மோகன்றாஸ் பிரதம விருந்தினராகவும், உரும்பிராய் சேவை நிலையத்தில் காலை 9.30 மணிக்கு நடைபெறும் நிகழ்வில் யாழ்.சென். பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் வண.எம். ஜெயரோ செல்வநாயகம் பிரதம விருந்தினராகவும் கலந்துகொண்டு வலைப்பின்னலை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைப்பார்.

இந்த நிகழ்வில் வடவலய உதவிப் பொதுமுகாமையாளர் ரி.கே.ஆனந்தராஜாவும் பிராந்திய முகாமையாளர் எஸ். பத்மநாதனும் உதவிப் பிராந்திய முகாமையாளர் ஹென்றியும் கலந்துகொள்வர். (ஒ-1)



காரைநகர் மணற்காடு முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவிற்கு தென்னிலங்கையில் இருந்து யானை ஒன்று கொண்டுவரப்பட்டுள்ளது.

நேற்று சனிக்கிழமை ஆலயத்தில் இடம்பெற்ற 6ஆம் திருவிழா உற்சவத்தில் 45 வயதுடைய கதிநாயன் என்ற யானை பவனி வந்தது. இந்த யானையை மக்கள் பார்வையிடுவதை படங்களில் காணலாம். *(படம்: தர்னிகா)*

# கரவெட்டியில் 834 குடும்பங்களுக்கு நாளை 25ஆயிரம் ரூபா கொடுப்பனவுக் கடிதங்கள்

யாழ்ப்பாணம்,மார்ச்6

குடாநாட்டில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு 'நிகொட்' நிறுவனத்தால் வழங்கப்பட்டு வரும் 25ஆயிரம் ரூபா வாழ்வாதாரக் கொடுப்பனவுக்கான அனுமதிக் கடிதங்கள் கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 834 பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளன.

நாளை திங்கட்கிழமை காலை 9 மணி முதல் இக்கடிதங்கள் குறித்த இடங்களில் வைத்து வழங்கப்படும் என யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ் அறிவித்துள்ளார்.

தேசிய அடையாள அட்டை அல்லது பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் குடும்பப் பதிவு அட்டை, வங்கி வைப்புப் புத்தகம் என்பவற்றுடன் சென்று அனுமதிக் கடிதங்களைப் பெற்றுக் கொள்ளுமாறும் அரச அதிபர் குறிப்பிட்டுள்ளார். (ஒ-6)

# குருநகர், பாஷையூர் இறங்குதுறைகளிலிருந்து பாலைதீவு தேவாலயத்துக்கு யாத்திரிகர்கள்

## நேற்றுக்காலை முதல் மாலை வரை திரண்டு சென்றனர்

வண்ணை,மார்ச்7

வரலாற்றுப் புகழ்பெற்ற பாலைதீவு, புனித அந்தோனியார் தேவாலய உற்சவத்திற்காக நேற்று குருநகர் மற்றும் பாஷையூர்இறங்குதுறைகள் ஊடாக காலை முதல் மாலை வரை திரளான யாத்திரிகர்கள் சென்றனர்.

இதேவேளை, வன்னிப் பிரதேசங்களில் மீளக்குடிமர்ந்துள்ள மக்களும் நூற்றுக்கணக்கில் பாலாவி, பள்ளிக்குடா கரையோரங்களால் பாலைதீவுக்கு வருகை தந்திருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இன்று ஞாயிற்றுக்கிழமை பாலைதீவு, புனித அந்தோனியார் தேவாலய திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு திருச்சொரூப பவனி நடைபெறும்.

இன்று மாலை 6 மணிக்கு முன்பாக அனைத்து யாத்திரிகர்களும் அங்கிருந்து புறப்பட்டுவிடவேண்டுமென படைத் தரப்பால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. நேற்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணிவரை இங்கிருந்து யாத்திரிகர்கள் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர். (ஒ-160)

## நாளை

| | | |
|---|---|---|
| மாசி 24 | 08.03.2010 திங்கட்கிழமை | |
| திதி | : அட்டமி | பி.ப.02.49 வரை |
| நட்சத்திரம் | : கேட்டை | பி.ப.03.20 வரை |
| சுபநேரம் | : 12.24-01.54 வரை | |
| ராகுகாலம் | : 07.54-09.25 வரை | |

# ஆங்கில தினமும் பரிசளிப்பு நிகழ்வும்

கொக்குவில் வளர்மதி நிறைவாழ்வகமும் முன்னேற்றக் கழகத்தினதும் ஆங்கில தினமும் பரிசளிப்பு தின நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு வளர்மதி வேலாயுதம் பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாணம் இந்து, கொக்குவில் இந்துக் கல்லூரிக ளின் முன்னாள் அதிபர் ஏ.பஞ்சலிங்கம் தலையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் எஸ்.பத்மநாதனும் அவருடைய துணைவியாரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினராக பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் ஆங்கிலப்பிரிவின் தலைவர் திருமதி இந்திரமதி இராமச்சந்திரா கலந்து கொள்ளவுள்ளார். (50-6)

# வேலையற்ற பட்டதாரிகளின் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 7

யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளுக்கான கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு 'பீ கொன்' கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாக வெளிவரும் தகவல்கள் தொடர்பாக விளக்கமளிக்கும் வகையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது என சங்கத்தின் நிர்வாகக் குழுவினர் அறிவித்துள்ளனர். (ஒ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்டத்தில் இதுவரை 78,211 பேர் மீள்குடியேற்றம்

## இந்தப் பணி தொடரும் என்கின்றார் அரச அபதிர்

யாழ்ப்பாணம், மார்ச் 7

யாழ்.மாவட்டத்தில் 11பிரதேச செயலகங்களைச் சேர்ந்த 901கிராமங்களில் 26,305குடும்பங்களைச் சேர்ந்த 78,211 பேரை மீள்குடியமர்த்தியுள்ளோம். மேலும் பலரை மீளக்குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். அரச அதிபர் கே.கணேஸ் இத்தகவலைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியேற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு யாழ்மாவட்டத்தில் உள்ள 11பிரதேச செயலர் பிரிவுகளில் மற்றும் 04உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளையும் சேர்ந்த 404கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கிய 901 கிராமங்களில் மீள்குடியேற்றம் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் 26,305குடும்பங்களைச் சேர்ந்த 78,211பேர் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் யாழ்.மாவட்டத்தில் உயர் பாதுகாப்பு வலயத்தில் 550குடும்பங்களைச் சேர்ந்த 1,861பேரும் யாழ்மாவட்டத்திற்குள் இடம்பெயர்ந்த 848குடும்பங்களைச் சேர்ந்த 2,720பேரும் யாழ்மாவட்ட நலன்புரி நிலையங்களில் இருந்த 2,949 குடும்பங்களை சேர்ந்த 8,691பேரும் வெளிமாவட்ட நலன்புரி நிலையங்களில் இருந்து மீள்குடியேற்றம் செய்யப்பட்ட 21,958குடும்பங்களைச் சேர்ந்த 64,938 பேரும் இதுவரை மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர். மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள மக்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன - என்றார். (ஓ-1)

---

### இந்தியக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களினால் பிடிக்கப்பட்ட 700கிலோ மீன்களும் பறிமுதல் செய்யப்பட்டு, ஏலம் விடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் மண்டபம் காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ஓ-6)

---

### போர்க்குற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலாளர் நாயகத்தின் சிரேஷ்ட அரசியல் ஆலோசகர் லைன் பஸ்கோ இலங்கைக்கு செல்லமாட்டார் என்றும் ஜெராட் ஆரூட் கூறினார்.

மஹிந்த ராஜபக்ஷ நிர்வாகம் இராணுவ நடவடிக்கை மூலம் பயங்கரவாதத்தை அழித்ததை பிரான்ஸ் வரவேற்கிறது என் றும் அவர் சொன்னார்.

லைன் பஸ்கோ பெப்ரவரி மாதத்தில் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ள முன்னர் திட்டமிடப்பட்டிருந்ததாக ஐ.நா. வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-1)


அழகிய பரிசில்கள்

யாழ்.மகளிருக்கு ஓர் வரப்பிரசாதம்

முற்றிலும் இலவசம்

★ இலவச பேசியல் கருத்தரங்கு.
★ இலவசமாக விளீச்சிங் பேசியல் செய்து காட்டப்படும்.
★ அழகு சாதனப் பொருள்களை கொள்வனவு செய்பவர்களுக்கு அழகிய பரிசில்கள்.
★ இலவச பயிற்சி சான்றிதழ்.
★ பகுதிநேர வேலை வாய்ப்பு (பெறுமதியான பரிசில்கள்+அதி கூடிய வருமானம்)
★ உடல் நிறை குறைக்கும் மெஷின் கொள்வனவு செய்யலாம்.

Reg.No: 16168

அட்சயா,

461, நாவலர் றோட், அத்தியடிச்சந்தி, யாழ்ப்பாணம். (அரவிந் ஸ்ருடியோவிற்கு அருகில்) (95539)



சொகுசு கார் சேவை

திருமண சேவை மற்றும்

இலங்கையின் எந்த பாகத்திற்கும் பாதுகாப்பாக சென்றுவருவதற்கு

முற்றிலும் குளிரூட்டப்பட்ட (Full A/C) சொகுசு கார் சேவை.



தொடர்புகளிற்கு: 0776156034

இல: டி.ஆ.கோயில்வீதி, (புனிசெல் முன்பாக) யாழ்ப்பாணம்.

கம்பனி தேவைகளுக்கு சாரதியுடன் மாதாந்த அடிப்படையில் A/C கார்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.


### கூட்டமைப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் செயலர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

மக்கள் எதிர்நோக்கும் பலவகைப்பட்ட பிரச்சினைகள் தொடர்பான விடயங்கள் இந்த விஞ்ஞாபனத்தில் இடம்பெறும் என்று அவர் கூறினார்.

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக கூட்டமைப்பு முன் வைக்கவுள்ள தீர்வுத்திட்டம் விஞ்ஞாபனத்தில் இடம்பெறமாட்டாது என்றும் அந்த விவரம் தனியாக வெளியிடப்படும் என்றும் அவர் மேலும் சொன்னார். (ஓ-1)

---

### மீள்குடியேற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதித் தேர்தலுக்கு பின்னர் இலங்கையில் தமிழர்களின் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

இன்னமும் 90ஆயிரம் பேர் இடம்பெயர்ந்தோர் முகாம்களில் உள்ளனர். அவர்களின் நடமாட்டங்களில் இருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன. இது வரவேற்கத்தக்கது - என்றார் அவர். (ஓ-1)

---

### ஐ.நா.செயலருக்கு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வியாழக்கிழமை மாலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் தொலைபேசியில் உரையாடியபோது -

மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இலங்கை பொறுப்புக் கூறவேண்டிய விவகாரம் குறித்து முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து தமக்கு உயர் மட்ட நிபுணர் குழு ஆலோசனை வழங்க உள்ளதாக இலங்கை ஜனாதிபதியிடம் தெளிவாகக் கூறினார் என்று அவரின் பேச்சாளர் மார்ட்டின் நேசிற்றி சொன்னார்.

ஐ.நாவின் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை, இலங்கை தொடர்ந்தும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு வருவதாகவும் அவை குறித்து அந்நாட்டு அரசு விசாரிக்கவேண்டும் என்றும் ஐ.நா. மனித உரிமைகள் பிரிவின் வருடாந்த அமர்வில் வலியுறுத்தியதைத் தொடர்ந்தே, செயலாளர் நாயகம் பான் கி மூன் தமது புதிய முடிவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குத் தெரியப்படுத்தினார். (அ)


வீடு விற்பனைக்கு

திருநெல்வேலிச் சந்திக்கும் பரமேஸ்வரா சந்திக்கும் இடையில் Front Laneஇல் 50m தூரத்தில் 2½ பரப்பில் அமைந்துள்ள புதிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0770222272 158/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.



பிரத்தியேக வகுப்பு Physics

அனுபவம் மிகுந்த ஆசிரியரினால் தனியாகவோ/ குழுவாகவோ வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். தொடர்பு: 0773405973


### பிரபாகரனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்திருந்தார். சுகவீனமுற்றிருந்த பார்வதி அம்மையார் சிறிது காலம் அங்கு தங்கியிருந்தார்.

யாழ்.மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தால் அவர் கொழும்புக்கு அழைத்துவரப்பட்டு பம்பலப்பிட்டியில் உள்ள விடுதி ஒன்றில் தங்க வைக்கப்பட்டிருந்தார்.

சிவாஜிலிங்கம் செய்த பயண ஒழுங்குகளை அடுத்து நேற்று கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து அவர் வெளிநாடு ஒன்றுக்கு புறப்பட்டுச் சென்றார்.

பார்வதி அம்மையாரின் பிள்ளைகள் இந்தியா, டென்மார்க் மற்றும் கனடாவில் வசித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-1)

---

### மனித உரிமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

**ஆயுதப்போராட்டத்தால் பெரும் மனித அனர்த்தம் நடைபெற்று வரும் நாடுகள் மீது விசாரணை இல்லை**

மிகப்பெரியளவில் ஆயுதப் போராட்டம் தொடர்ந்து நடைபெறும் நாடுகள் மீதும் இராணுவ நடவடிக்கையினால் பெரும் எண்ணிக்கையான மனித உயிர்கள் காவு கொள்ளப்படும் மனித அனர்த்தம் நடைபெறும் நாடுகள் மீதும் எத்தகைய விசாரணைகளும் நடத்தப்படவில்லை. ஈவிரக்கமற்ற பயங்கரவாதக் குழு ஒன்றுடன் போராடி 9 மாதங்களுக்கு முன்னர் இலங்கை அரசு அதனை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளது. அதன் பின்னர் தேசிய நல்லிணக்கத்தை உருவாக்குவதற்கு எனது அரசு ஈடுபட்டுள்ளது.

ஆகவே நாடளாவிய ரீதியில் மிக விரையில் நடைபெறப் போகும் பொதுத் தேர்தலில் தலையிடும் ஒரு நட வடிக்கையாகவே நிபுணர் குழு அமைக்கும் உத்தேசத்தை நாம் பார்க்கவேண்டியுள்ளது.

வடக்கு, கிழக்கைச் சேர்ந்த மக்கள் இதுவரை காலமும் தங்கள் வாக்குரிமையை பயன்படுத்த இருந்த தடையை நீக்கி சுதந்திரமாக வாக்களிக்க அரசு வகைசெய்துள்ளது.

ஜனநாயகத்தின் மதிப்பார்ந்த உன்னதமான வாக்களிக்கும் உரிமையை நாட்டு மக்கள் எல்லோருக்கும் நாம் வழங்கியுள்ள இவ்வேளையில் மனித உரிமை மீறல் என்ற குற்றச்சாட்டை தமிழீழ விடுதலைப் புலிகள் ஆதரவாளர்களும் சில அரசசார்பற்ற நிறுவனங்களுமே கூறியுள்ளன.

ஆகவே மனித உரிமை மீறல் என்ற பெயரில் இலங்கை மீது விசாரணை எதுவும் தேவைப்படவில்லை - என்று தொலை பேசி உரையாடலில் ஐ.நா.பொதுச் செயலாளரிடம் ஜனாதிபதி கூறியதாக ஜனாதிபதி செயலகம் நேற்று பிற்பகல் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-6)

## மரண அறிவித்தல்

### திருமதி குமாரசுவாமி இராசமணி

பருத்தித்துறை, புலோலி மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி குமாரசுவாமி இராசமணி நேற்று (06.03.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் குமாரசுவாமியின் அன்பு மனைவியும், பாக்கியலக்சுமி (ஆசிரியர், சென்.அன்ரனிஸ் பெண்கள் பாடசாலை, கொள்ளுப்பிட்டி), வர்ணகுலராசா (ஆசிரியர், சாவகச்சேரி இந்துக்கல்லூரி), இந்திரகுமாரி, கருணாநிதி, பூலோகநாயகி ஆகியோரின் தாயாரும், பாலநந்தினியின் (ஆசிரியர், கோண்டாவில் இந்து ம.வி) மாமியும், கார்திகாயினி, சிவகரன், கீர்த்தனா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.03.2010) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் பிற்பகல் 2மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.பே.இல: 0779122739

தகவல்: கு.வர்ணகுலராசா (மகன்).

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சண்முகம் மீனாட்சிப்பிள்ளை

சுழிபுரம் மேற்கு, ஆலமோடையைச் சேர்ந்த திருமதி சண்முகம் மீனாட்சிப்பிள்ளை நேற்று (06.03.2010) சனிக்கிழமை மாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கங்காணி சண்முகத்தின் அன்பு மனைவியும், யோகேஸ்வரன், நந்திஜா திலகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுழிபுரம் மேற்கு.

தகவல்: குடும்பத்தினர்.

### கணபதிப்பிள்ளை கிருஸ்ணசாமி (மாணிக்கம்)



மீசாலையைப் பிறப்பிடமாகவும் கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கிருஸ்ணசாமி நேற்று (06.03.2010) சனிக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லையா - சின்னத்தங்கம் தம்பதியினரின் அன்பு மருமகனும் தனலட்சுமியின் (மஞ்சு) அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிவானந்தி மற்றும் தயாளன் (குமரன்), மீராயினி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்புத்துறையில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (07.03.2010) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.40, நெடுங்குளம் வீதி, கொழும்புத்துறை.

தகவல்: மனைவி, பிள்ளைகள்.


தமிழர்களின் உரிமைகளுக்காக கர்மவீரர் அமரர் மகேஸ்வரன் வழியில்
அஞ்சாத நெஞ்சத்துடன் போராட ஐ.தே.கட்சியின் வேட்பாளராக
தியாகராஜா துவாரகேஸ்வரன்



திருமதி விஜயகலா மகேஸ்வரன்

8 X





திரு தியாகராஜா துவாரகேஸ்வரன்

1 X


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.03.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org